T. 1674

ஸ்ரீ

தக்ஷிணராக ரத்நாகரம்

அல்லது

அநுபவராக லக்ஷணங்கள்

ஆக்கியோன்:
"வர்ணமாலிகை", "தாளதீபிகை",
"ராகப்ரஸ்தார கணித முறைகள்"
இவைகளை எழுதிய
கி. ராமசந்திரன், எம். எ., எல். டி.

சென்னை:
வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட்.
All Rights Reserved.
1949.

NOTE

The Publishers strictly reserve all rights with regard to the adaptation, reproduction and translation of matter, (either in whole or in parts) contained in this book.

V. RAMASWAMY SASTRULU & SONS.

AUTHOR'S INTRODUCTION

When my 'Varnamalika' was published in 1932, many Vidvans impressed on me the need for a separate volume dealing with the characteristics of all the *extant* ragas or recognised melody moulds that obtain in Carnatic music. Accordingly the first draft of this work was completed about a decade ago, but circumstances did not permit the author to immediately publish the same. Any way, after the recent publication of the author's 'Mathematical basis of Raga Prastharas' it was felt that the present work could no longer be delayed, especially as this work is a full illustration of the principles indicated in the 'Mathematical Basis of Raga Prastharas'.

This book is primarily intended to be a text book for the scholar and also a consulting book for the professional. It contains full notes on all the ragas for which some kind of example could be found, either in the form of Lakshanageetha or varna or keerthana. Adequate guidance is given for the practical handling of the ragas.

The student who has completed his course and the professional who wants to consult this work would do well to go through the author's 'Thala Deepika', 'The Mathematical Principles of Raga Prastharas', and also other books dealing with the problem of srutis: and, last but not least, Pandit Subrahmania Sastry's translation of Venkatamaki's "Chathurdandi Prakasika".

The ordinary text books mention about 1072 Ragas, that is, the 72 karthas, or main modes, and 1000 janya ragas. Out of these only about 400 and odd are mentioned in this book. Naturally the question will easily arise, "What about the remaining 600 and odd?".

The answer is not far to seek. It can be easily recalled that that great composer, Thyagayya actually composed about 10,000 pieces, and therefore, he must have done full justice to almost all the 1000 and odd janya ragas. Of this mastercomposer's compositions only about 500 are said to be *extant*; of the remaining 600, only about 400 keerthanas are available, and, even among these, a good many are plagiarizms. A good many janya ragas are used by other great composers, but it has not been possible for the author to find useful evidence for these 600 and odd ragas to justify any commentary on them. However, the ascent and the descent of these Ragas are given in the last chapter of the book. It is left to the future research workers and Vidvans either to dig up the lost treasures or create afresh these ragas by their ability. Handsome is what handsome does: in like manner it depends on the singer or player to bring these 600 ragas into the lime light. This book, it is hoped, contains enough guidance to inspire the professional and the enthusiastic student.

My heartfelt thanks are due to Sri. V, Venkateswarulu Sastrulu for his untiring enthusiasm and zeal in publishing this book. But for his patronage many valuable works would have fallen into oblivion. At one time it was Royal patronage that kept classics alive; now it is left to cultured publishers like Mr. Sastrulu to regenerate valuable works.

TINDIVANAM
5-5-49.

K. RAMACHANDRAN.

உ

முருகன் துணை.

பாராட்டு

மன்னிய வளமலி மன்னார்குடியில்
பன்மையை ஒருமையாப் பண்ணும் இசையில்
பேர்பெற்று வந்த பெருங்குல மணியாம்
போளகம் சிதம்பரப் புலவர் மரபில்
தோன்றிய இராம சந்திரத் தோன்றல்
ஆங்கிலம் ஆரியம் செந்தமிழ் அரும்பண்
ஒருங்கே கற்ற ஒருவன் யாத்த
தட்சிண ராக ரத்ந கரமெனும்
அனுபவ ராக லட்சண நூலைப்
பயில்வார் பண்ணொடு பண்பறிந் திசைக்க
வல்லுந ராவர் வாச்சியப் புலமையும்
வகிக்கும் திறத்தவ ராவர் வையகத்
தென்பதென் திடமனக் கருத்தா மிந்த
நூலா சிரியரும் நூலும் பாரத
நாட்டின ராதரம் நண்ணு
வேண்டுவன் வேலோன் திருவடி பணிந்தே.

வித்வான் திரு. ஆ. பழநிஸ்வாமி,
சிவாசாரியார்.

ஸ்ரீபாணி பாத்ர தேசிக ராதீன மடம்,
திருக்கோவலூர்.

ஆக்கியோன் முன்னுரை

எனது "வர்ணமாலிகை" அச்சேற்றப்படும் பொழுது அதைக்கண்ணுற்ற காலஞ் சென்ற சங்கீத ஆராய்ச்சியாளர் ஸ்ரீமான் C. R. சீனிவாச ஐயங்கார் அவர்கள் அநுபவத்தி லுள்ள ஏனைய ராகங்கள் பலவற்றுக்கும் குறிப்புகள் எழுதித் தனிப்புத்தகமாகப் பதிப்பிக்க வேண்டுமென எம்மை விரும்பிக் கேட்டுக் கொண்டார். அன்னவரது விருப்பத்தை நிறைவேற்ற அநேக இடையூறுகளை மேற்கொள்ள நேர்ந்தமையின் காலதாமதமாயிற்று.

1. சங்கீத நூல்களில் 72 மேளகர்த்தாக்களுக்குச் சுமார் 1000 ஜன்னிய ராகங்கள் பேர்களுடன் கூறப்பட்டுள்ளன. ஆகமொத்தம் இந்த 1072 ராகங்களில் சுமார் 425 ராகங்கள் இந்நூலில் இடம் பெறுகின்றன.

2. இந்நூலுக்கு "அநுபவராக லக்ஷணங்கள்" என்ற பெயர் வழங்கப்பட்ட போதிலும் இவற்றில் சுமார் 100 ராகங்கள் தவிர ஏனைய 325 ராகங்களும், சகல ராக லக்ஷணங்கள் பொருந்தி யிருந்தும், அதிகமாக சாதகம் செய்யப்படுவதில்லை. தேர்ச்சி பெற்ற வித்வான்கள் இவற்றை வெகு ரஞ்சகமாக வாசிக்கவும், பாடவுமியலும். இவற்றைப் பிரசித்தி பெறச் செய்வது இவர்கள் பேரில் விழுந்த கடமையாகும்.

3. ஜன்னிய ராகங்களனைத்தையும் அபூர்வ ராகங்கள் என்றழைப்பது பொருத்தமல்ல. ஒரு ராகம் பழக்கத்தில் வந்து விட்டால் மட்டும் அபூர்வ மென்பது மறையும். ஸ்ரீதியாகய்யர் அவர்கள் சிருஷ்டித்த கீர்த்தனைகள் சுமார் 10,000க்கு மேற்பட்டிருந்தும், பெரும் பான்மை மறைந்து, சற்றேரக்குறைய 500 கீர்த்தனைகள் மட்டும் காணக்கிடக்கின்றன. இக்கீர்த்தனைகளை தழுவப்பட்ட ஜன்னிய ராகங்கள்

முற்றிலும் இந்நூலில் காணும் ராகக்கிரமங்களை பொட்டி யுள்ளன.

4. லக்ஷண கீதங்கள், தீக்ஷிதர் கிருதிகள், சாமா சாஸ்திரி கீர்த்தனைகள், பட்டணம் சுப்பிரமணியஐயர் கீர்த்தனைகள், முதலிய பெரியோர்களின் கீர்த்தனைகளை உற்று நோக்குங்கால் இவர்களின் முறைக்கும், இந்நூலின் காணும் முறைக்கும் ஒற்றுமை இருப்பது தெளிவாக விளங்கும். தற்காலத்தில் சில இடங்களில் ராகசர்ச்சைகள் இருந்து வருகின்றன. சர்ச்சைகளுக்கு இடமில்லாதபடி கூடிய வரைக்கும் பொது அநுபவ முறைகளைத் தழுவி இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

5. மற்றைய சுமார் 600 ஜன்னிய ராகங்களைப் பரிசோதித்து எழுதுவது இனிமேல் வரும் வித்வச்சிகாமணிகளின் கடமையாகும். மறைந்து போன தியாகய்யர் கீர்த்தனைகள் முழுவதும் ஸ்ரீமுருகன் அருளால் கிடைக்கப் பெறுமாயின் இந்த 600 ஜன்னிய ராகங்களுக்கும் உதாரணங்களும் கிடைப்பதெளிது என்பது எமது துணிபு.

6. ஆகவே, ராகங்களை அநுபவத்தில் கொண்டு வருவதும் அவைகளை ரஞ்சகமாகச் செய்வதும் ரஸிகர்களது கடமை என்பது உறுதி. சுமார் 30 வருடத்திற்கு முன் நிகழ்ந்த ஒரு சம்பவம் இதற்கு சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

திருவிழாவிற்கு வந்த ஒரு நாதஸ்வரவித்வானை வழக்கப்படி உள்ளூர் நாதஸ்வர வித்வான் வரவேற்று ஒரு ராகத்தை யெடுத்துக் கொடுத்தார். வந்த வித்வானுக்கு இந்த ராகத்தை உடனே கண்டு பிடிக்க முடியவில்லை. எனினும் ஞானமுள்ள அந்த வித்வான் ராகத்தின் ஆரோகண, அவரோகணங்களை நன்குணர்ந்து தமது நிறைந்த

அநுபவத்தினுலும், அறிய மூயற்சியாலும் ஜனங்கள் பிர மிக்கும்படி அதனை வாசித்து முடித்தார். பரவச மடைந்த ரஸிகர்கள், வித்வானை யணுகி ராகத்தின் பெயர் என்ன வென்பதை வணக்கத்துடன் கேட்டனர். அதற்கு வித்வான் "சர்க்கரைக்குப் பெயரில்லா விட்டால் இனிக்காதோ" என்று பதிலுரைத்தார். இந்த நிகழ்ச்சியின் விஷய முக்கி யத்துவத்தை ஆராயுங்கால் நாம் அறிந்து கொள்ள வேண் டியது என்ன வென்பது தெளிவாகும். எந்த ராகத்தையும் ரஞ்சகப் படுத்துவது வித்வான் களுடைய கடமையாகும்.

7. நான் சமீபத்தில் ஆங்கிலத்தில் பிரசுரித்த "ராகப் பிரஸ்தாரக் கணித முறை" யில் ஜன்னிய ராகங்களின் கணித அடிப்படைகளை விவரித்துக் கணக்கு மூலமாக நிரூ பித்திருக்கிறேன். இவைகளுக்கு வழிகாட்டியாக இருக்கிற பிரஸ்தாரக்கணித சூத்திரங்களைத் தமிழிலும் என்னுடைய "தாளதீபிகையில்" பிரசுரித்திருக்கிறேன். இந்த நூலை பூர ணமாக அறிந்து கொள்வதற்கு மேற்கண்ட 2 நூல்களும் வழிகாட்டிகளாக இருக்கும்.

8. இவ்வாறு வித்வான் களுக்கும், மாணுக்கர்களுக்கும், ரசிகர்களுக்கும் பெரிதும் பயன் படக்கூடிய இம்மாதிரி நூலை முதன் முதலாகப் பிரசுரிக்க அனுக்ரகம் செய்த அகி லாண்ட கோடிப் பிரம்மாண்ட நாயகராகிய முருகனுக்கும், வாவிள்ளா வெங்கடேச்வர சாஸ்திரிகளுக்கும் முறையே எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டிவனம்.
5—5—49

கி. ராமசந்திரன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பீடிகை

இந்நூலில் வேங்கடமகியின் சங்கீதக் கொள்கைகளைத் தழுவி எழுதியிருப்பது தெள்ளென விளங்கும். அநேக மாய்ப் புரந்தரவிட்டலர், வேங்கடமகி, அகளங்கர் இவர்கள் நமக்கு வேண்டிய அளவில் லக்ஷணகீதங்கள் செய்திருக்கி ருர்கள்.

இப்புத்தகத்தில் அகப்படக்கூடிய உதாரணங்களை யொட்டிச் சுமார் 425 ராகங்களுக்குப் பூர்த்தியாக லக்ஷணங் கள் எழுதப்பட்டிருக்கின்றன. சரித்திரக் குறிப்புகள் இந்நா லில் குறிக்கப்படவில்லை. ஏனென்ருல் ஆராய்ச்சி சம்பந்த மான விஷயங்கள் இந்நூலுக்குப் பயன்படா. இந்நூலின் முக்கியக்கருத்து, வாசிப்போர்களுக்கும், பாடுவோர்களுக் கும் ராகத்தின் நுட்பங்களையும், பாடுவதற்கு வேண்டிய முறைகளையும் சொல்ல வேண்டுமென்பதுடன், ராகங்களைக் கையாளுவதற்கு வேண்டிய முறைகளைக் கூறும் இந்நூலில் சர்சைகளையும், சரித்திரசம்பந்தமான விஷயங்களையும் எழுதுவதற்கு இடமில்லை.

சுருதி நுட்பங்களையும், வேங்கடமகியின் "சதுர்தண் டிப்ரகாசிகை". போன்ற மற்ற நூல்களையும் அறிந்து கொள்ளுவது வித்வான்கள் கடமையாகும். இந்நூலைப் படிக்குமுன் சில விஷயங்களை நாம் கவனிக்க வேண்டும்.

1. நம் நாட்டில் சாதாரணமாக ராகத்தைச் சொல் லிக் கொடுக்கும் வழக்கம் இல்லை. குருசிஷ்ய பரம்பரை யாக வழங்கிவரும் சங்கீத வித்தையில் அநேகமாய் ராகத் தைக் கேள்விமூலமாகத்தான் சிஷ்யர்கள் பாடினார்கள். ராகத்தையோ, கீர்த்தனையையோ பாடுவதைக் கேட்பதின் மூலமாகவே பயிர்ச்சி செய்துகொண்டு வந்தார்கள். தவிர வும், வீணை, நாதசுர வித்வான்கள் தங்களுடைய சாமர்த்தி

யத்தினால் ராகங்களை ரஞ்சகப்படுத்தினார்கள். ராகத்தை ரஞ்சகப்படுத்துவதற்கு, மனோபாவம் முக்கியமானது. இதற்கு எளிதான உதாரணம் என்னவென்றால் ஒரு ராகத்திலுள்ள ஒரே பிடியை ஒருவர் பிடிக்கையில் ரஸமாகவும் வேறொருவர் பிடிக்கையில் விரஸமாகவும் இருப்பதை நாம் அடிக்கடி காண்கிறோம். கமகநுட்பங்களை அறிந்தால்மட்டும் போதாது. கவிகளுக்கு எப்படிப் பிறப்பிலேயே திறமை அமைந்துள்ளதோ, அதேமாதிரியாக ஒரு ராகத்தை ரஞ்சகப் படுத்துவது பாடுவோனுடைய மனோபாவத்தையும் சாதகத்தையும் பொறுத்தது.

2. தென்னிந்தியாவில் ராகத்தில் புகழ்பெற்ற பெரியோர்களைப் பற்றி நாம் இன்னும் புகழ்ந்து கொண்டிருக்கிறோம். வீணை தனம்மாள், திருமருகல் நாதஸ்வர வித்வான் நடேசன், திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர் முதலிய பெரியோர்களைப் பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. அபூர்வமான ராகத்தைப் பிரசித்தமாக்குவது வித்வான்களுடைய சாமர்த்தியத்தைப் பொறுத்தது. சாதாரண வித்வான்களால் "பூஷாவளி", "வராளி", "நபோமணி", "கைகவசி" முதலான ராகங்களை ஜனங்கள் ரஸிக்கும்படி செய்ய இயலாது.

3. சுமார் நூறு வருஷத்திற்குள்ளாக நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுவது நலம். வறுமையால் வருந்திய சில சங்கீதவித்வான்கள், அவர்கள் பிரசித்தமாய்ப் பாடிய கனராகத்தை அரசரிடம் அடைவுவைத்துப் பணம் பெற்றதாகக் கர்ண பரம்பரையாய்த் தெரியவருகிறது. உற்று நோக்குங்கால் இதுஒரு புதுமையல்ல. தற்காலத்தில் இதற்கு ஆங்கிலத்தில் "Patent" என்று மறுபெயர் வழங்குகிறது. இம்மாதிரியாக ராகத்தில் ஊக்கமுடையவர்கள் இனிமேலும் தோன்றுவார்களென்று நம்புகிறோம்.

4. ராகத்தைப் பாடும்போது கவனிக்க வேண்டிய சில **முக்கியமான** விஷயங்கள் :—

(a) ராகங்களை வித்வான்களிடம் அடிக்கடி கேட்கவேண்டும்.

(b) அந்த ராகத்திலுள்ள கீதம், வர்ணம், கீர்த்தனம், பதம் இவைகளில் வழக்கத்தில் எது உளதோ அதைக் கேட்கவேண்டும். இப்படியாக **லக்ஷியத்திலிருந்து லக்ஷணங்களைக் கவனிக்கவேண்டும்.**

(c) கமகநுட்பங்களை நன்கு அறிய வேண்டும். "எவ்விதமான பிடிகள் ரஞ்சகமானவை, "எவ்விதமான பிடிகள் ரஞ்சகமாயிரா"— என்பதைப் பகுத்தறிய வேண்டும். ஆகவே குறிப்பிட்ட ராகத்திற்கு வேண்டிய சொரூபங்கள் ஏற்பட்டால்தான் ராகம் ரஞ்சிக்கும்.

(d) தசவித கமகநுட்பங்கள், கற்பனைசக்தி, சுருதிநுட்பங்கள், இம்மூன்றும் ராகம் பாடுவதற்கு முக்கிய அம்சங்களாகும்.

உதாரணமாக :—கௌளை ராகத்தில் பேசும் ரிஷபமும், வராளிமத்தியமமும், ப்யாகடாமத்தியமமும், சுருதி நுட்பங்களை அறிந்தால்தான் உபயோகிக்க முடியும்.

5. பஞ்ச ச்ருதி ரிஷபம், தோடிகாந்தாரம் முதலிய நுட்பங்களைக் கேட்டு அறிந்து கொண்டு தான் அப்யசிக்க வேண்டும். உழைப்பும், கற்பனை சக்தியும், குருபக்தியும் முக்கியம்.

6. வாதி, ஸம்வாதி, விவாதி, அனுவாதி நுட்பங்களை அறிய வேண்டும். சில ராகங்களில் அடுத்தடுத்து வரும் ஸ்வரங்களை உபயோகிப்பதற்கு முதலாம் சக்கர ராகங்களை

நன்கு அப்யசிக்க வேண்டும். மேலும், பிரபலமாக இருக்கும் நாட்டை ராகத்தில் கூட அந்தர சாதாரண, காகலி ஸ்வரங்கள் கலப்பதைக் காணலாம். சுருக்கமாகக் கூறுங்கால் அடுத்தடுத்து வரும் ஸ்வரங்களைச் சரியானபடி உபயோகிக்கும் முறை அனுபவத்தால் தான் வரவேண்டும். பிரபல வித்வான்கள் அன்ய ஸ்வரங்களைக் கூடக் கலந்து ரசிக்கும் படியாகச் செய்து விடுகிறார்கள். சாதாரண மனிதர்களால் இது இயலாது.

7. சில ஜன்னிய ராகங்கள் மத்தியம சுருதிக்கே ஏற்பட்டிருக்கின்றன வென்று அறிய வேண்டும். பெரும்பாலும் இந்த ராகங்கள் மத்தியஸ்தாயி சஞ்சாரராகங்களாக இருக்கின்றன.

8. இந்நூலில் அட்டவணையில் குறிப்பு எழுதியிருக்கும் 400 ராகம் போக மீதி 600-க்கும் ஆரோஹண, அவரோஹணங்கள் மட்டும் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த 600 ராகங்களும் பாடக் கூடியவைகள் என்பதற்கு ஐயமில்லை. ஆனால் இவைகளுக்கு நிர்ணய முள்ள உதாரணங்கள் எனக்குக் கிடைக்க வில்லை. எனினும் இந்த 600ஐப் பற்றியும் கடவுளருளால் எனக்கு விஷயங்கள் கிடைத்தால் இரண்டாம் பகுதியில் பிரசுரிக்கலா மென்று எண்ணுகிறேன்.

9. முதன் முதலாக ராக லட்சணங்களைக் கோர்வையாக எழுதுவதற்கு இந்நூலில் முயற்சி செய்ததில் அநேக பிழைகளும், அபிப்ராய பேதங்களும் ஏற்பட்டிருக்கலாம். அன்பர்கள் குற்றங்களை மன்னித்து, நல்ல விஷயங்களை கிரகித்து உபயோகிப்பார்கள் என்று நம்புகிறேன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

மதிப்புரை

தக்ஷிணார்க்க ரத்நாகரம்

கைப்பிரதியாக இருக்கும்பொழுது அகில இந்திய
சங்கீத வித்வான், நாதஸ்வரம், திருவாடுதுறை

T. N. இராஜரெத்னம் பிள்ளை

அவர்களால் கொடுக்கப்பட்ட மதிப்புரை

மன்னார்குடி கனம் பிரம்மஸ்ரீ, K. ராமச்சந்திர அய்யர், M. A., அவர்கள் இயற்றிய இராக ரத்நாகரம் என்ற நூலை என்னுடைய அறிவுக்கு யெட்டினவரையில் ஆராய்ச்சி செய்ததில் ஷை நூல் சங்கீத உலகினிற்கு நிறம்பவும் உபயோகமுள்ளதாக இருக்கிறது.

ஷை ரத்நாகரம் என்ற நூல் ப்ராசீன சம்பிரதாயத்தை அனுசரித்தும் ஒவ்வொரு விஷயமும் அனுபவத்தை ஒட்டியும் யெழுதப்பட்டிருக்கின்றன.

இராகப் பிரஸ்த்தாரத்திற்கு ஷை நூல் ஓர் அதிகாரம் என்று நான் கருதுகிறேன்.

நமது சங்கீத வித்வான்கள் அனைவரும் இந்த நூலை கையாள வேண்டுமென்று நிச்சயமாகச் சொல்லுவேன்.

அகிலஇந்தியா நாதஸ்வரம்,

(Sd,) T. N. இராஜரெத்னம்.

தக்ஷிணராக ரத்நாகரம்

அல்லது

அனுபவராக லக்ஷணங்கள்

அத்தியாயம் 1

72 மேளகர்த்தாக்களின் விவரமும் கடபயாதி ஸங்க்யையும்.

நெ.	ஸ்வரங்களின் பெயர்.	ஸங்கேதம்
1	ஷட்ஜம்	ஸ
2	சுத்த ரிஷபம்	சு. ரி
3	சதுச்ருதி ரிஷபம்	ச. ரி
4	ஷட்ச்ருதி ரிஷபம்	ஷ. ரி
5	சுத்த காந்தாரம்	சு. கா.
6	ஸாதாரண காந்தாரம்	ஸா. கா
7	அந்தர காந்தாரம்	அ. கா
8	சுத்த மத்யமம்	சு. ம
9	ப்ரதி மத்யமம்	ப். ம
10	பஞ்சமம்	ப
11	சுத்த தைவதம்	சு. தை
12	சதுச்ருதி தைவதம்	ச. தை
13	ஷட்ச்ருதி தைவதம்	ஷ. தை
14	சுத்த நிஷாதம்	சு. நி
15	கைசிகி நிஷாதம்	கை. நி.
16	காகலி நிஷாதம்	கா. நி.

மேற்கண்ட 16 ஸ்வரங்களும் வீணையில் அமைந்திருக்கும் விபரத்தைக் காட்டும்.

வீணா சக்ரம்

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
ஸ	சு. ரி	ச. ரி	ஷ. ரி	அ. கா	சு. ம	ப. ம	ப	சு. தை	ச. தை	ஷ. தை	கா. நி	தார ஷட்ஜம
		சு. கா	ஸா. கா						சு. நி	கை. நி		

மேலேகண்ட வீணா சக்ரத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி ஷை 16 ஸ்வரங்களும் 12 ஸ்தானங்களில் விளங்குவதைக் கவனிக்கவேண்டிய தவசியம். அதாவது :—

சதுச்ருதி ரிஷபம்	—	சுத்த காந்தாரம்
ஷட்ச்ருதி ரிஷபம்	—	ஸாதாரண காந்தாரம்
சதுச்ருதி தைவதம்	—	சுத்த நிஷாதம்
ஷட்ச்ருதி தைவதம்	—	கைசிகி நிஷாதம்.

ஆகிய இந்த இரட்டைப் பெயர்கள் ஒரே ஸ்தானத்தைக் குறிப்பிடுவதால் மேற்கண்ட 16 ஸ்வரங்களும் 12 ஸ்தானங்களைத்தான் குறிப்பிடுகின்றன என்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய முக்கியமான விஷயம். அத்துடன் ஷை 16 ஸ்வரங்களையும் ஸப்தஸ்வரங்களாக ப்ரஸ்தரிக்கையில் அடியிற்கண்ட 6 முக்கியமான பேதங்கள் ஏற்படுகின்றன.

சு. ரி — சு. கா — ம — ப — சு. தை — சு. நி
சு. ரி — ஸா. கா — ம — ப — சு. தை — கை. நி
சு. ரி — அ. கா — ம — ப — சு. தை — கா. நி

ச. ரி — ஸா. கா — ம — ப — ச. தை — கை. நி
ச. ரி — அ. கா — ம — ப — ச. தை — கா. நி
ஷ. ரி — அ. கா — ம — ப — ஷ. தை — கா. நி

அதாவது ரிஷபகாந்தாரங்களில் 6 பேதங்களும் தைவத நிஷாதங்களில் 6 பேதங்களும் உண்டாகின்றன. ரிஷபகாந்தாரங்களில் வரும் முதல் பேதத்தை ஸ்திரமாய் வைத்துக் கொண்டு தைவத நிஷாதபேதங்கள் ஆறையும் ஒவ்வொன்றாய் ஸம்யோகப்படுத்த 6 பேதங்கள் ஏற்படுவதை நன்கு காணலாம். அதேமாதிரி ரிஷப காந்தாரங்களில் ஏற்படும் 6 பேதங்களுக்கும் தனித்தனியே தைவத நிஷாத பேதஸம்யோகத்தால் ஆறு ஆறு பேதங்கள் உண்டாவதால மொத்தமாய் (6 × 6)=36 பேதங்கள் உண்டாகின்றன. இதுவரை மத்யமத்தின் பேதங்களைக் கொடுக்காமல் ப்ரஸ்தரித்து வந்ததில் 36 பேதங்கள் ஏற்பட்டிருப்பதை கவனித்துக்கொள்க; மத்யமத்தில் சுத்தமத்யமம் ப்ரதிமத்யமம என்று இரண்டு பேதங்கள் 36 × 2=72 இருப்பதால் பேதங்கள் உண்டாகின்றன. பேதமே இல்லாத ஷட்ஜ, பஞ்சமங்களோடுகூடி ஸப்தஸ்வர ஸம்யோகத்தால் 72 மேளகர்த்தாக்கள ஏற்படுகின்றன. அவைகளுள் சுத்தமத்யம ராகங்கள் 36 ம ப்ரதிமத்யம ராகங்கள் 36 மாகப்பிரியும். ஒவ்வொரு 36 ம் ஆறு ஆறு சக்ரங்களாகப் பிரிக்கப் படுகையில் சுத்தமத்யம ராகங்களுக்கு 6 சக்ரங்களும் ப்ரதி மத்யமராகங்களுக்கு 6 சக்ரங்களும் ஆக 12 சக்ரங்களில் 72 மேளகர்த்தா ராகங்களும் கிடைக்கின்றன. முதல் சக்ரம் என்பது ரிஷபகாந்தாரங்களின் முதல் பேதத்தை ஸ்திரமாய்க் கொண்டு தைவத நிஷாதங்களின் 6 பேதங்களையும் வரிசைப் படுத்துகையினால் கிடைக்கும். முதல் 6 கர்த்தா ராகங்கள் இதே மாதிரி ரிஷபகாந்தாரங்களின் இரண்டாவது பேதத்தை ஆதாரமாய்க்கொண்டு முன் செய்தபடி தைவத நிஷாதங்களின் பேதங்களைக் கொடுத்து இரண்டாவது 6 ராகங்கள் இம்மாதிரியே 6 சக்ரங்களில 36 சுத்தமத்யம ராகங்கள் கிடைக்கின்றன. இதேமாதிரி ப்ரதி மத்யராகங்கள் 36 ம் கிடைக்கின்றன. ஆகவே 72 மேளகர்த்தாக்கள் மேற்கண்ட விதமாய் ப்ரஸ்தாரம் செய்கையில் உண்டாவதை இங்கு மாணுக்கர்கள் கவனிக்கவேண்டும்.

72 மேளகர்த்தாக்களில் ஒவ்வொன்றுக்கும்

சக்ரம்.	ஸ்வரங்களின் விவரம்	சுத்த தைவதம் சுத்த நிஷாதம்	சுத்த தைவதம் கை. நிஷாதம்
1	சு. ரி—சு. கா—சு.ம	1 கனகாங்கி	2 ரத்னாங்கி
2	சு. ரி-ஸா. கா—சு.ம	7 ஸேநாவதி	8 ஹநுமத்தோடி
3	சு. ரி—அ. கா—சு.ம	13 காயகப்ரியா	14 வகுளாபரணம்
4	ச. ரி-ஸா. கா—சு.ம	19 ஜங்காரத்வனி	20 நடபைரவி
5	ச. ரி—அ. கா—சு.ம	25 மாரரஞ்ஜனி	26 சாருகேசி
6	ஷ. ரி—அ. கா—சு.ம	31 யாகப்ரியா	32 ராகவர்த்தனி
7	சு. ரி—சு. கா—ப்.ம	37 ஸாலகம்	38 ஜலார்ணவம்
8	சு. ரி-ஸா. கா—ப்.ம	43 கவாம்போதி	44 பவப்ரியா
9	சு. ரி—அ. கா—ப்.ம	49 தவளாம்பரி	50 நாமநாராயணி
10	ச. ரி-ஸா. கா—ப்.ம	*55 ச்யாமலாங்கி	56 ஷன்முகப்ரியா
11	ச. ரி—அ. கா—ப்.ம	61 காந்தாமணி	62 ரிஷபப்ரியா
12	ஷ. ரி—அ. கா—ப்.ம	67 ஸுசரித்ர	*68 ஜ்யோதிஸ்வரூபிணி

வரும் ஸ்வரங்களின் விவரம்

சுத்த தைவதம் கா. நிஷாதம்	சது. தைவதம் கை. நிஷாதம்	சது. தைவதம் கா. நிஷாதம்	ஷட். தைவதம் கா. நிஷாதம்
3 கானமூர்த்தி	4 வநஸ்பதி	5 மானவதி	6 தானரூபி
9 தேனுகா	10 நாடகப்ரியா	11 கோகிலப்ரியா	12 ரூபவதி
15 மாயாமாளவகௌளை	16 சக்ரவாகம்	17 ஸூர்யகாந்தம்	18 ஹாடகாம்பரி
21 கீரவாணி	22 கரஹரப்ரியா	23 கௌரீமனோஹரி	24 வருணப்ரியா
27 ஸரஸாங்கி	28 ஹரிகாம்போதி	29 தீரசங்கராபரணம்	30 நாகாநந்தினி
33 காங்கேயபூஷணி	34 வாகதீச்வரி	35 சூலினி	36 சலநாட்டை
39 ஜாலவராளி	40 நவநீதம்	41 பாவனி	42 ரகுப்ரியா
45 சுபபந்துவராளி	46 ஷட்விதமார்கிணி	47 ஸுவர்ணாங்கி	* 48 திவ்யமணி
51 காமவர்த்தனி	52 ராமப்ரியா	53 கமனச்ரமா	* 54 விச்வம்பரி
* 57 ஸிம்ஹேந்திரமத்யமம்	59 ஹைமவதி	59 தர்மவதி	60 நீதிமதி
68 லதாங்கி	64 வாசஸ்பதி	65 மேசகல்யாணி	* 66 சித்ராம்பரி
69 தாதுவர்த்தனி	70 நாஸிகாபூஷணி	71 கோஸலம்	72 ரஸிகப்ரியா

இந்த 72 மேளகர்த்தா ராகங்களில் வரும் ஸ்வர ஸ்தானங்கள் எவை என்பதை சுலபமாய்க் கண்டுபிடிக்க அடியிற் கண்டமுறையை அனுஸரிக்கவேண்டும். உதாரணமாய் 20-வது மேளகர்த்தாவாகிய நடபைரவியில் வரும் ஸ்வரங்கள் எவை என்றால் 20 ஐ 6 ஆல் வகுக்க 3 தடவை வகுக்கப்பட்டு மிச்சம் 2 கிடைக்கிறது. இதனால் 3 முழுசக்ரங்கள் சென்றபிறகு 4 வது சக்ரத்தில் இது இரண்டாவது ராகம் என்று அறிகிறோம். நாலாவது சக்ரத்திற்கு ரிஷப காந்தாரங்களில் ஏற்படும் 4 வதுபேதம் அடிப்படை அதில் இரண்டாவது ராகம் என்று 20-வது மேளகர்த்தா வருவதால் தைவத நிஷாதங்களின் இரண்டாவது பேதம் அதற்கு ஏற்படுகிறது. முதல் 36க்குள் 20 வது மேளகர்த்தா இருப்பதால் சுத்தமத்யம ராகம் என்றேற்படுகிறது. ஆகையால் 20 வது மேளகர்த்தாவால் நமக்கு மேற்கண்ட கணக்குப்படி எல்லா ஸ்வரங்களும் கிடைத்துவிடுகின்றன. அதாவது :—

2 வது பேதம்

ஸ—ச. ரி—ஸா. கா—சு. ம—பஞ்—சு. தை—கை. நி

4 வது பேதம்

இதேமாதிரி 65-வது மேளகர்த்தாவுக்கு வரும் ஸ்வரங்களைக் கண்டுபிடிக்க 65 ஐ 6 ஆல் வகுக்க ஈவு 10-ம் மிச்சம் 5-ம் வருகிறது. அதாவது 11-வது சக்ரத்தில் 5-வது பேதம். சுத்தமத்யம ராகங்களுக்கு வரும் 6 சக்ரங்களை நீக்க ப்ரதி மத்யம ராகங்களில் 5 வது சக்ரத்தில் 5 வது ராகம்—ரிஷப காந்தாரங்களின் 5 வது பேதத்தையும் தைவத நிஷாதங்களின் ஐந்தாவது பேதத்தையும் ஸம்யோகம் செய்யவரும் ஸ்வரங்கள்.

ஸ—ச. ரி—அ. கா—ப்ம—பஞ்—ச. தை—கா. நி

5 வது பேதம் 5 வது பேதம்

இப்படியாக எந்தெந்த மேளகர்த்தாவில் எந்தெந்த ஸ்வரங்கள் வருகின்றன வென்பதைச் சுலபமாய்க்கண்டு பிடிக்கலாம்.

இங்கு மாணாக்கர்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய ஸூக்ஷ்மம் ஒன்றுண்டு. மேற்கண்ட 6 முக்யபேதங்களில் முதல் மூன்று பேதங்களில் சு. ரிஷபம் சு. தைவதங்கள் ஆரம்பமாவதையும் அடுத்த 2 பேதங்களில் ச, ரிஷபம் ச. தைவதங்கள் ஆரம்பமாவதையும் கடைசியான 6 வது பேதத்தில் ஷட்ச்ருதி ரிஷபதைவதங்கள் ஆரம்பமாவதையும் நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இதனால மற்ற ஸ்வரங்களையும் சுலபமாய்க் கண்டு பிடிக்கலாம்.

இதுவரையில் மேளகர்த்தா ராகங்கள் ஏற்பட்ட ப்ரஸ்தாரக் கிரமங்களையும் அவைகளில் இன்னின்ன ஸ்வரங்கள் வருகின்றன என்பதைச் சுலபமாய்க் கண்டுபிடிக்கக்கூடிய முறைகளையும் விளக்கினோம். இனி கடபயாதி ஸங்க்யைப்படி மேளகர்த்தாவின் பெயரைக்கொண்டே இது இத்தனையாவது மேளகர்த்தா என்று கண்டுபிடிக்கும் முறையையும் சுருக்கமாய் விளக்குவோம்.

அடியிற் கண்ட சக்ரப்படி டாதியாக 9-ம், ப ஆதியாக 5-ம், க ஆதியாக 9-ம், ய ஆதியாக 8 ம் என்று ஸம்ஸ்க்ருத பாஷையில் வரும் எழுத்துக்களுக்கு அடியிற் கண்ட விதமாய் ஸங்க்யை ஏற்பட்டிருக்கிறது. இதுவே "கடபயாதி" ஸங்க்யை என்று சுருக்கமாய்க் கூறப்படுகிறது.

விவரம்.	1	2	3	4	5	6	7	8	9
காதிநவம்	क	ख	ग	घ	ङ	च	छ	ज	झ
டாதிநவம்	ट	ठ	ड	ढ	ण	त	थ	द	ध
பாதிபஞ்சம்	प	फ	ब	भ	म				
யாத்யஷ்டம்	य	र	ल	व	श	ष	स	ह	

காதிநவம் என்பது "க" முதற்கொண்டு ஜ வரையில் வரும் 9 எழுத்துக்கள்.

டாதிநவம் என்பது "ட" முதற்கொண்டு த வரையில் வரும் 9 எழுத்துக்கள்.

பாதி பஞ்சம் என்பது "ப" முதல் "ம" வரை வரும் 5 எழுத்துகள்.

யாத்யஷ்டம்:—என்பது "ய" முதல் "ஹ" வரை வரும் 8 எழுத்துக்கள்.

காதிநவத்திற்குப் பிறகு வரும் 10-வது "ஞ" என்றெழுத்திற்கும் டாதிநவத்திற்குப் பிறகு வரும் 10 "ந" என்றெழுத்திற்கும் பூஜ்யம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இனி ஒரு மேளகர்த்தாராகம் எத்தனையாவது கர்த்தாஎன்று கண்டுபிடிக்க ஷைமேளகர்த்தாவின் ஸம்ஸ்கிருதப்பெயரில் வரும்முதல் இரண்டாக்ஷரங்களுக்கு மேற்கண்டகடபாதி ஸங்கியை விவரப்படிவரும் எண்களை முன்னும் பின்னுமாக மாற்றுவதனால் வரும் எண்ணிக்கை எதுவோ அதுவே இத்தனையாவது மேளகர்த்தாஎன்பதைக்குறிக்கிறது. இந்தக்கணக்கு மேளகர்த்தாராகங்கள் 72க்கு மட்டும் பொருந்துமேயன்றி இதர ஜன்ய ராகங்களுக்குப் பொருந்தாது. உதாரணமாக: "மேசகல்யாணி" என்ற மேளகர்த்தாராகத்தின் முதல் இரண்டு எழுத்துக்களாகிய "ம" வுக்கும் "ச" வுக்கும் கிடைக்கும் 5, 6 என்ற இரண்டு எண்களையும் முன்பின்னாய்த் திருப்பிப் போட 65 என்றலக்கம் கிடைக்கும். ஆகையால் "மேசகல்யாணி" 65-வது மேளகர்த்தாராகம். மேற்கண்ட முறைப்படி "நீதிமதி" என்ற மேளகர்த்தாவுக்குக் கிடைக்கும் 0, 6 என்ற எண்களை முன்பின்னாகத் திருப்ப 60 என்ற லக்கம் வருவதால் 60 வது மேளகர்த்தா என்று ஊகிக்க வேண்டும். ஹநுமத்தோடி என்ற மேளகர்த்தாவுக்கு, கிடைக்கும் 80 என்பதைத்திருப்பிப்போட 08 அதாவது 8-வது கர்த்தா

ஆகும். நிற்க மேளகர்த்தாவின் பெயரில் ஸம்யுக்தாக்ஷரங்கள் ஒற்று வரும் போது முன்பின் எழுத்துக்களை ஸம்யோசிதம்போல் உபயோகிக்க வேண்டும்.

உதாரணம் :—சக்ரவாகம்

ச—6,	க் — 1 திருப்பிப்போட		...	16
	7	1		
ஸூர்யகாந்தம் :—ஸூ		ய	...	17
	6	5		
ஷண்முகப்ரியா :—ஷ		மு	...	56
	6	4		
ஷட்விதமார்க்கிணி :—ஷ		வி	...	46
	7	5		
ஸிம்ஹேந்த்ரமத்யமம் :—ஸி		ம்	...	57

இம்மாதிரி ஊகித்துக் கண்டு பிடித்த பிறகு முன்விளக்கியிருக்கிற பிரகாரம் கிடைக்கும் எண்ணிக்கை இத்தனையாவது சக்ரத்தில் இத்தனை யாவது பேதங் கொண்ட ராகம் என்றறிந்து ஸ்வரங்களை நிர்த்தாரணம் செய்வது முறை.

அத்தியாயம் 2

இந்த அத்தியாயத்தில் மேளகர்த்தா வரிசைப்படி கர்த்தா ராகங் களில் வரும் ஜன்யங் களில் அனுபவத்தில் உள்ள ராகங்களுக்குப் பூராவும் லக்ஷணங்கள் எழுதப் பட்டிருக்கின்றன. கர்த்தா ராகங்கள் ஸம்பூர்ண மாகையாலும அவைகளில் அநேகங்களுக்குக் கீதங்களிருப்பதினாலும தவிர மேள ராக மாலிகை இருப்பதினாலும் ஆங் காங்கு சில கர்த்தாராகங்களில் சிலவற்றிற்கு மாத்திரம் லக்ஷணங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அனுபவ ராகங்கள் சில வற்றிற்கு உதாரணம் குறிக்கப் படவில்லை. ஏனெனில் இவைகளுக்கு

வர்ணங்கள் விசேஷமாக இருப்பதினால் "வர்ணமாலிகா" என்ற நூலின்மூலம் தெரிந்து கொள்ளலாம். விசேஷக் குறிப்புப் போடப்படாத ராகங்களுக்கு ஆரோகண அவரோகணக் கிரமங்களே போதுமானது. அப்பேர்ப்பட்ட ராகங்களுக்கு அட்டவணையில் குறிப்பிட்டபடி பார்த்துக் கொள்ளவும். அநேக ராகங்களுக்கு அனுபவத்தையே மூலாதாரமாகக் கொள்ள வேண்டும். அவைகளை ஒரு சட்டத்தில் கட்டுப் படுத்த முயல்வது நிஷ்ப்ரயோஜனமான காரியம். எந்த ராகமும் ரஞ்ஜக மில்லாது போனால் எந்நாட்டு ஸங்கீதத்திற்கும் நற்பயன் இல்லை. முதல் ஆறு கர்த்தா ராகங்களையும் கடை ஆறு கர்த்தா ராகங்களையும் அதன் ஜன்யங்களையும் பாடுவதற்கு அதிக அப்யாஸமும் உழைப்பும் வேண்டும். இல்லாவிடில் ரஞ்ஜிக்காது :—

1. **கனகாங்கி** :—இது 72 மேளகர்த்தா ராகங்களில் முதலாவது. இதில் வரும் ரி க ம த நி என்ற 5-ம் சுத்த ஸ்வரங்கள். மிகுந்த தேர்ச்சியுள்ளவர்கள் பாடினால்தான் இந்த ராகம ரஞ்ஜனையை உண்டாக்கும். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

2. **சுத்த முகாரி** :—இது கனகாங்கியில் ஜன்யம்

ஆரோ :—ஸ ரி க ம ப த நி ஸ

அவ்ரோ :—ஸ நி த ம க ரி ஸ

ஸங்க்ரஹ சூடாமணி என்ற கிரந்தத்தில் இதற்கு லக்ஷண கீதம் காணப்படுகிறது.

3. **ரத்னாங்கி** :—இது இரண்டாவது மேளகர்த்தா ராகம் ஸம்பூர்ணம் கைசிகி நிஷாதத்தைத் தவிர மற்ற ஸ்வரங்கள் சுத்த ஸ்வரங்கள். இதற்கு கீதம் உண்டு.

4 ஸ்ரீமணி :—இது இரண்டாவது மேளகர்த்தாவில் ஜன்யம். சுத்த காந்தார சுத்த தைவதங்கள் முக்கியம். "ஏமந்துனே விசித்ரமு" என்ற தியாகய்யர் கீர்த்தனத்தில் இதன் லக்ஷணங்கள் நன்கு விளங்கும். ஸாதாரணமாக முதல் சக்ரத்தில் உள்ள கர்த்தா ராகங்கள் பாடமுடியாதவைகள் என்ற கொள்கையிருந்தாலும் இவைகளின் ஜன்யங்கள் பாடப் பட்டுவருகின்றன.

ஆரோ :—ஸ ரி க ப த ஸ
அவரோ :—ஸ நி த ப க ரி ஸ

ரீ—ரி ஸ ஸா ரி ஸ—நி தா ஸ ரி க ரி ப— ப த ஸ ஸா—நி த பா க ரி ஸா என்ற பிடிகள் ரஞ்ஜகம்.

5. கானமூர்த்தி :—இது மூன்றாவது மேளகர்த்தா ராகம்—ஸம்பூர்ணம் இதற்கு கீதம் உண்டு. காகலி நிஷாதம் தவிர மற்ற ஸ்வரங்கள் சுத்த ஸ்வரங்கள்

6. பூர்வவராளி :—இது ஔடுவ ஸம்பூர்ணம்—உபாங் கராகம். 3-வது மேளத்தில் ஜன்யம்.

ஆரோ :—ஸ ரி ம ப த ஸ
அவரோ :—ஸ நி த ப ம க ரி ஸ

உதாரணம் :—வேங்கட மகியின் கீதம்.

அடியிற் கண்ட ஸஞ்சாரங்கள் ரஞ்ஜகம் :—

த த நி த ஸ—த ஸா ஸ—ரி ரி ஸா நி த—த நி த ப—
த ப ப ம—த ம ப ம—ஸ ரி க ரி ஸ—ஸ ரி ஸ ம க ரி—
ம ப த ஸ—ஸ நி த ப ப—நி த ப த ஸ நி த ப ம க ரி
கரி—கரி ஸா.

7. **ஸாமவராளி அல்லது கானசாமவராளி** :—இது ஓர் ஷாடவஸம்பூர்ண ராகம் — 3-வது கர்த்தாவில் ஜன்யம்.

ஆரோ :—ஸ ரி ம ப த நி ஸ

அவரோ :—ஸ நி த ப ம க ரி ஸ

இது மிகவும் பூர்வீக மான ராகம் என்பதும் ஸாம வேதஸ்வரங்கள் இதில் இருக்கின்றன என்பதும் கிரந்தங்களின் கொள்கை.

உதாரணம் :—முத்துஸ்வாமி தீக்ஷிதரவர்களின் "ப்ரஹதீச்வரோ ரக்ஷது" என்ற கீர்த்தனம்.

த நி ஸா —ரி ம கா —க ரி ஸா —ரி ம பா — த த நி நி த த பா — நி த பா — த ப மா க ரி ஸ நி = ஸ பா ம ப த ம ப—த நி ஸா — ரி ரி ம ம க க ரி ஸ — ரி ஸ நி தா ப — ம கா ரி — ஸ நி த நி ஸா — போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

8. **வநஸ்பதி** :—இது நாலாவது மேளகர்த்தா ராகம். ஸம்பூர்ணம். சதுச்ருதி தைவத கைசிகி நிஷாதங்களைத் தவிர மற்றவை சுத்த ஸ்வரங்கள். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

உதாரணம் :—தியாகய்யர் கீர்த்தனை "பரியாசகமா"

9. **ரஸாளி** :—இது ஒரு ஷாடவ ஔடவ ராகம். சுத்த ரிஷப, சுத்தமத்யம, சதுச்ருதி தைவதங்கள் பிரதானம். காந்தாரம் வர்ஜ்யம் மத்யமம் ஜீவஸ்வரம் ஆகையால் இதைப் பாடுவது சிறிது ஸுலபம் என்றே சொல்லலாம்.

ஆரோ :—ஸ ரி ம ப த நி ஸ

அவரோ :—ஸ தா ப ம ரீ ஸ

ரி ஸா த நி ஸ ரி — ரீ ஸா ஸ ரி ம ரீ ரீ — ப தா நீ ஸ த ப ப ம ரி — ஸ ரி ஸ ரி ம ரி ப மா— ப த நி ஸ த ப

ப த நீ — த நி ஸா — ஸ தா ப ம ரி ம ரி ம ப த நீ—
த ப மா — ஸ தா ப ம ரி ம ப ம ரீ ஸா — ஸ த நி
ஸ தா ப — ம ப த ப ம ரி ஸ ரி ம ரி ஸா —
ஸ ரி ம ம

ப ப தா — ப தா த ப ம ரி மா — போன்ற பிடிகள் ராக ரஞ்ஜகமானவைகள். ஸதா என்ற ஒரிகைப்பிடி கவனிக்கதக்கது.

உதாரணம் :—தியாகய்யர் கீர்த்தனை "அபராதமு".

10. பானுமதி :—இது ஓர் ஷாடவ ஸம்பூர்ண ராகம்—(ராகாங்கம்) — 4-வது மேளத்தில் ஜன்யம் — ஸங்கீத ப்ரதர்சினியில் காணப்படும் ஸஞ்சாரம் ஸரி ம ப தநிஸ, ஸநித ப ம கரிஸ.

ஆரோ :—ஸரிகரி மபஸ
அவரோ :—ஸநிதப மகரிஸ } என்றும் உண்டு.

இதில் வேங்கடமகியின் கீதமும் "ப்ருஹ தம்பா" என்ற தீக்ஷிதரவர்களின் கிருதியும் உண்டு. அடியிற் கண்ட ஸஞ்சாரங்கள் ரஞ்சகம்.

ரிம பமகரி—ஸநி டஸ ஸரிஸ—ரிகரி மாப—ஸநிதாப—
பஸநிதாப—பமகரி மகரி ஸரி ஸரிகரி ஸநிதபஸா.

11. மானவதி :—5-வது மேளகர்த்தா ராகம்—ஸம்பூர்ணம். சதுச்ருதிதைவத காகலி நிஷாதங்களைத் தவிர மற்றவை சுத்த ஸ்வரங்கள். இதற்கு கீதம் உண்டு.

(தியாகய்யர் கீர்த்தனை "எவரிதோ")

12. மனோரஞ்ஜனி :—5-வது மேளத்தில் உண்டான ஷாடவ ஸம்பூர்ண ராகம்.

ஆரோ ;—ஸரி ம ப தநிஸ
அவரோ :—ஸநிதப மகரிஸ

சுத்த காந்தார ரிஷபங்களைக் கவனத்தோடு பிடித்துப் பாடவேண்டும்.

உதாரணம் :—தியாகப்பரின் "எடுகாராதினி" என்ற கீர்த்தனம். தீக்ஷிதரவர்களின் "பாலாம்பிகே ஏஹி" என்ற கீர்த்தனம்.

ஸரி ம மகரி—ரி ஸரி மகரி—மப பதமா ரிஸா—நி நித நி த நி பதம—தநித பததநி—ஸநித ப மத ம பகரி ஸா போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

13. கனசியாமலா :—இது 5-வது மேளத்தில் உண்டான ஔடவ ஸம்பூர்ண ராகம்.

ஆரோ :—ஸகம பதஸ

அவரோ :—ஸ நிதப ம கரிஸ

இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

ஸக ரி ஸா ஸ—ஸ காம க கம—பதா ப மகரி—தஸநித பம கரி—கம ப தஸ பம கரி போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

14. தாநரூபி :—இது 6-வது மேளகர்த்தா ராகம் ஸம்பூர்ணம். ஷட்சுருதிதைவதம் காகலி நிஷாதத்தைத் தவிர மற்றவை சுத்த ஸ்வரங்கள். இதில் கீதம் உண்டு.

15. தனுகீர்த்தி :—இது ஓர் ஔடவ வக்ர ஸம்பூர்ண ராகம்—(ராகாங்கம்)—6-வது மேளத்தில் ஜன்யம்.

ஆரோ :—ஸரி ம பநிஸ

அவரோ :—ஸநி தநி பம கரி ஸ

உதாரணம் :—வேங்கடமகியின் கீதம் கோவிந்தரின் லக்ஷண கீதம். தீக்ஷிதரின் "சிதம்பர நடராஜ" என்ற கீர்த்தனம்.

16. ஸேநாபதி :—இது 7-வது மேளகர்த்தா ராகம் ஸம்பூர்ணம். இரண்டாவ்து சக்ரத்தில் முதல் கர்த்தா ராகம் ஸாதாரண காந்தாரம் தவிர இதர ஸ்வரங்கள் சுத்த ஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு.

17. ஸேநாக்ரணி :—7-வது கர்த்தாவில் ஜன்யம்.

ஆரோ :—ஸரிகரி மகம தநிஸ

அவரோ :—ஸநி தப மகரிஸ

உதாரணம் :—லக்ஷண கீதம் தீக்ஷிதரவர்களின் "ஞானம்பிகே பாலய" என்ற கீர்த்தனம்.

18. ஹநுமத்தோடி :—இது இரண்டாவது சக்ரத்தில் 8-வது மேளகர்த்தா ராகம் ஸம்பூர்ணம். சாதாரண காந்தாரம் கைசிகிநிஷாதம் தவிர மற்றவை சுத்த ஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதமும் இதர கீதங்களும் உண்டு.

19. தோடி :—இது 8-வது கர்த்தாவில் ஜன்யம். இந்த ராகத்தில் பஞ்சமம வர்ஜ்யம் என்பது கிரந்தங்களின் அபிப்பிராயம். ஆனால அனுபவத்தில் ஸம்பூர்ணமாகவே பாடப்பட்டு வருகிறது. இதன் காந்தாரம் ஸாதாரண காந்தாரமாயிருந்தபோதிலும் பைரவியில் பேசும் சாதாரண, காந்தாரத்தைவிடக் கொஞ்சம் அதிகம் என்பது அனுபவத்தில் அறியக்கூடும்.

ஆரோ :—ஸரிகம பதநிஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

தாட்டு வக்ர ப்ரயோகங்கள் இதில் விசேஷ ரஞ்சகமுள்ளவை.

கமதம—க கரி நி—தநிரிநி—நிஸரிக

மதநி ரி நித ம கரி நி கா—கநித ம கா

இதற்குப் பஞ்சமமே அவசியமில்லை.

பஞ்சமமே இல்லாமல் இதில் 'ஸாமி நின்னே கோரி யுன்னுரா.' என்ற ஒரு வர்ணமுண்டு. கீத கீர்த்தனைகள் நூற்றுக்கணக்கா யிருக்கின்றன.

20. தேசியதோடி:—இது 8-வது மேளத்தில் பிறந்த தேசிய ராகம் வக்ரப்பிடிகளே இதற்கு ப்ரதானமானவை. அவரோகணத்தில் சுத்த காந்தாரமும் சுத்த தைவதமும் ஜீவஸ்வரங்களாகப் பேசும். இது ஸம்பூர்ண ஔடவராகம்.

ஆரோ:—ஸரிகம பதநிஸ

அவரோ:—ஸ் தா ப கா ரிஸ

ப தநி ஸ் தாப—ம கரி ஸநிஸ—ஸ்ரி கம பத பம கா—கம ப தநிஸ்தா ப கா ரிஸ போன்ற சஞ்சாரம் ரஞ்ஜகம்.

உதாரணம:—அய்யரவர்களின் "நே பொகட குண்டே" என்ற கீர்த்தனம்.

21. சுத்தஸீமந்தினி:—8-வது மேளத்தில் ஜன்யமான ஷாடவ ராகம் நிஷாத வர்ஜ்யம். சுத்தமான ஆரோகண அவரோகண க்ரமங்களே பரிமளிக்கும்.

ஆரோ:—ஸ ரிக ம பத ஸ

அவரோ:—ஸ தாப மகரி ஸ

உதாரணம்:—தியாகய்யரின் "ஜானகீ ரமண பக்த பாரி ஜாத" என்ற கீர்த்தனம்.

22. ஆஹிரி:—இது ஹநுமத்தோடியில் ஜன்யமான வக்ர ராகம். இதில் அநேகமாய் ப்ரதிமத்யமம் தவிர பாக்கி எல்லா ஸ்வரங்களும் ஸமயோசிதம்போல்வரும். ஆதலால் இதற்கு லக்ஷணம் எழுதுவது சிரமம். அடிக்கடி கேட்பதால்

தான் இதன் ஸ்வரூபத்தை யறியமுடியும். மூர்ச்சனு ப்ரஸ்தாரங்கள் பயன்படமாட்டா.

ஆரோ :—ஸரிஸ காமபதநிஸ

அவரோ :—ஸநிதபமகரிஸ

உதாரணம் :—அய்யரவர்களின் "ஆதய ஸ்ரீரகுவர" என்ற கீர்த்தனம.

23. புன்னுகவராளி :—இந்த ராகத்தை மகுடி ராகம் என்று பாமர ஜனங்கள் அறிவார்கள். 8-வது கர்த்தாவில் ஜன்யம் நிஷாதாந்த ராகம். மிகவும் உருக்கமா யிருக்கக் கூடியது. மத்யம ச்ருதியில் பாடும்போது மிகவும் ரஞ்ஜக மாயிருக்கும். இதில் அநேக கீர்த்தனைகள் சில்லரை உருப் படிகள் உண்டு.

ஆரோ :—ஸநி ஸரி கம பத நீ

அவரோ :—த ப ம கரிஸ நீ

உதாரணம :—"இதி நீகு பேரகாதுரா" "இந்த பாக்யமனி" என்ற அய்யரவர்களின் கீர்த்தனைகளும், சாஸ்திரிகளின் "கனக சைல விஹாரிணி" என்ற கீர்த்தன மும், ஸதாசிவ ப்ரம்ஹேந்த்ராளின் "ஸ்திரதா நஹி நஹிரே", அருணாசலக் கவிராயரின் "ராகவனே சரணம்" என்ற கீர்த்தனமும் உண்டு.

24. அஸாவேரி :—8-வது மேளத்தில் ஜனித்த ஔடுவ ஸம்பூர்ண ரக்தி ராகம். அவரோகணத்தில் வக்ர ஸம்பூர்ண மாய்ப் பிடிப்பதுதான் ஸரி.

ஆரோ :—ஸரி மப தஸ

அவரோ :—ஸநி ஸ பத ம பம ரிகா ரிஸ

என்பதுதான் நியாயம்.

ஸநிஸப—மபரி காரிஸ—கா*ரிம—ரி*மப நி*தப

ரி*ம பம ரி*கா ரிஸ்—என்று அடிக்கடி வரும்.

மேலே * அடையாளமிட்ட ரிஷபங்கள் கூடுதலாகப் பேசும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "லேகனு" என்பது போல் முதலான கீர்த்தனங்களும் தீக்ஷிதரவர்களின் "சந்த்ரம்பஜ" என்ற கீர்த்தனமும் இதரக்ருதிகளும் உண்டு. அருணாசலக்கவிராயரின் கீர்த்தனைகளும் உண்டு.

25. பூபாலம் :—இது ஓர் ஔடுவ ராகம். 8-வது மேளத்தில் ஜன்யம். தேசிய ராகம் என்றே சொல்லலாம்.

ஆரோ :—ஸ ரிக பத ஸ

அவரோ :—ஸ த ப கரிஸ

ஸரி காக—பாப பதஸ தாப—தப காரி ஸரி—காரி கப காரி ஸா—தாத ப தாத கரிகா—ஸரி கரி கரி ஸா—தஸரி காக பாப பதப காரிஸ—ரிஸா தாபா காரிஸ போன்ற கிரமமான பிடிகளே ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

இதில் லக்ஷண கீதங்கள் உண்டு.

26. கண்டா :—இதற்கு 'கண்டாரவம்' என்ற பெயரும் உண்டு. இது 8-வது மேளத்தில் ஜன்யம். ஷாடவ ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் தைவதம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரி கா ம பநீ ஸ

அவரோ :—ஸநி தப மகரிஸ

பதப—மபதப—பம காரிஸ—நிஸ ரிஸ நி தப நிஸ—ஸரிகம பநித பம கரிஸ—ஸரிகம பம காரிஸ—ப நி ஸநித ம காரிஸ் போன்ற பிடிகளால் ராகஸ்வரூபம் விளங்கும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "கருணாஸாக்ஷாய" என்ற பஜனைக் கீர்த்தனம் ப்ரஸித்தம்.

27. நாகவராளி :—இது 8-வது மேளத்தில் ஜன்யம் இது தைவதாந்தராகமாகச் சிலகிரந்தங்களில் காணப்பட்ட போதிலும் ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் அடியிற் கண்ட ஸஞ்சாரம் காணப்படுகிறது.

ஆரோ :—நிஸ கரி கமபத

அவரோ :—பமகரி ஸநீ

ஸரிகம ப மத நி ஸா—ஸநித மப காரிஸ இதர இடங்களில் காணப்படும் லக்ஷணம்.

உதாரணம் :—கோவிந்தரின் லக்ஷண கீதம்.

28. பானுசந்த்ரிகா :—இது 8-வது மேளத்தில் ஜன்யம். வாத்தியங்களுக்கும் பாடுவதற்கும் இனிமையான ராகம்.

ஆரோ :—ஸம தநி ஸ

அவரோ :—ஸநிதம் கஸ

ஸஞ்சாரக்ரமத்தால் ராகச்சாயை நன்கு விளங்கும். இதை பாஷாங்க ராகம் என்றே சொல்லலாம்.

ஸா ஸ மா ம ஸ ஸ மா ம தா தநீ—தாநி தத நி ததம நித தம கம கஸ—ஸாஸ மாம கா ஸ ம கா—ஸா—தாநி தநி ததநீத தநிததம—மக தம நித ஸநி ஸநிதம தநிஸா, நி ஸ க ஸ, ம ம க ஸ, ஸஸ நிநி ததநி —ஸகஸ நி ஸ நி த நித நி தம தமகஸா போன்ற ஸஞ்சாரம் ராகஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

29. ஹிமாங்கி :—இதுவும் 8-வது மேளத்தில் ஜன்யம் வக்ர ஸம்பூர்ணம்—ராகாங்கம்.

ஆரோ :—ஸரி கம பதநித ஸ

அவரோ :—ஸநி பதமகரிஸ

ஸஞ்சார க்ரமத்தால் ரக்தி உண்டாகும்.

30. தந்யாஸி:—இதுவும் 8-வது மேளத்தில் உண்டானது. ஆரோஹணத்தில் ரிஷப்தைவதங்கள் வர்ஜ்யம். ஔடுவ ஸம்பூர்ண ராகம். காலை வேளைகளில் மிகுந்த ரக்தியை உண்டாக்கக் கூடியது. காந்தாரம் தைவதம் இவைகள் ஜீவஸ்வரங்கள்.

ஆரோ:—ஸ கம பநிஸ

அவரோ:—ஸநிதப மகரிஸ

கா ரி ஸநிதப கா ம பா—நி பா த ப மகரிஸா—நி தா ப நீ ஸ கா ம பா—நி பநிநிஸ தாப நிஸரிஸதாப கமபநிதாப ஸநிரிஸதாப—கக மம பப நிநி ஸ்கரிஸ பநி மப ஸரி—நிஸ—பநி—மப—கம பநி ஸா போன்ற ஸஞ்சாரம் ரஞ்ஜகம்.

இதில் அநேக உருப்படிகள் உண்டு.

உதாரணம்:—அய்யரவர்களின் "ஸங்கீத ஞானமு" "த்யானமே வர மைன" கோபாலகிருஷ்ண பாரதியின் 'கனகசபாபதி தரிசனம்' கவிகுஞ்சர பாரதியின் 'முற்றிலும் காத்தருள்வாயே' என்கிற கீர்த்தனைகள் ப்ரஸித்தம்.

31. தேனுக:—இது 9-வது மேளகர்த்தா ராகம் ஸம்பூர்ணம். சுத்த ரிஷப சாதாரண காந்தார சுத்த மத்ய சுத்த தைவத காகலி நிஷாதங்கள் சாயாஸ்வரங்கள். ஸாதாரண காந்தாரமும் காகலி நிஷாதமும் ராகத்தின் ஜீவஸ்வரங்கள். கமக ஒரிகைகளையுடைய ரக்தி ராகம் நிஷாதத்தைக் கவனமில்லாமல் பிடித்தால் தோடி ராகமாக மாறிவிடுவதால் நிகாவுடன் பாடவேண்டும்.

இதில் அய்யரவர்களின் "தெலிய லேரு ராமா" என்ற கீர்த்தனம் இருக்கிறது.

32. பிங்நஷட்ஜம் :—9-வது மேளத்தில் உண்டான வக்ர ஸம்பூர்ண ராகம் ரிஷப காந்தார நிஷாதங்கள் ராகச் சாயா ஸ்வரங்கள் ஆகையால் கார்வையுடன் பிடிப்பது ரஞ்ஜகம்.

ஆரோ :—ஸரிகரி பமபநிஸ

அவரோ :—ஸ்த ப ம கரிஸ

கரி மா—பம மா— ப நீ நீ ஸா—ஸதாப ம கா ரிஸ போன்ற பிடிகள் ராக ஸ்வரூபத்தை விளக்கும். "ஸரிவாரிலோ" என்ற தியாகய்யர் கீர்த்தனை உண்டு.

33. டக்க :—இந்த ராகம் 9-வது மேளத்தில் ஜன்யம் என்று சிலரும், 15-வது மேளத்தில் ஜன்யம் என்று சிலரும் அபிப்ராயப்படுவதாகத் தெரிகிறது. ஆனல் 9-வது மேளத்தில்தான் ஜன்யம் என்பது கிரந்தோக்தமான அபிப்ராயம். அனுபவத்திலும் அந்தர காந்தாரம் வருவதில்லை. ஸாதாரண காந்தாரம்தான் ரஞ்ஜகமாயிருக்கிறது. ஆகையால் 9-வது மேளமாகிய தெனுகாவில் ஜன்யம் என்பதே நியாயமான கொள்கையாகும்.

ஆரோ :—ஸ கம பம தநிஸ

அவரோ :—ஸநித பம கரிஸ

ஸ் கா ம பம தா—ம தா த—த நி நீ—த நி ஸ் நீ த த ப ம—நீ த ப ம—க ம ப த நீ த பம கா ரி ஸ— போன்ற ஸஞ்சாரம் ராக ஸ்வரூபத்தை விளக்கும்.

அய்யரவர்களின் "ராகா சசிவதன" என்ற கீர்த்தனம்.

34. சோகவராளி :—இதுவும் 9-வது மேளத்தில் பிறந்த நிஷாதாந்த ராகம். சோக ரஸத்தை இந்த ராகத்தின்மூலம்

மெய்ப்பிக்கலாம் என்று பெயரிலேயே தெரிகிறது. இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸ கா ம நீ

அவரோ :—த ப ம க ரி ஸ

35. நாடகப்ரியா :—இது 10-வது மேளகர்த்தா ராகம் சுத்த ஸம்பூர்ணம்—ரக்தி ராகம் சுத்த ரிஷபம் ஸாதாரண காந்தாரம்—சுத்த மத்யமம் சதுச்ருதி தைவதம்—கைசிகி நிஷாதம் ராகச் சாயா ஸ்வரங்கள். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

36. நடாபரணம் :—இது 10-வது மேளத்தில் ஜன்யம். ஸம்பூர்ணவக்ரம்—ராகாங்கம்.

ஆரோ :—ஸரி கம் பத பநி ஸ

அவரோ :—ஸநிதப மகமரிஸ

தீக்ஷிதர் அவர்கள் மதப்படி ஸஞ்சாரம்
ஸ க ம பநி தநி ஸா—ஸநி தநி பா நிப மகரிஸ
இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

வெங்கடமகியின் கீதமும் இருக்கிறது. தீக்ஷிதர் அவர்களால் "விச்வநாதம் பஜேஹம்" என்ற கீர்த்தனையும் செய்யப்பட்டிருக்கிறது.

37. தீபரம் :—இதுவும் 10-வது மேளத்தில் உண்டானது வக்ர ஸம்பூர்ணம்—ராகாங்கம்.

ஆரோ :—ஸரி கம பதநிஸ

அவரோ :—ஸநி தநி பம கரிஸ

இதற்கு லக்ஷண கீதம் இருக்கிறது.

38. கோகிலப்ரியா :—இது 11-வது மேளகர்த்தா ராகம். சுத்த ஸம்பூர்ணம். சுத்த ரிஷப, சாதாரண காந்தார

சுத்த மத்யமம்—சதுச்ருதி தைவத காகலி நிஷாதங்கள் ராகச்சாயா ஸ்வரங்கள். 'இதற்கு லக்ஷண கீதமும் உண்டு.

ஸ்நிஸ்—தநிஸ் — பநி தநி ஸ்ரி — ப்க்ரி ஸ்நிஸ் நி ஸ நி த ப — ப ப ம கம — கம பம நி த ம— ப த ப ம கா ம க ரிஸ—போன்ற ஸஞ்சாரம் ரஞ்ஜகம்.

இதில் உள்ள "தாசரதே" என்ற அய்யர் அவர்களின் கீர்த்தனை ராகஸ்வரூத்தை நன்கு விளக்கும்.

39. **கோகிலாரவம்:**—இது 11-வது மேளத்தில் உண்டான ஸம்பூர்ண வக்ரராகம்—ராகாங்கம்.

ஆரோ:—ஸ ரி க ரி ம ப த நி ஸ
அவரோ:—ஸ நி த ப ம க ரி ஸ

தீக்ஷிதரவர்களின் அபிப்ராயபடி ஸஞ்சாரம்:— ஸா ரி ம ம ப ம ப த நி ஸா—ஸ நி த த ப ம க ரி ரி ஸா. இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

தீக்ஷிதரவர்களின் 'கோதண்டராம மனிசம் பஜாமி' என்ற கீர்த்தனம் இருக்கின்றது.

40. **வர்த்தநீ:**—இதுவும் 11-வது மேளத்தில் ஜன்யம் ரிஷபம் வர்ஜ்யம்—வக்ர ஷாடவம்.

ஆரோ:—ஸ க ம ப ம ப த நி ஸா
அவரோ:—ஸ நி ப த ப ம க ஸா

கிரமமான ஸஞ்சாரங்களால் ராகஸ்வரூபம் விளங்கும். ஸ க ம மா ம க ஸ — க ம ப ம ப த ப ம— ம ப த நி ஸா நி—ப த பா ம க ஸா — நி ஸ க ம ப ம க ஸ போன்ற பிடிகள் ராகரஞ்ஜகமாகும்.

"மனஸா மனஸாமர்த்ய" என்ற அய்யரவர்களின் கீர்த்தனம் இருக்கின்றது.

41. சுத்தலலிதா:—இதுவும் 11-வது மேளத்தில் ஜன்யம் வக்ரஸம்பூர்ணராகம். ஆரோகணத்தில் ரிஷபகாந்தாரம் வர்ஜ்யம். அந்தர காந்தாரத்தை கவனமாய்ப் பிடித்து ராகச்சாயையை மெய்ப்பிக்கவேண்டும்.

ஆரோ:—ஸ ப ம த நி ஸ
அவரோ:—ஸ நி ஸ தா ப ம க ரி ஸ

பாடுவதற்கும் — வாத்யங்களுக்கும் — மிகவும் ரக்தியான ராகம். ஸ ப ம கா ரி ஸ — ஸ ரி ஸ நி ஸ — ஸா ஸ பா ம தா த நி ஸ தா ப ம—ம த நி ஸ தா ப ப ம கா ரி ஸ போன்ற ஸஞ்சாரம் ரஞ்ஜகம்.

42. ரூபவதி:—இது 12-வது மேளகர்த்தா ராகம் சர்வ ஸம்பூர்ணம். சுத்த ரிஷப ஸாதாரண காந்தாரம்—சுத்த மத்யம ஷட்ச்ருதி தைவதம் காகலி நிஷாதம் இவைகள் ராகச்சாயா ஸ்வரங்கள் இதில் லக்ஷண கீதம் உண்டு. அய்யர் அவர்களின் "நேமொராபெட்டி" என்ற கீர்த்தனமும் இருக்கிறது.

43. ரேளப்பியநகம்:—இது 12 வது மேளத்தில் ஜன்யம் ஆரோகணத்தில் ரிஷப காந்தாரம் வர்ஜ்யம் அவரோஹணம் ஸம்பூர்ண வக்ரம். ரக்தி ராகம். இதற்கு லக்ஷண கீதம் இருக்கிறது.

ஆரோ:—ஸ ம ப த நி ஸ
அவரோ:—ஸ த நி ப ம க ரி ஸ

44. போகவராளி:—இதுவும் 12-வது மேளத்தில் ஜன்யம் தைவத வர்ஜ்யமான ஷாடவ ராகம்.

ஆரோ:—ஸ ரி க ம ப நி ஸ
அவரோ:—ஸ நி ப ம க ரி ஸ

ஸஞ்சாரக்ரமத்தால் ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

45. காயகப்ரியா :—இது 13-வது மேளகர்த்தா ராகம் அந்தர காந்தாரம் தவிர இதர ஸ்வரங்கள் சுத்த ஸ்வரங்கள் ஸம்பூர்ணம்—இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

46. ஹேஜ்ஜஜ்ஜீ :—இது 13-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவ ஸம்பூரணம்—ராகாங்கம். மத்யமம் க்ருஹஸ்வரம்.

ஆரோ :—ஸ ரி க ம ப தஸ

அவரோ :—ஸ நி த ப ம க ரிஸ

தீக்ஷிதர் அபிப்ராயப்படி ஸ ரி ம க ம ப த ஸ—ஸ நி த ப ம க ரி ஸ என்று ஸஞ்சாரம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

உதாரணம் :—தீக்ஷிதரவர்களின் "ராமசந்த்ர பக்தம்" என்ற கீர்த்தனை.

47. கலகண்டீ :—இது ஓர் ஷாடவ ராகம். 13-வது மேள கர்த்தாவில் ஜன்யம். ஆரோகண அவரோகணங்களில் காந்தாரம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரி மப த நிஸ

அவரோ :—ஸ நி தப ம ரிஸ

சுத்த தைவத நிஷாதங்களை கவனமாய்ப் பிடித்துப் பாடவேண்டும் — ஸரிமா — ப தமா—ப த நிஸா நி தபமா—ம ரி ஸ ம ரிரி ஸ—நிஸநித பதநி—ரிம பத பமரி—பம ரீஸ போன்ற பிடிகள் ராகஸ்வரூபத்தை நன்கு விளக்கும். சுத்த ரிஷபத்தை நன்கு கவனித்து ஊன்றிப் பிடிப்பதால் ராகம் ரஞ்ஜகமாகும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "ஸ்ரீஜனகதனயே" என்ற கீர்த்தனம்.

48. **கல்கட் அல்லது கல்தட்** :—இதுவும் 13-வது மேளத்தில் ஜன்யமான ஓர் ஷாடவ ராகம் இதற்கு மத்யமம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரி கப த நி ஸ

அவரோ :—ஸ நி த ப க ரி ஸ

தைவத நிஷாதங்களை அஜாக்ரதையாய்ப் பிடித்தால் பௌளி, மலயமாருதம் இந்த ராகங்கள் கலந்து விடும்.

உதாரணம் :—"ஸமயமு யே மரகே" என்ற ஸ்ரீத்யாகய்யரின் கீர்த்தனம்.

49. **ஜஜ்ஜாஹுளி** :—இது ஓர் ஷாடவ வக்ர ராகம். இது 13-வது மேளத்தில் ஜன்யம் என்று கிரந்தங்களில் காணப்பட்டபோதிலும் இதில் சதுச்ருதி தைவதம் கைசிகி நிஷாதம் இவைகள்தான் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. "பராகு ஜேஸின நீ கேமி" என்ற த்யாகய்யர் கீர்த்தனையை வெகுகாலமாக இப்படியே பாடி வருகிறார்கள். சுத்த தைவத சுத்த நிஷாதங்கள் இரண்டும் சேர்ந்து வருவதால் இதை நிர்ணயமான ஞானமுள்ளவர்களா லன்றி மற்றோரால் ஏற்பட்ட லக்ஷணப்படி பாடி மெய்ப்பிக்க முடியாது. இதனாலேயே நாளடைவில் சதுச்ருதி தைவதமும் கைசிகி நிஷாதமும் கலந்து ராகஸ்வரூபத்தை மாற்றிவிட்டனவோ என்று ஸந்தேகிக்க இடமுண்டாகிறது.

ஆரோ :—ஸ ம க ம ப த நி ஸா

அவரோ :—ஸ த நி த ப ம க ஸ

ம க ஸா—ம க மா—ப நி த நி பா — பா த நி பா—த நி ஸ, ஸ த நி த பா—த நி ஸ ம் க் ஸ் என்ற பிடிகள் காணப்படுகின்றன.

50. **வகுளா பரணம்** :—இது 14-வது மேளகர்த்தா ராகம் ஸர்வ ஸம்பூர்ணம்—ரக்தி ராகம். அந்தர காந்தாரம் கைசிகி நிஷாதம் தவிர மற்றவை சுத்த ஸ்வரங்கள். இதற்கு லக்ஷண கீதம் உண்டு. இதில் "ஏ ராமுனி" என்ற அய்யரவர்கள் கீர்த்தனை ஒன்று இருக்கிறது—கர்ப்ப புரி வாஸ என்ற முத்திரையுள்ள "கொனியாட தரமா" என்ற கீர்த்தனையுமுண்டு.

51. **வஸந்த பைரவி** :—இது 14-வது மேளகர்த்தாவில் ஜன்யமானது ஆரோகணத்தில் பஞ்சமம் வர்ஜ்யம். அவரோஹணம் வக்ர ஸம்பூர்ணம். ரக்தி ராகம் எப்போதும் பாடக் கூடியது.

ஆரோ :—ஸரி கம தநி ஸா

அவரோ :—ஸநி தம பம கரிஸா

உதாரணம் :—அய்யரவர்களின் "நீ தய ராதா" என்ற கீர்த்தனம். இதில் ராகத்தின் ஸ்வரூபம் நன்கு விளங்குகிறது.

52. **வஸந்த முகாரி** :—இதுவும் 14-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் ரிஷபம் வர்ஜ்யம். அவரோகணம் ஸம்பூர்ணம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு. ரக்தி ராகம்.

ஆரோ :—ஸ ம க ம பத நிஸ

அவரோ :—ஸ நி த ப மக ரிஸ

53. **ராகவஸந்தம்** :—இதுவும் 14-வது மேளகர்த்தாவில் ஜன்யம் ரக்தி ராகம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸ ரி ம ப நி த ஸ

அவரோ :—ஸ நி த ம ப ம க ரி ஸ

ஸ ரி ம ம க ரி ஸ — ரிம ம க ரி ஸ நி — த ம ப நி த ஸ ரி — ரி ம ப நி நி த ம ப நி த ஸ நி த ம போன்ற ஸஞ்சாரம் ராகஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

54. மாயாமாளவகௌள :—இது மூன்றுவது சக்ரத்தில் மூன்றுவதான 15-வது மேளகர்த்தா ராகம் ஸர்வஸம்பூர்ணம். அந்தர காந்தாரம், காகலி நிஷாதம் தவிர மற்றவை சுத்த ஸ்வரங்கள். இதில் வரும் ஸ்வரங்கள் கோமலமாகவும் தீவரமாகவும் மாறி மாறி வருவதால் இந்த ராகத்தை ப்ரதமஶிக்ஷா ப்ரகரணத்தில் அப்யாஸம் செய்ய சொல்லி வைக்கிருர்கள். இதில் ஸரளி வரிசை ஜண்டை வரிசை தாட்டு வரிசை, அலங்காரம் எல்லாம் சொல்லப் படுவதுடன் இதில் ஜன்யமான பிலஹரியில் கீதமும் ஆரம் பிக்கப்பட்டு வருகிறது. இது, காலையில் பாடக் கூடியது. மிருந்த ரக்தி ராகம். இதில் அனேக கீர்த்தனங்கள் உருப் படிகள் உள.

55. கௌள :—இது 15-வது மேளத்தில் ஜனித்த புராதன, வக்ரஷாடவகன ராகம். தைவதம் வர்ஜ்யம். இதைப் பாடும் போது சுருதிஸ்வரூபத்தை யுணர்ந்து ஆலாப னம் செய்யவேண்டும். இதில் வரும் சுத்த ரிஷபம் தோடி சுத்த ரிஷபத்தை விடக் கொஞ்சம் குறைவு காந்தாரம் கொஞ்சம் தீவ்ரம் இதைக் கேட்டு உணர்வது அவசியம்.

ஆரோ :—ஸ ரி க ம ரி ம ப நி ஸ

அவரோ :—ஸ நி ப ம க ம ரி ஸ

உதாரணம் :—அய்யாவர்களின் பஞ்சரத்ன கீர்த்தனைகளில் ஒன்றுகிய "துடுகு கல" என்றது ப்ரஸித்தம். இந்த க்ருதி ஸ்வர ஸாஹித்யத்துடன் இருப்பதால் இதை அப்யஸித்தல் அவசியம்.

56. ஸாவேரி :—இது 15-வது மௌத்தில் ஜன்யம் ஆரோஹணத்தில் காந்தாரம் வர்ஜயம் அந்தரகாந்தாரம்—சுத்த மத்யமம் சுத்த தைவதங்கள் ராகச்சாயா ஸ்வரங்கள். இந்த ராகத்தில் கவனிக்கக் கூடிய விஷயம் இதில் வரும் அந்தர காந்தாரமும் காகலி நிஷாதமும் குறைவாய் பேசுகிறது என்பதுதான். இதை கவனியாமல் பாடினல் ராகத்தில் ரக்தி உண்டாகாது. ஸ ரி கா ரி ஸ என்று பிடிக்கையில் காந்தாரம் குறைந்தும் ப ம கா ரிஸ என்ற பிடியில் காந்தாரம் ஸரியான அந்தர காந்தாரமாகவும் ப த நி த ப—ஸ ரி ம ப த நி என்று பிடிக்கும்போது நிஷாதம் குறைந்தும் நி ஸ ரி ஸ நி த ப என்றபிடியில் நிஷாதம் காகலியாகவும் பேசும். இதை லக்ஷ்யத்தால் நன்குணர்ந்து பாடுதல் சிலாக்யம். இதில் அநேக உருப்படிகள் உண்டு,

ஆரோ :—ஸ ரி ம ப த ஸ

அவரோ :—ஸ நி த ப மக ரி ஸ

57. மலஹரி :—இது ஓர் ஔடுவ ஷாடவ ராகம் 15-வது மேளத்தில் ஜன்யம் பாடுவதற்கும் சுலபமான ராகம். ஆகையால் அப்யாஸிகளுக்கு அனுகூலமாய் இதில் பிள்ளையார் கீதம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு லக்ஷண கீதமும் உண்டு.

ஆரோ :—ஸரி மப தஸ

அவரோ :—ஸத பம கரிஸ

தீக்ஷிதரவர்களின் "பஞ்சமா தங்கமுக கணபதி ஞ பரிபாலி தோஹம்" என்ற கீர்த்தனையில் ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

58. ஸிந்துராமக்ரியா :—இதுவும் 15-வது மேள ஜன்யம் ஷாடவ வக்ரம்—ரிஷபம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸ க ம ப த நி ஸ

அவரோ :—ஸ நி ப த ப ம க ஸ

அய்யரவர்களின் "தேவாதி தேவ"; "ஸுதா மாதுர்ய பாஷண" என்ற கீர்த்தனங்களில் ராகஸ்வரூபம் நன்கு விளங்குவதைக் காணலாம்.

59. ஜகன்மோஹநி :—15-வது மேளகர்த்தாவில் ஜன்யம் ஔடுவஷாடவராகம்—காந்தாராம் ஜீவஸ்வரம், காகலி நிஷாதம் சாயாஸ்வரம்.

ஆரோ :—ஸ க ம ப நி ஸ

அவரோ :—ஸ நி ப ம கா ரி ஸ

அய்யரவர்களின் "சோபில்லு" "மாமவ ஸததம்" என்ற கீர்த்தனைகளில் ராகஸ்வரூபம் நன்கு விளங்குகின்றது.

60. நாதநாமக்ரியா :—இது 15-வது மேளத்தில் ஜன்யம். நிஷாதாந்த ராகம், மத்யம காந்தாரங்கள் ஜீவஸ்வரம் நிஷாதம்வரையில்தான் ஸஞ்சாரமாகையால் தாரஸ்தாயி ஷட்ஜத்தை கொஞ்சமும் காட்டக்கூடாது. மத்யஸ்தாயி ஸஞ்சாரமாகையால் மத்யமசுருதியில் பாடுவது விசேஷ ரஞ்ஜகம்.

ஆரோ :—ஸ ரி ம க ம ப த நீ

அவரோ :—நி த ப ம க ரி ஸ நி ஸ ரி கா

இதில் அநேக கீர்த்தனைகளும், பதங்களும் இருக்கின்றன.

61. மேகரஞ்ஜி :—இது 15-வது மேளகர்த்தாவில் ஜன்யம் ஓர் ஔடுவராகம் உபாங்கராகம்.

ஆரோ :—ஸ ரி க ம நீ ஸா

அவரோ :—ஸ நி மா க ரி ஸா

மத்யம நிஷாதங்கள் சாயாஸ்வரம். இந்த ராகத்தை முற்காலத்தில் இருந்த ஒரு வித்வான் பாடி மழை பெய்யும்படி செய்ததாக கர்ண பரம்பரையான கேள்வி உண்டு.

ஸ ரி க மா ம கா ம நீ நீ—ஸ நி மா ம கா — ரி ஸ நி ஸ ரி ஸ க ரி க மா ம கா — ரி க ம க ரி ஸா நி ஸ ரி கா — க ம நீ ம கா—ஸ நி மா க ரீ ஸா, போன்ற பிடிகள் ரஞ்சகம். இதில் உருப்படிகள் மிகஸ்வல்பம். தீக்ஷிதரவர்களால் எட்டியாபுரம் ராஜா அவர்கள் பேரில் பார்த்த "வெங்கடேச்வர மெட்டப்ப" என்ற கிருதி உண்டு.

62. பௌளி:—இது 15-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஓர் ஔடுவ ஷாடவராகம். உதய காலத்தில் மிகுந்த ரக்தியைக் கொடுக்கக் கூடியது.

ஆரோ:—ஸ ரி க ப த ஸ

அவரோ:—ஸ நி த ப க ரி ஸ

காந்தாரம ந்யாய ஸ்வரமாகையால் கா,—ப த ப த நி த ப க ரி ஸ—தா ஸ ரி க ரி கா—த ப க ரி—க த ப த க ப ரி க ரி ப க ரி— ஸ க ரி ப க த ப நி த ப க ரி—கா க த பா ப த கா ரி க ரீ ஸா போன்ற காந்தார ஸம்பந்தமான பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம்:—அய்யரவர்களின் "மேலுகோவய்யா" என்ற கீர்த்தனம்.

63. ஸாளங்க நாட:—இது 15-வது மேளத்தில் ஜன்யம். உபாங்க ராகம்—கனராகமாகப் பாடக்கூடியது. ஆரோகணத்தில் காந்தார நிஷாதங்கள் வர்ஜ்யம். அவரோகணம் வக்ர ஸம்பூர்ணம். ஸாயங்காலத்தில் விசேஷ ரக்தியுள்ளது.

ஆரோ :—ஸ ரி ஸ ம ப தஸ

அவரோ :—ஸ நி ஸ த ப ம க ரி ஸ

ஸங்கீத ஸம்ப்ரதாயப்ரதர்சினியில் ஸ ரி ம ப த ஸ— ஸ நி த ப ம க ரி ஸ என்று கொடுத்திருக்கும் ஸஞ்சாரம் அனுபவத்தில் ஸாவேரியைப்போலவே யிருப்பதால் மேலேகண்ட ஆரோக அவரோகணங்களே ராகஸ்வரூபத்தை நன்கு விளக்குகிறது. இதற்கு லக்ஷண கீதமும் உண்டு.

64. மேசபௌளி :—இது 15-வது மேளத்தில் ஜன்யம். ஓர் ஔடுவ ஸம்பூர்ண ரக்தி உபாங்க ராகம்.

ஆரோ :—ஸ ரி க ப த ஸ

அவரோ :—ஸ நி த ப ம க ரி ஸ

ஸஞ்சாரக் கிரமத்தினலேயே ஸ்வரூபம் நன்கு விளங்கும். லக்ஷண கீதமும் உண்டு "தேவி திவ்ய ஸாமஸுந்தரி" என்ற கீர்த்தனை தீக்ஷிதரவர்களால் செய்யப்பட்டிருக்கிறது.

65. ஆர்த்ரதேசிகா :—இது 15-வது மேளத்தில் உண்டான உபாங்க ராகம்—ஸம்பூர்ண ஷாடவம்.

ஆரோ :—ஸ ரி க ம ப த நி ஸ

அவரோ :—ஸ த ப ம கா ரி ஸ.

லக்ஷணகீதம் உண்டு. ஸஞ்சாரக்ரமத்தினலேயே ஸ்வரூபம் விளங்கக்கூடிய ரக்திராகம்.

உதாரணம் :—தீக்ஷிதரவர்களின் "ஸ்ரீகணேசாத்ய" என்ற கீர்த்தனம்.

66. குர்ஜ்ஜரி :—இதுவும் 15-வது மேளத்தில் ஜன்யம்.

ஆரோ :—ஸ ரி க ம ப த நி ஸ

அவரோ :—ஸ த நி ப ம க ரி ஸ

சுத்தமத்யம சுத்ததைவத காகலி நிஷாதங்கள் ராகச் சாயா ஸ்வரங்கள். இதற்கு லக்ஷண கீதம் இருக்கிறது.

உதாரணம் :—அய்யரவர்களின் "வராலந்து கொம்மநி" என்ற கீர்த்தனம்.

67. ப, ரஜு :—இதுவும் 15-வது மேளத்தில் ஜன்யம். ஷாடவ ஸம்பூர்ணம். ரக்திராகம், காந்தாரம், மத்யமம் ஜீவஸ்வரங்கள், காந்தாரம் ந்யாஸ ஸ்வரம்.

ஆரோ :—ஸ ரி க ம த நி ஸ.

அவரோ :—ஸ நி த ப ம ப கா ரி ஸ

ஸ கா ம ப ம தநி ஸா—ஸ நி த பம—ம நி த ப ம க ம ப—ஸ நி த ப ம ப க ம ம நி த ம க ரி க ம தா த நி ஸ ரி ஸ—நி க ரிஸ் நி த நிஸ—த ஸ நி த ப ம ப க— க ம நி த ம கா ரி ஸ போன்ற பிடிகள் ராக ரஞ்சகம். இதில் அநேக க்ருதிகள் ஜாவளிகள் இருக்கின்றன. இதற்கு லக்ஷண கீதமும் உண்டு.

68. ரேகுப்தி.—இதுவும் 15-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஔடுவ ராகம். ஆரோகண அவரோகணங்களில் மத்யம நிஷாதங்கள் வர்ஜ்யம். சுத்தரிஷப அந்தரகாந்தார சுத்ததைவதங்கள் ராகச்சாயா ஸ்வரங்கள். உதயகாலத்தில் பாடக் கூடிய ராகங்களாகிற "பூபாலம்" "பௌளி" இந்த வர்க்கத்தைச் சேர்ந்தது. இரவு 4-வது ஜாமத்தில் பாடினால் இந்த ராகத்தின் பூர்ண ரக்தியும் நன்குவிளங்கும். ஆனால் எப்போதும் பாடலாம்.

ஆரோ:—ஸ ரி க ப த ஸ

அவரோ:—ஸ் த ப க ரி ஸ

உதாரணம்:—அய்யரவர்களின் "க்ருஹபல மேமி" என்ற கீர்த்தனம்.

69. குண்டக்ரிய:—இதுவும் 15-வது மேளகர்த்தாவில் உண்டான ரக்திராகம். வக்ர ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் காந்தாரதைவதங்கள் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸ ரி ம ப நி ஸ்

அவரோ :— ஸ் நி ப த ப ம க ரி ஸா

"ஸ நி ப த ப ம" என்ற வக்ரஸஞ்சாரம் அடிக்கடி இதில் வருவதால் இதன் ஸ்வரூபம் இன்னும் நன்கு விளங்கும்.

நி ஸ ரி ஸ நி ரி ஸ நி ப த ப ம கா—ஸ ரி மா ப நி ஸ நி ப த ப ம கா—நி ப ஸநி ப த ப ம க ரி ஸ—ரி மா ம நீ நி — ஸ ரீ ரி ஸ நி ப த ப ம க ரி—ரி ம ப நி ஸ ரி க ரி ஸ நி ப த ப ம க ரி ஸா—மா ம பா ப நீ நீ ம ப நீ நீ ப த ப ம—க ரி ஸ நி ப நி ஸா போன்ற ஸஞ்சாரங்கள் மிகவும் ரஞ்சகம்.

தியாகய்யரவர்களின் "இந்தநுஸா வர்ணிம்ப தரமா" என்னும் கீர்த்தனை.

70. கௌரீ—இதுவும் 15-வது மேளத்தில் ஜன்யம். கிரந்தங்களில் காணப்படுகிறபடி ஆரோகண அவரோகணங்கள் ஸ ரி ம ப நி ஸா—ஸ நி த ப ம க ரி ஸ என்றிருந்தாலும் உற்று நோக்குங்கால் ஸ ரி ம ப ஸ் நி ஸ—மா த ப ம க ரி ஸ என்ற கிரமம் தான் அனுபவ ஸித்தமாகவும் ரஞ்ஜகமாகவும் இருக்கிறது. ப ஸ நி ஸ என்ற பிடிக்கு ஸ மா த ப மா என்ற பிடி ஸம்வாதிப்பொருத்தமுள்ளது. ப்ரஸ்தரிக்கையில் ரிஷபத்தை ந்யாஸ ஸ்வரமாகவைத்து ப்ரஸ்தரிக்க வேண்டும் துரைஸாமி அய்யரவர்களின் "தூர்ஜடி நடிஞ்சே" என்ற கீர்த்தனை தகுந்த உதாரணம். தியாகய்யர் அவர்களின் "ஜயஜயஸ்ரீரகுராம" என்ற திவ்ய நாம கீர்த்தனையும் போதிய சான்றாகும்.

71. கௌளீபந்து :—இந்த ராகம் 15-வது மேளத்தில் ஜன்யமானது. கிரந்தங்களில் காணப்படும் ஆரோக அவரோகணங்கள் ஸ ரி ம ப நிஸ—ஸ நி த ப ம க ரி ஸ என்றும் ஸ ரி க ரி ம ப த ப நிஸ—ஸ நி த ப ம க ரி ஸ என்றும் காணப்பட்டாலும் அனுபவரீதியாய்ப் பார்க்குங்கால் இந்த ராகத்தில் ப த ப ம—ம ப த மா போன்ற பிடிகளில் மத்யமம் கூடுதலாக பேசுவதை லக்ஷ்யத்தால் கண்டுபிடிக்கலாம். ஆனால் இது தேசியமல்ல. சுருதிகளின் விவரஞானமுள்ளவர்களுக்கு இந்த மத்யமம் சுத்தமத்யமத்தை விடக் கூடுதலாகவும் ப்ரதிமத்யமத்தைவிடக் குறைவாகவும் பேசுவது நன்கு தெரியும் ஆகையால் இந்த ராகத்தை நல்லகேள்வியின் பேரில் அப்பியாஸம் செய்ய வேண்டும். மத்யமம் ஜீவஸ்வரம்.

ஆரோ :—ஸ ரி ம ப நீ ஸ

அவரோ :—ஸ நி த ப ம ப த மா க ரி ஸ

அய்யரவர்களின் "தொரதீயகராதா" என்ற கீர்த்தனம் இதற்குத் தகுந்த உதாரணமாகும்.

72. மங்களகைசிக :—இதுவும் 15-வது மேளத்தில் உண்டான ரக்திராகம். வக்ர ஸம்பூர்ணம் ஆரோகணத்தில் ரிஷபம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸ ம க ம ப ம தா நி ஸ

அவரோ :—ஸ நி த ப ம க ரி ஸ

இதற்கு லக்ஷணகீதம் உண்டு.

73. மார்க்கதேசிகா :—இதுவும் 15-வது கர்த்தாவில் ஜன்யம். ஷாடவ வக்ரம்—ரக்திராகம்.

ஆரோ :—ஸ ரி க ப த ஸ

அவரோ :—ஸ த ம ப க ரி ஸ

இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

74. பாடி :—இதுவும் 15-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஷாடவராகம். காந்தாரம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸ ரி ம ப நி ஸ

அவரோ :—ஸ நி ப த ப ம ரி ஸ

ஸஞ்சாரக் கிரமங்களினாலேயே ராகஸ் வரூபம் விளங்கும். இரவில் முதல் ஜாமத்தில் பாட மிகுந்த ரக்தியைக் கொடுக்கும் ராகம். இதில் கீதங்களும் லக்ஷணகீதமும் இருக்கின்றன. தீக்ஷிதரவர்களால் "ஸ்ரீ குருணா பாலிதோஸ்மி" என்ற கீர்த்தனமும் இருக்கிறது.

75. கண்டைபங்காளா :—இது 15-வது மேளத்தில் உண்டானது. வக்ரஷாடவராகம் உபாங்கராகம் நிஷாதம் வர்ஜ்யம். இதற்கு காந்தாரம் கிரஹஸ்வரம். காலையில் பாடக் கூடிய ராகம்.

ஆரோ :—ஸ ரி ம க ம த ப த ஸ

அவரோ :—ஸ த ப ம க ரி ஸ

இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

உதாரணம் :—"ரேணுகா தேவி ஸம்ரக்ஷிதோ மஹாமனிசம்" என்ற தீக்ஷிதர் கீர்த்தனை.

76. பூர்வீ.;—இது 15-வது மேளகர்த்தாவில் ஜன்யம் பாஷாங்கராகம் வக்ர ஸம்பூர்ணம். எப்போதும் பாடக் கூடியது இதற்கு லக்ஷண கீதம் இருக்கிறது.

ஆரோ :—ஸ ரி க ம ப த நி த ஸ

அவரோ :—ஸ நி த ப ம த ம க ரி ஸ

உதாரணம் :— "ஸ்ரீ குருகுஹஸ்ய தாஸோஹம்" என்ற கீர்த்தனம்.

77. பூர்ணபஞ்சமம் :—இது 15-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஓர் தைவதாந்த ஷாடவராகம் பாஷாங்க ராகம்—

நிஷாதம் வர்ஜ்யம். க்ருஹஸ்வரம் ஷட்ஜம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு. மத்யஸ்தாயிஸஞ்சார மாகையால் மத்யம சுருதியில் பாடினால் மிக ரஞ்ஜக மாயிருக்கும்.

ஆரோ:—ஸ ரி க ம ப த

அவரோ:—த ப ம க ரி ஸ

உதாரணம்:—தீக்ஷிதர வர்களின் "ஸாது ஜனசித" என்ற கீர்த்தனம்.

78. ராமகலி:—இது 15-வது மேளகர்த்தாவில் உண்டான ராகம், ஓர் பாஷாங்க ராகம் ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் இதன் லக்ஷணம் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. ஆரோகணத்தில் மத்யம நிஷாதங்கள் வர்ஜ்யம். காலை நேரத்தில் பாட விசேஷ ரஞ்ஜகமாயிருக்கக் கூடியது. இது உத்தர தேச ரக்தி ராகம். மத்யமத்தை ப்ரதிமத்யமமாய்ப் பிடித்துப் பாடுவது ஸம்ப்ரதாய மாயிருக்கிறது. "பிபாஸ்" என்று இதற்கு வட தேசத்தில் பெயர்.

ஆரோ:—ஸ ரி க ப த ஸ

அவரோ:—ஸ நி த ப ம க ரி ஸ

க க த ப — த ம ப க — தா ப ம கா — த ஸ ரி கா ம க த ப ம க — ஸ ரி க ம கா போன்ற பிடிகள் ராக ரஞ்ஜகம்.

உதாரணம்:—தீக்ஷிதரவர்களின் "ராமராம கலிகலுஷ" என்ற கீர்த்தனம்.

79. சக்ரவாகம்:—இது 16-வது மேளகர்த்தாராகம். ஸர்வ ஸ்வர ஸம்பூர்ணம். சுத்தரிஷப அந்தர காந்தார சுத்த மத்யம சதுசுருதி தைவத கைசிகி நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள் ரக்தி ராகம் சுத்த ரிஷப கைசிகி நிஷாதங்கள் ஜீவஸ்வரங்கள். இதில் அனேக கிருதிகள் உண்டு.

அய்யரவர்களின் "ஸுகுண மூலே" "எடுலப்ரோது" என்ற கீர்த்தனங்களும் பட்டினம் சுப்பரமணியய்யரின் "இங்க தய ராதா" கீர்த்தனைகளிலும் ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

80. மலயமாருதம் :—இது 16-வது மேளகர்த்தாவில் ஜன்யம் ஷாடவராகம் மத்யமம் வர்ஜ்யம். கிரமமான ஸஞ்சாரத்தினலேயே ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

ஆரோ :—ஸ ரி க ப த ஸ

அவரோ :—ஸ நி த ப க ரி ஸ

காந்தார நிஷாதங்கள் ராகச் சாயா ஸ்வரங்கள். இதை எப்போதும் பாடலாம். ஆனல் அதிகாலையில் பாட அதிக ரக்தி யுண்டாகும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "மனஸா எடுலோர்த்துனே" என்ற கீர்த்தனம்.

81. பிந்துமாலினி :—இது 16-வது மேளகர்த்தாவில் ஜன்யம். எப்போதும் பாடக்கூடிய ரஞ்ஜக ரக்தி ராகம். வக்ர ஸம்பூர்ணம். அந்தர காந்தாரமும் கைசிகி நிஷாதங்களும் ராகச்சாயா ஸ்வரங்கள்.

ஆரோ :—ஸ க ரி ம ப த ப நி ஸ

அவரோ ;—ஸ நி ஸ த ப க ரி ஸ

உதாரணம் :—"எந்த முத்தோ" என்ற அய்யரவர்களின் கீர்த்தனை.

82. கலாவதி :—இது 16-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஔடுவ வக்ர ஷாட வராகம் ஆரோகணத்தில் காந்தார நிஷாதங்களும் — அவரோகணத்தில் நிஷாதமும் வர்ஜ்யம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸ ரி ம ப த ஸ.

அவரோ :—ஸ் த ப ம க ஸ ரி ஸ.

ரி ம ப த ரி ம கா ரி ஸ—ஸ ரி மா மா த த ப ம க ரி ஸ ரி — ப த ப ம கா ஸ ரி ஸ ரிம பா — ப த ஸ் ரி ம கா — ரி ஸ ரி ஸ தா ப — ம க ப ம த ப த ஸ த ப — போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—தியாகய்யரவர்களுடைய "என்னடு ஜூது ரோ" என்ற கீர்த்தனம்.

83. வேகவாஹினி :—இது 16-வது மேளகர்த்தாவில் உண்டான வக்ர ஸம்பூர்ண ராகம். சுத்த மத்யம சதுச்ருதி தைவத கைசிகி நிஷாதங்கள் இராகச் சாயாஸ்வரங்கள். இது எப்போதும் பாடக் கூடிய ராகம். மத்யம தைவதங்களை நியாஸஸ்வரங்களாய்க் கொண்டு ராக விந்யாஸம் செய்ய வேண்டும்.

ஆரோ :—ஸ ரி க ம ப த நி த ஸ

அவரோ :—ஸ நி த ப ம க ரி ஸ.

ஸ ரி க மா ம பா ப — மா ப ம ப தா ப — ப த நி த ஸா — நி தா ப ம க மா — ப ம கரி க மா ம ப த நி த த ஸ — ஸ நி த ப — ம நி த நி த ம த த நி த ஸா போன்ற பிடிகள் ராகஸ் வரூபத்தை விளக்கும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "சல்ல கநாதோ" என்ற கீர்த்தனம்.

84. புஜங்கிணி :—இதுவும 16-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஷாடவராகம். பஞ்சமம் வர்ஜ்யம். இதில் உருப்படிகள் விசேஷமாகக் காணப்படாவிட்டாலும் ராகத்தின் அமைப்பு பெயருக்கேர்ப்ப வக்ரப்பிடிகளாகவேயிருப்ப

தால் நிகாவுடன் பாடி ரஞ்ஜகத்தை உண்டாக்க வேண்டும். இதற்கு லக்ஷண கீதம் இருக்கிறது.

ஆரோ :—ஸரிஸ மகம நிதநிஸா

அவரோ :—ஸநித மகரிஸ

ரிரிஸ ஸாரிஸ—ரிஸ்நி தநிஸநி ஸமக மகரிஸ—நிதநி ஸாஸா—ரிஸா மகரிஸ—மகம ஸரிஸம—கம தம நிதம—தாநி தநிதம தநிஸ ஸநிதா—நிதநி ஸரிஸா—கரிஸ மகமா மகரி ஸரிஸ — தநிஸ கமநிதா — மகம ஸரிஸா ஸநித மகரிஸ போன்ற பிடிகள் மிகவும் ரஞ்ஜகம்.

85. ஸூர்யகாந்தம் :—இது 17-வது மேளகர்த்தா ராகம். ஸர்வ ஸ்வர ஸம்பூர்ணம். சுத்தரிஷப அந்தர காந்தார சுத்தமத்யம சதுசுருதி தைவத காகலி நிஷாதங்கள் ராகச்சாயா ஸ்வரங்கள். எப்போதும் பாடக்கூடிய ரக்தி ராகம். கமக ஒரிகைகளுடன் ப்ரஸ்தாரம் செய்ய வேண்டும்.

உதாரணம் :—“முத்து மோமு” என்ற அய்யரவர்களின் கீர்த்தனம்.

86. ஸுப்ரதீபம் :—17-வது மேளகர்த்தாவில் ஜன்யம். அவரோகணத்தில் காந்தாம் வர்ஜ்யம். அவரோகணத்தில் வக்ர ஸம்பூர்ணம்.

ஆரோ :—ஸரிம பதநிஸா

அவரோ :—ஸநி தப மக மரிஸ

தாப மபகப மதபம கமரிஸ—நித நிஸ ரிமாம பாப—தநிஸநிதப மகம பதநிஸா—ஸரிமகம ரிஸா—நிதா பம கமரிஸ நிஸா—போன்ற பிடிகள் ராகஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "வரசிகிவாஹன" என்ற கீர்த்தனம்.

87. பைரவம் :—இது 17-வது ஸூர்யகாந்தத்தில் ஜன்யம். ஆரோஹணம் ஸம்பூர்ணம். அவரோகணத்தில் நிஷாதம் வர்ஜ்யம். சுத்தரிஷப சுத்தமத்யம காகலீ நிஷாதங்கள்—ராகச்சாயா ஸ்வரங்கள். அவரோகணத்தில் தைவதத்தை ஊன்றிப் பிடிக்க வேண்டும்.

ஆரோ :—ஸரிகம பதநிஸா

அவரோ :—ஸதாபம கரிஸா.

தநிஸதாப—பாமகம பதநிஸதாப—மதபம கரி ஸா—தாதா பமகம போன்ற பிடிகள் ரக்தியுள்ளவைகள்.

உதாரணம் :—தியாகய்யரவர்களின் "மரியாதகாதய்யா" என்ற கீர்த்தனம்.

88. வஸந்தா :—இது 17-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆனால் இந்த ராகம் 15-வது மாயா மாளவ கௌளையில் ஜன்யம், என்று கிரந்தங்களில காணப்பட்டாலும அனுபவ ரீதியாய்ப் பார்கையில் சுத்த தைவதமே இதில் வாராமலிருப்பதாலும் சதுச்ருதி தைவதமே பிடித்து பாடப்பட்டு வருவதாலும் இது 17-வது மேளகர்த்தாவாகிய ஸூர்யகாந்தத்தில் ஜன்யம் என்பது மிகவும் பொருந்தும். ஆரோகணத்தில் "ஸகமதநி" என்ற ஔடுவப்ரயோகம் விசேஷமாய்க் காணப்பட்டாலும் "ஸரிகம" என்பது சிலர் கொள்கை. அவரோஹணத்தில் 'ஸநித மகரிஸ" என்ற ஷாடவப்ரயோகம் கிரந்தங்களில் காணப் பட்டாலும் அனுபவத்தில் "மகாம" என்ற வக்ரப்ரயோகம் அடிக்கடி வருவதாலும் இதை ஓர் ஷாடவவக்ர ராகம் என்றே சொல்ல வேண்டும்.

ஆரோ :—ஸகரிக மதநிஸ
அவரோ :—ஸ்நிதம கா்மரிஸ*

ஸகரிக மாம—கமதநிஸநிதம — ரிஸாநிதநி ஸ்நி—ஸகரிஸ நிதமக—தநிஸ நிதமகம—தநிதம கமதம—கமகரி ஸ்நிஸா போன்ற ஸஞ்சாரம் ரஞ்சகம்.

உதாரணம் :—"எட்ல தொரிகிதிவோ" என்ற அய்யரவர்களின் கீர்த்தனம்—கோபால கிருஷ்ணபாரதியாரின் "நடனமாடினர்" என்ற கீர்த்தனமும், பிரஸித்தம்.

ஸங்கீத ஸாம்பரதாயப்ரதர்சனியில் இது 15-வது மேள கர்த்தாவில் ஜன்யமென்றும் ரிஸகம தநிஸ—ஸநிதநி தம கமத மகரிஸ என்ற ஆரோஹண அவரோகணங்கள் குறிக்கப்பட்டு "ராமச்சந்திரம் பாவ" என்ற கீர்த்தனமும் காணப்படுகிறது.

89. லலிதா :—இது 17-வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம். ஆனாலும் 15-வது மேளகர்த்தாவின் ஜன்யம் என்பது சிலர் கொள்கை. அனுபவத்தில் சதுச்ருதிதைவதமே இதற்கு ஜீவஸ்வரமாக அமைந்திருப்பதால் இது 17-வது கர்த்தாவாகிய ஸூர்யகாந்தத்தில்தான் ஜன்யம் என்று தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. இது ஓர் வக்ர ஷாடவராகம அந்தர காந்தார சுத்தமத்யம, சதுச்ருதி தைவதங்களே ராகச்சாயாஸ்வரங்கள், பஞ்சமம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸமகம தநிஸ
அவரோ :—ஸ்நிதம கரிஸ

உதாரணம :—அய்யரவர்களின் "ஸீதம்ம மாயம்மா" என்ற கீர்த்தனம.

90. ஸெளராஷ்ட்ரம் :—இது 17-வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம் ஆனல் 15-வது மேளத்தில் ஜன்யமென்று கிரந்தங்களில் காணபபட்டாலும் 17-வது மேளகர்த்தாவில்

---

* "மதம" என்ற பிடிகளில் தைவதம் சுத்த தைவதமாக சிலர் பிடிக்கிறார்கள்.

ஜன்யம் என்பது மிகவும் பொருந்தும் ஏனென்றால் சுத்த தைவதப்ரயோகம் காணப்படவில்லை இந்த ராகம் கம்பீரம் பொருந்திய மங்களகரமான பாஷாங்க ராகம், இதைப்பாடுவதற்கு அனுபவம் முக்யம். தைவதம் ரிஷபம் இவைகளை தீர்கமாகப் பிடிப்பதாலும் — பமதாநிஸ — ஸநிஸதா பம கம ரீ போன்ற பிடிகளில் கமக ஒரிகையுடன் பிடிப்பதாலும் நிஷாதங்களை ஆரோகண அவரோகணங்களில் அறிந்து பிடிப்பதாலும் ராகத்தின் பூர்ணஸ்வரூபம் விளங்கும். சுத்த ரிஷபத்தை ஊன்றிப்பிடிக்க வேண்டும். சிலஇடங்களில் சுத்த தைவதம் வரும்.

ஸநிஸ—நிஸநிஸ—ரிஸநி தாப போன்ற பிடிகளில் காகலி நிஷாதமும் —கமபதநிதபம — மபதநீ தபம போன்ற பிடிகளில் கைசிகி நிஷாதமும் பேசும். தவிர மகம என்ற ப்ரயோகம் வரும்போது காந்தாரம் ஒருச்ருதி கூடுதலாகப் பேசுவதை லக்ஷியஞான்த்தால் தான் அறியலாம் ஸரிகாமபதநீஸா—ஸநிதாப மகரீஸ என்று ஸம்பூர்ணமாய்ப் பிடிக்கும்போது தீர்க்கஸ்வரங்களை. ஏற்ற ஏற்ற ஜாருக்களுடன் கவனித்துப் பிடிப்பதால் ராகஸ்வரூபத்தை விளக்கி விடலாம். கேள்வி அனுபவம் இவைகள் முக்யம்.*

ஆரோ :—ஸரிகம பமதநிஸ

அவரோ :—ஸநிதாப மகமரீஸ

உதாரணம் :—அய்யரவர்களின் — "ஸ்ரீ கணபதி" "நிந்நாமரூபமு" என்ற கீர்த்தனைகள் பிரஸித்தம்.

91. ஹாடகாம்பரி :—இது 18-வது மேளகர்த்தா ராகம் ஸர்வஸ்வரஸம்பூர்ணம். மூன்றாவது சக்ரத்தில் கடைசி ராகம். ஷட்ச்ருதி தைவத சுத்தரிஷப, அந்தரகாந்தார சுத்த மத்யம காகலி நிஷாதங்கள் ராகச்சாயாஸ்வரங்கள் இதில் லக்ஷணகீதம் உண்டு.

---

* கமபத நிதாப என்ற விடத்தில் சிலர் இரண்டாவது "த" வை சுத்ததைவதமாக பிடிக்கிறார்கள்.

92. சுத்தமாளவி :— இது 18-வது மேளகர்த்தாவில் ஜன்யம் வக்ரஸம்பூர்ண ராகம். சுத்தரிஷப அந்தரகாந்தார— ஷட்ச்ருதிதைவத, காகலி நிஷாதங்கள் ராகச்சாயாஸ்வரங் கள். இதில் லக்ஷண கீதம் உண்டு—ரக்திராகம்.

ஆரோ ;—ஸகரிக மபதாநிஸ

அவ்ரோ :—ஸதநிப மகரிஸ

93. கல்லோலம் :—இது 18-வது மேளத்தில் ஜன்யம். ஆரோகணத்தில் வக்ர ஔடவம் ரிஷப காந்தாரங்கள் வர்ஜ யம். அவரோகணத்தில் ரிஷபம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸபம தநிஸ

அவரோ ;—ஸநிதநி பமகஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு.

94. ஜங்காரத்வநி ;—இது 4-வது சக்ரத்தில் முதல் ராகமாகிய 19-வது மேளகர்த்தா சுத்த தைவத நிஷாதங் களை கவனமாய் பிடிக்க வேண்டும். சதுச்ருதி ரிஷபம் ஸாதாரண காந்தாரம் சுத்தமத்யம சுத்த தைவதம் சுத்த நிஷாதம ராகச்சாயா ஸ்வரங்கள். எப்போதும் பாடக் கூடியது.

உதாரணம் :— "பணிபதி சாயிக்" என்ற அய்ய ரவர்களின் கீர்த்தனம்.

95. சித்தரஞ்ஜநி :—இது 19-வது மேளகர்த்தாவில் ஜன்யம் நிஷாதாந்த ராகம். இதில் உள்ள அய்யர் அவர் களின் "நாததநு மனிசம்" என்ற கீர்த்தனையைப் பாடு கையில் அநேகர் தைவத நிஷாதங்களைக் கூடுதலாய் பிடித்துப் பாடுவதால் இது 22-வது மேளகர்த்தாவில் ஜன்ய மான ராகமோ என்ற ஸந்தேஹம் உண்டாக ஹேது இருக் கிறது.

ஆரோ :—ஸ ரி க ரி க ம ப தா
அவரோ :—நி த ப ம ரி க ரி ஸ

96. பூர்ணலலித :—இது 19-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஔடுவ ஸம்பூர்ண ராகம். ஆரோகணத்தில் தைவத நிஷாதங்கள் வர்ஜ்யம். அவரோஹணம் ஸம்பூர்ணம்.

ஆரோ :—ஸ ரி க ம ப ஸ.
அவரோ :—ஸ நி த ப ம க ரி ஸ.

ஸரிகரி மபஸ—ஸநிதப மகரிஸ என்ற கொள்கையும் இருப்பதாகத் தெரிகிறது.

உதாரணம் :—அய்யர வர்களின் "கலுகுநாபத" என்ற கீர்த்தனம்.

97. நடபைரவி :—இது 20-வது மேளகர்த்தாராகம் ஸர்வ ஸ்வர ஸம்பூர்ணம். இதில் லக்ஷண கீதம் உண்டு. ரிஷப காந்தார சுத்த தைவத நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள்.

உதாரணம் :—தியாகய்யர் கீர்த்தனை "சேதுல்லார" இதை விளக்கும். ப்ராசின வித்வான்கள் இதை இப்படி பாடினர்.

98. பைரவி :—இது 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம் பாஷாங்கம். ஸம்பூர்ண ரக்தி ராகம். பூர்வாசார்யர்களால் ப்ராசீன கர்த்தா ராகங்கள் என்று வகுக்கப் பட்டிருக்கிற 18-பிரஸித்த ராகங்களில் இதுவும் ஒன்று. ஆகையால் நாம் இதை ஒரு கட்டுபாட்டில் உள்ளடக்கி லக்ஷணம் எழுதமுடியாது. அவரோகணத்தில் சுத்ததைவதமும் ஆரோகணத்தில் சதுச்ருதி தைவதமும் பேசுவதால் இதை 20-வது மேளகர்த்தாவில் ஜன்யமான பாஷாங்க ராகம் என்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் இந்த

ராகத்தை நன்கு கவனித் தோமானல், இதில் அநேகமாய் 12 ஸ்வரங்களும் பேசி வருகிறதென்றே சொல்லவேண்டும். இந்த ராகத்தின் பூர்ண ஸ்வரூபம் தெரிந்துகொள்ள வீணை, கோட்டு வாத்தியம் முதலான தந்தி வாத்யங்களில் இந்த ராகம் வாசிக்கப்படும்போது நன்ருக கவனிக்க வேண்டும். அப்போது ஒவ்வொரு ஸ்வரமும் அதனதன் கீழ்ஸ்வரத்திலிருந்து கமக ஒரிகைகளுடன் வாசிக்கப்படுவதை நாம் காணலாம். பஞ்சமம் பிடிக்கப்படும்போதுகூட அதன் கீழ்ஸ்வர மாகிய ப்ரதிமத்யமத்திலிருந்து பிடித்த முக்கப் படுவதை நன்கு காணலாம். தவிர இதன் ரிஷபம் சதுச்ருதி ரிஷபத்திற்கு கொஞ்சம் குறைவாகப் பேசுவதையும் ஸாதாரண காந்தாரம் கொஞ்சம் கூடுதலாய் பேசுவதையும்— நிநித தாநி தத மா நித பமா தபமகரீ காம பத ப தா நி— போன்ற இடங்களில் தைவதம் ஸமயோசிதம் போல் கூடுதலாகவும் குறைவாகவும் பேசுவதை அனுபவத்தினல்தான் கண்டு கொள்ளவேண்டும்.

தவிர ககரி ரிஸரிஸ நிநிதநி ஸரிமமப பததநிநி பபப ததத நிநி ஸஸரி பதநிஸ ரிகமப தபமதபா பொன்ற ஜன்டை வரிசை ஸஞ்சாரங்கள் இதற்கு மிகவும் ரஞ்ஜகம்.

> மாமகாரி, ஸரீகம, நீத தாதமா, நிதமா, மதநீ ததம ஸநிதமா கரிஸா போன்ற பஞ்சம வர்ஜ்யமான பிடிகளும் இதற்கு ரஞ்ஜகமானவை.

இந்த ராகத்தின் பூர்ணஸ்வரூபத்தையும் சீக்கிரத்தில் நன்கு தெரிந்து கொள்ள "விரிபோணி" என்ற வர்ணத்தையும், "கொலுவை யுன்னடே" என்ற அய்யாவர்களின் கீர்த்தனையையும் "பாலகோபால" என்ற தீக்ஷிதர் அவர்களின் கீர்த்தனையும் அப்பியாசம் செய்தால் அதிசீக்ரம் தெரிந்து கொள்ளலாம். இந்த ராகத்திற்கே அனுபவம் தான் ப்ரதானம்.

99. ஆனந்தபைரவி :—இதுவும் 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம். இது மிகவும் ரக்தியை தருகின்ற ராகம். ஆரோகணத்தில் ரிஷப தைவதம் வக்ரம். அவரோகணத்தில் வக்ர ஸம்பூர்ணம். உற்று நோக்குங்கால் ப்ராசீனராகமான இதிலும் பைரவி ராகதிற்குள்ள அனுஸ்வரங்கள் பேசுவதை அறியலாம். உதாரணமாக—ஸ்க ரிக என்கிற பிடியில் காண்பது கம கம என்று பேசுகின்றது அறியலாம். பஸ்நிஸ் நிதபா என்ற பிடியில் முதல் நிஷாதம் கைசிகி நிஷாதத்தைவிட சற்றுக் கூடுதலாக பேசுவதைக் காணலாம். ரிஸா நிதபா மகரி கம பத பமகரிஸா என்ற ஸஞ்சாரத்தில் முதல் தைவதம் சதுச்ருதியாகவும் இரண்டாவது தைவதம் சுத்தமாகவும் பேசும். பமக மா மகாரி கம பா என்ற பிடியில் முதலில் பேசும் காந்தாரம் மத்யமங்களுக்கிடையே வருவதால் கூடுதலாயும் அடுத்த இரண்டும் குறைந்தும் பேசுவதை அறியலாம். ஆகையால் இந்த ராகத்தையும் அனுபவ பூர்வமாய் அறிந்து கொள்ளுதல் சிலாக்யம். இதில் எண்ணிறந்த உருப்படிகள் இருக்கின்றன.

ஆரோ :—ஸகரிகம பதபஸா
அவரோ :—ஸநிதப மகரிஸ

ஆரோஹணத்தில் ஸகரிகமப நிநிஸா என்ற ப்ரயோகமும் உண்டு.

100. ரீதிகௌளை :—இது 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஓர் வக்ர ஸம்பூர்ண ரக்தி ராகம் சுத்த தைவத ப்ரயோகம் இதில் வருவதால் இதை 20-வது மேளத்தில் ஜன்யம் என்று சொல்வதே முறையாகும், சதுஸ்ருதி தைவதம் கலப்பதனால் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம் என்று சிலர் அபிப்ராயப் படுவதுண்டு. ஆகவே இது ஓர் பாஷாங்க ராகம் ஆகும் பைரவியில் பேசும் அனுஸ்வரங்கள் இதில் சிற்சில இடங்களில் வரும்.

ஆரோ :—ஸகரிகம நிதம பநிஸ
அவரோ :—ஸநிதம பதமாகரிஸ

அவரோகணத்தில் பதமா என்ற இடத்தில் சுத்த தைவதம் பேசும். மற்ற தைவதங்கள் சதுசுருதி தைவதந்தான். ஆகையால் இந்த ராகத்தை அனுபவத்தில் தான் அறியவேண்டும்.

உதாரணம் :—அய்யர் அவர்களின் "படலிகதீர" "சேரராவதேமிரா" என்ற கீர்த்தனங்கள்.

101. ஸாரமதி :—இது 20வது மேளத்தில் ஜன்யமான ஸம்பூர்ண ஷாடவ ராகம். ஆரோகணத்தில் ஸம்பூர்ணம். அவரோகணத்தில் பஞ்சம ரிஷபங்கள் வர்ஜ்யம். இதில் சுத்த தைவதப்ரயோகங்கள்தான் காணப்படுவதாலும் சதுச்ருதி தைவதப்ரயோகம் மருந்துக்குக் கூடக்கிடையாதாகையாலும் இதை 20-வது மேளகர்த்தாவின் ஜன்யம் என்பதே அனுபவ ரீதியாகவும் பொருந்தும்.

ஆரோ :—ஸரிகம பதநிஸ
அவரோ :—ஸநித மகஸ

உதாரணம் :—அய்யரவர்களின் "மோக்ஷமுகலதா" என்ற கீர்த்தனை.

102. சுத்ததேசி இது ஓர் ஷாடவ ஸம்பூர்ண ராகம் 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் காந்தாரம் வர்ஜ்யம்—சுத்த தைவத கைசிகி நிஷாதங்களும், சதுசுருதி ரிஷபமும் ராகச்சாயாஸ்வரங்கள். மத்தியமத்தை நியாஸஸ்வரமாகச் சொல்லலாம். எப்போதும் பாடக்கூடிய ரக்திராகம், இதற்கு லக்ஷணகீதம் உண்டு.

ஆரோ :—ஸரிமாபதநிஸா
அவரோ :—ஸநிதப மகரிஸ

உதாரணம் :—அய்யரவர்களின் "ரகுநந்தன" என்ற கீர்த்தனம்.

103. ஹிந்தோளம் :—20-வது மேளகர்த்தாவில் ஜன்யம் ஔடுவவக்ரராகம் இதைச் சிலர் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ராகம் என்று வாதிக்கிறார்கள். ஆனால் கிரந்த ரீதியாகவும் அனுபவரீதியாகவும் அதற்கொருவிதமான ஆதாரத்தையும காணோம். தவிரவும் சுத்த தைவதப்ரயோகம் தான் ரஞ்ஜகமாயிருக்கிறது. பாடாந்தரபேதங்களால் ஒருக்கால் தைவதம் கூடுதலாய்ப் பிடிக்கப்பட்டு வருவதையொட்டி 22-வதில் ஜன்ய மென்று அபிப்ராயப்பட்டு வரலாம். உத்தர தேசத்தில் பாடப்பட்டு வரும் "மால்கோஸ்" என்ற ராகம் இதன் சாயையாகவே யிருப்பதை லக்ஷ்யத்தாலறியலாம்.

ஆரோ :—ஸமகம தநிஸ

அவரோ :—ஸநித மகரிஸ

ஸங்கீத ஸம்ப்ரதாயப்ரதர்சினியில் ஸகமநிதநிஸ—ஸ்நித மகஸ என்ற அபிப்ராயம காணப்படுகிறது.

இதில் "ஸாமஜவரகமந" "மனஸுலோனி" என்ற அய்யரவர்களின் கீர்த்தனமும் தீக்ஷிதரவர்களின் "நீரஜாக்ஷி" என்கிற கீர்த்தனமும் இருக்கின்றன.

104. ஹிந்தோளவஸந்தம் :—இது 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம, வக்ர ஷாடவம், இதற்கு லக்ஷணகீதம் உண்டு.

ஆரோ :—ஸகமா பதநிதஸா

அவரோ :—ஸநித பமகத மகஸ

இதில் சுத்த தைவதப்ரயோகம்தான் ரஞ்ஜகம்.

உதாரணம் :—"ராரா ஸீதா" என்ற அய்யரவர்களின் கீர்த்தனம்.

105. மார்க்க ஹிந்தோளம் :—இது ஓர் ஸம்பூர்ண ஷாடவராகம் 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு. அவரோகணத்தில் ரிஷபம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம பதநிஸ.

அவரோ :—ஸநிதப மகஸ.

இது பாடுவதற்கு மிகவும் ரக்தியான ராகம் "சலமேலரா" என்ற அய்யாவர்களின் கீர்த்தனம இதற்கு உதாரணம்.

106. ஜயந்தஸ்ரீ :—இது 20-வது மேளத்தில் ஜன்யமான ரஞ்சக ராகம். ஔடுவ ஷாடவம். ஆரோகணத்தில் ரிஷப பஞ்சமங்கள் வர்ஜ்யம். அவரோகணத்தில் வக்ர பஞ்சமம்; ரிஷபம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸகம தநிஸ

அவரோ :—ஸநிதம பமகஸ

ஸகம கஸ—கம தநி தம பமகஸ—மதநிஸா நிதநிஸ நீதம பாமகஸ—ஸகஸாநிதநீ — தநிஸா நிதமா — கமபாமகஸா. போன்ற ஸஞ்சாரங்கள் மிகுந்த ரஞ்சகம். "மருகேலரா" என்ற அய்யாவர்களின் கீர்த்தனம் தகுந்த உதாரணம்.

107. ஜிங்கலா :—இது ஓர் வக்ரஸம்பூர்ண ராகம். 20-வது மேளத்தில் ஜன்யம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிகம பதநி தபஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

வக்ர தாட்டுப்ர யோகங்கள் ரஞ்ஜகம்.

உதாரணம் :— "அநாதுடநு காநு" என்ற அய்யாவர்களின் கீர்த்தனம்.

108. வஸந்தவராளி :—இது ஓர் நிஷாதாந்த ராகம். 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிமப தநீ

அவரோ :—நிதபா கரிஸநீ

"பாஹி ராமதூத" என்ற அய்யரவர்களின் கீர்த்தனம் இதற்கு உதாரணம்.

109. அம்ருதவாஹிநி :—இது ஓர் ஷாடவ ஜன்யராகம். 20-வது மேளத்தில் உண்டானது. ஆரோகணத்தில் காந்தாரமும், அவரோகணத்தில் பஞ்சமும் வர்ஜ்யம். ரக்தி ராகம். இதில் லக்ஷண கீதமும் உண்டு.

ஆரோ :—ஸரிமா பதநிஸ

அவரோ :—ஸநித மகரிஸ

மத்தியமத்தை நியாஸ ஸ்வரமாகவைத்து வின்யாஸம் செய்தல் ரஞ்சகம் (உதாரணம்) ஸரிமா—பதபா—பதநிதமா—பதநிஸ நிதமா—தநிஸரி ஸநிதமா—கரிஸாநிதமா—ரிமா மகரிமா—ரிமகரிஸரிமா. அய்யரவர்களின் "ஸ்ரீராமபாதமா" என்ற கீர்த்தனை தகுந்த உதாரணம்.

110. கோகிலவராளி :—20-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ரஸம்பூர்ண ரக்திராகம்.

ஆரோ :—ஸரிகரி மபத நிதஸ

அவரோ :—ஸதநித பமரிகரிஸ

ஸரிகரிஸ—ரிகரிமாம—ரிகரிஸ — ரிமபத பமரிகரிஸ ரிமபத நிதபம—தநி தஸ நிதஸா—ஸரிகரிஸதநி—பத நித ஸதநித பமரிகரிஸ—போன்ற வக்ரமான பிடிகள் ரஞ்சகத்தைத்தருகின்றன. தியாகய்யரின் "ஸமுகான நில்வ" என்ற கீர்த்தனம் உதாரணம்.

111. உதயரவி சந்த்ரிகா :—இது 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம் ஔடவராகம்—ரிஷப—தைவதங்கள் வர்ஜ்யம் காந்தார நிஷாதங்கள் ராகச்சாயாஸ்வரங்கள். தைவத வர்ஜ்யமான இந்த ராகம் 20—வது மேளத்தை ப்ரஸ்தார செய்கையில் அடிபட்டுப் போவதால் 22-ல். ஜன்ய மென்பது பொருந்தாது. கிரந்தங்களில் 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம் என்றுதான் லக்ஷணகீதம் ஏற் பட்டிருக்கிறது.

ஆரோ :—ஸகம பநிஸ

அவரோ :—ஸநிப மகஸ

நிபநிநிபா—பமகமகா—மகஸநி ஸகமப நிபஸநிப மாப நிபநி, மபநி, ஸகமபநி ஸகம கஸநி ஸகஸாநிபம—நி பாம பமகஸ போன்ற ஸஞ்சாரங்கள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் “எந்த நேர்ச்சின எந்த ஜூசின” என்ற கீர்த்தனம்.

112. ஹிந்துஸ்தான் கானடா :—இது 20-வது மேளத்தில் ஜனித்த தேசியராக்திராகம், பாஷாங்கம்.

ஆரோ :—ஸ்ரிகா மபநீதாநிஸ

அவரோ :—ஸதா நீபகாரீஸ

இதில் வரும் ஜாருக்களை கவனித்து பிடிக்க வேண்டும். ஆரோகணத்தில் காந்தாரத்தை மத்யமத்திலிருந்து இழுத்தும் தைவதத்தை நிஷாதத்திலிருந்து இழுத்தும் இறக்க ஜாருவாகப் பிடித்தால் தான் ராகச்சாயை நன்கு விளங்கும். தவிரவும் காந்தார தைவதங்கள் ராகச்சாயாஸ்வரங்கள். அவரோகணத்தில் தைவதத்தை மேல் ஷட்ஜத்திலிருந்தும் காந்தாரத்தை பஞ்சமத்திலிருந்தும் இழுத்து பிடிக்க வேண்டும். இந்த ராகத்தைப் பாடுகையில் கர்நாடக கானடாவை கலக்காமல் பாடுவதுதான் பூர்ண

ரக்தியைக் கொடுக்கும். காலஞ்சென்ற தஞ்சை கிருஷ்ண பாகவதரவர்களின் காலம் முதல் காலக்ஷே பங்களில் இந்தராகம் அதிகமாகப் பாடப்பட்டு வரு கின்றது. ஸரிகாமபா—நீபகா—கமபநீபகா நிஸரிஸ தாநீபகா—கமபநிதாநிப—மபகாம பாநீபகாரீஸாதா நீப தா நீ ஸா போன்ற பிடிகள் மிகவும் ரஞ்சகம். அநேக தில்லானுக்களும் கதை உருப்படிகளும் இந்த ராகத்தில் உண்டு.

113. ஆபேரி :—இது ஓர் ஔடுவ ஸம்பூர்ண ராகம். கிரந்தங்களில் 20-வது மேளத்தில் ஜன்யம் என்று தான் காணப் படுகிறது. ஆனல் அனுபவத்தில் இந்த ராகத்தில் சுத்த தைவதத்திற்குப் பதிலாய் சதுசுருதி தைவதமே பிடித்துப் பாடுகிறுர்கள். ஆகையால் இது 22-வது மேள மாகிய கரஹர ப்ரியாவில் ஜன்யம் என்று அபிப்ராயப் படுவோரும் உண்டு. கிரந்தங்களில் காணப்படும் லக்ஷண கீதங்களில் 20-வது மேளத்தில் ஜன்ய மென்று தான் எழுதப் பட்டிருப்பதால் நாளடைவில் சுத்ததைவதப்ரயோகம் கூடுத லாய்ப் பிடிக்கப் பட்டு சதுசுருதியாக மாறியிருக்கலாம், என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. இதற்கு ஆரோகண த்தில் ரிஷப தைவதங்கள் வர்ஜ்யம். அவரோஹணம் ஸம் பூர்ணம்.

ஆரோ :—ஸகம பநிஸா

அவரோ :—ஸநிதப மகரிஸ்

உதாரணம் :—அய்யரவர்களின் "நகு மோமு" என்ற கீர்த்தனம். 20-வது மேளத்தை அனுசரித்து பாடினல் தான் ரஞ்சகம் அதிகரிக்கும்.

114. தேவக்ரிய :—இந்த ராகத்தைப் பற்றி பற்பல அபிப்ராய பேதங் களிருப்பதோடு கிரந்தங்களில் காணப்

படும் லக்ஷணத் திற்கும் அனுபவத்தில் காணப்படும் லக்ஷணத்திற்கும் மிகுந்த வித்யாசம் இருப்பதால் இதைப் பற்றி முடிவான தீர்மானம் சொல்ல முடியாது. ஸங்கீத ஸம்ப்ரதாயப்ரதர்சினியில் இந்த ராகத்தை 28-வது மேளகர்த்தாவில் ஜன்ய மான ஒளடுவ ராகம் என்றும் காந்தார நிஷாதங்கள் வர்ஜ்யம் என்றும் எழுதப் பட்டிருக்கிரது. அதன்படி பார்த்தால் ஸரிமப தஸ — ஸதப மரிஸ என்ற ஆரோகண அவரோகண க்ரமமுள்ள சுத்த ஸாவேரிக்கும் தேவக்ரியாவுக்கும் வித்யாசமே இல்லாமல் போய் விடுகிறது. ஆகையால் அந்த அபிப்ராயத்தை ஆமோதிக்க இடமில்லை. அய்யரவர்களின் "நாடி மாட" என்ற கீர்த்தனை தேவக்ரியாவில் செய்யப்பட்டதாகப் புஸ்தங்களில் காணப் பட்டாலும் அனுபவத்தில் கரஹரப்ரியாவின் சாயையிலேயே அது பாடப்பட்டு வருகிறது. தவிரவும் கிரந்தங்களில் காணப் படுகிறபடி நிஷாதாந்த ராகமாகவும் பாடப்படவில்லை. ஆகையால் இதற்குத் தகுந்த உதாரணம் சொல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கிரந்தங்களில் காணப் படும் லக்ஷணகீதத்தில் இது 20-வது மேளகர்த்தா நடபைரவியில் உண்டான ராகம் என்றும்

ஆரோ :—ஸரிகம நிதநீ

அவரோ :—பதமக ரிஸநீ

என்றும் காணப்படுவதால் அதே அபிப்ராயத்தை இவ்விடம் குறிப்பிட்டிருக்கிறோம்.

115. மாஞ்ஜி:—இது ஓர் வக்ரஸம்பூர்ணராகம். 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம், பைரவி ராகத்தில் பேசும் அனுஸ்வரங்கள் அவ்வளவும் இதில் பேசும் ஆரோகண அவரோகணங்களில் ஸமயோசிதம்போல் சதுச்ருதி தைவதம் சுத்த தைவதம் இரண்டும் பேசும். ஆகையால் இதன் ஸ்வ

ரூபத்தை கேள்வியாலும் அனுபவத்தாலும் தான் அறிய வேண்டும்.

ஆரோ :—ஸரிகம பதநிஸ

அவரோ :—ஸநிதப காரிகஸ

உதாரணம் :—சாமா சாஸ்திரிகளின் "ப்ரோவவம்மா" என்ற கீர்த்தனையும் கோபாலகிருஷ்ண பாரதியின் "வருகலாமோ" என்கிற நந்தனார் சரித்திர கீர்த்தனையும் சொல்லலாம்.

116. கோபிகாவஸந்தம் :—இதுவும் நடபைரவியில் ஜன்யம் ஆரோகணத்தில் ரிஷப காந்தாரம் வர்ஜ்யம். தைவத நிஷாதங்கள் வக்ரம், அவரோகணத்தில் ரிஷபம் வர்ஜ்யம் இதற்கு லக்ஷண கீதம் உண்டு. பாஷாங்க ராகம்.

ஆரோ :—ஸம பநித நிதஸ

அவரோ :—ஸநிதப மகஸ

உதாரணம் :—தீக்ஷிதரவர்களின் "பாலகிருஷ்ணம்" என்ற கீர்த்தனை.

117. நாககாந்தாரி :—இது 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம். நிஷாதாந்த ராகம் இதற்கு லக்ஷண கீதம் இருக்கிறது. உபாங்க ராகம். ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சனியில் இது ஸம்பூர்ண ராகமாகக் காணப்படுகிறது. "மன்னாரு ரங்கதேவா" என்ற கீர்த்தனமும் காணப்படுகிறது.

ஆரோ :—ஸரிகம பதநீ

அவரோ :—நிதபம கரிஸநீ

மத்யம சுருதியில் பாடினால் மிகவும் ரஞ்ஜகமாயும் மருடி ராகத்தை ஒத்து இருப்பதையும் காணலாம்.

118. நாராயணதேசாதி :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 20-வது மேளத்தில் ஜன்யம். மிருந்த ரக்திராகம்.

ஆரோ :—ஸரிஸக மபதப நிஸ.

அவரோ :—ஸநிதப மகரிஸ.

வக்ர ஸஞ்சாரங்கள் மிகுந்த ரக்தியைக் கொடுக்கும். உதாரணமாக :—

ஸரிஸ காம பமபா—பதப மகரி மகரிஸா—ஸகம பாம பமகஸ—பதப நீதஸ நிதபா—பாம காம பாதபா—ஸகம மாநி பாதபா—தபம கரிஸ ஸகமபா—தபநி ஸரிஸ காரிஸ—ஸரிஸகா மகரிஸா — ஸநித பாம காரிஸ போன்ற ஸஞ்சாரங்கள் ரஞ்ஜகம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

119. சாபகண்டாரவம் :—இதுவும் 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம். நிஷாதாந்தம் ஆரோகணத்தில் ரிஷப தைவதங்களும் அவரோகணத்தில் பஞ்சமும் வர்ஜ்யம். மத்யம சுருதியால் பாடவேண்டியது. மிகுந்த ரக்திராகம் இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸகம பநீ

அவரோ :—தமகரி ஸநிஸ

120. பூர்ணஷட்ஜம் :—இது 20-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் ரிஷப காந்தார நிஷாதங்கள் வர்ஜ்யம். வக்ரம்—அவரோகணத்தில் பஞ்சமம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸபமப தபஸ

அவரோ :—ஸநித மகரிஸ

இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

121. கநகவஸந்தம் :—இதுவும் 20-வது மேளத்தில் ஜன்யமான ராகம். ஆரோகணத்தில் ரிஷபம் வர்ஜ்யம்—வக்ரம் — அவரோகணத்தில் ஸம்பூர்ணம். ரக்தி ராகம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸகம பநிதஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ.

நிநிதப நிதஸ—ககமக கரிஸ—பநித ஸாஸ—ககமக கமா—பமபநி தபநிதஸா—ஸரிஸ கக மகரிஸ ஸாநித பமபா—மபநித ஸநித—தஸநித பமகரி—பநிதப மக ரிஸ போன்ற ஸஞ்சாரம் ரஞ்ஜகம்.

122. **சுத்தஸாளவி** :—இது 20-வது மேளத்தில் உண்டான ரக்தியான ஔடுவ ராகம். ஆரோகணத்தில் ரிஷப தைவதங்களும், அவரோகணத்தில் தைவத காந்தாரங்களும் வர்ஜ்யம். ஸஞ்சார க்ரமங்களினலேயே ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

ஆரோ :—ஸகம பநிஸ

அவரோ :—ஸநிப மரிஸ

சதுச்ருதி ரிஷபமும் ஸாதாரண காந்தாரமும் ராகச் சாயா ஸ்வரங்கள்.

ஸகமப மரிஸ—கமபநி பமரிஸ—பநிஸநி பமரிஸ—பமரிஸ ஸகமப—மபநீநீ பமரிஸ—ஸநிபம பநிப மரிஸ போன்ற பிடிகள் ராக ரஞ்ஜகம்.

123. **சுத்தரங்கிணி** :—இதுவும் 20-வது நடபைரவியில் ஜன்யமான ஔடுவ ஷாடவம். ரக்திராகம் ஆரோகணத்தில் ரிஷப தைவதங்களும் அவரோகணத்தில் பஞ்சமும் வர்ஜ்பம். கிரமமான ஸஞ்சாரங்களினலேயே ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

ஆரோ :—ஸகம பநிஸ

அவரோ :—ஸநித மகரிஸ

ஸகம கரிஸ—கமப மகரிஸ—கமபநி தமகரி ஸ—ஸக மபாமகரிஸ—மபநீநீ தமா பநித மாகரிஸ—ஸாநி பநிஸாநி தமகரி ஸ—ஸகரிஸா நிதமாபா—ஸகம

கரிஸ நிதமா பா—பாநிதம கரிஸ போன்ற ஸஞ்சாரம் ராகரஞ்ஜகம்.

124. கீரவாணி :—இது 21-வது மேளகர்த்தாராகம் ஸர்வ ஸ்வர ஸம்பூர்ணம். சதுச்ருதி ரிஷப ஸாதாரண காந்தார சுத்த தைவத காகலி நிஷாதங்கள் ராகச்சாயா ஸ்வரங்கள் ரக்திராகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "கலிகி யுண்டே காதா" என்ற கீர்த்தனம்.

125. கிரணாவளி :—இது 21-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஸம்பூர்ண ஷாடவ ராகம் அவரோகணத்தில் நிஷாதம் வர்ஜ்யம்—ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிகம பதநிஸ

அவரோ :—ஸதாப மகரிஸ

ஸ்தாப மகரி கமா—பதநிஸ ரிஸகரி ஸதா பமகரிஸ—பஸாஸ ரீரீ ஸரிகாரிஸ மகரிஸ தாப தநிஸதாப மகபம தபநித ஸாதப மகாரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "ஏடியோசன" "பராகு நீ கேலரா" என்ற கீர்த்தனைகள்.

126. கல்யாணவஸந்தம் :—21-வது மேளத்தில் ஜன்யமான ஔடுவ ஸம்பூர்ணம் ஆரோகணத்தில் ரிஷப பஞ்சமங்கள் வர்ஜ்யம். அவரோகணம் வக்ரம்.

ஆரோ :—ஸகம தநிஸ

அவரோ :—ஸநிதம பமகரிஸ

உதாரணம் —"நாத லோலு" என்ற அய்யரவர்களின் கீர்த்தனம்.

127. ஜயஸ்ரீ :—இது 21-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஓர் ஸம்பூர்ண வக்ர ராகம்.

ஆரோ :—ஸரிகம பதநிதஸ

அவரோ :—ஸ்நிதப மகரிஸ

இது ராகாங்கம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

128. நாகதீபகம் :—21-வது மேளகர்த்தாவில் உண்டான ஔடுவ ராகம். ஆரோகணத்தில் தைவத நிஷாதங்களும்—அவரோகணத்தில் பஞ்சம ரிஷபங்களும் வர்ஜ்யம். ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிகம பஸ

அவரோ :—ஸநித மகஸ

ரிகமா மமாபத மகஸா—பஸாநி தமகஸ—ஸ்நிதப ஸாஸ்ரி ரீகஸ ஸநிதப ஸாநிதமபா மகஸா போன்ற ஸஞ்சாரம் ரஞ்ஜகம்.

129. கரஹரப்ரியா :—இது 22-வது மேளகர்த்தா ராகம் அதாவது நாலாவது சக்ரத்தில் நான்காவதான ராகம், மிகவும் முக்கியமான கர்த்தாராகம். இதில் வரும் ஸ்வரங்கள் அவ்வளவும் ஸாமவேதத்தில் வரும் ஸ்வரங்கள் என்று அனுபவ லக்ஷ்யத்தால் அறியலாம். இந்த ஸாமவேத ஸ்வரங்களைத் தான் சுத்த ஸ்வரங்கள் என்று பாதர்சாரங்க தேவர் முதலான பூர்வாசார்யர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இன்றைக்கும் உத்தரதேசத்தில் இந்தக்கரஹரப்ரியாராகத்தைத் தான் ப்ரதமசிக்ஷாப்ரகரணங்களுக்கு ஏற்படுத்தி சொல்லிவைக்கிறார்கள். கர்ணபரம்பரையாக இன்றைக்கும் கானம்பண்ணப்படும் ஸாமவேதத்தை ஒரு வீணை அல்லது வேறு தந்திவாத்யங்களில் பிடித்து வாசித்துப்பார்த்தோமானால் தாரஸ்தாயி ஷட்ஜத்தை நடுஸ்வரமாகவைத்துக் கொண்டு மேலே மத்தியமம் வரையிலும் கீழே மத்திய ஸ்தாயி பஞ்சமம் வரையில் கீழே இறங்கியும் ஆக இந்த ஸப்தஸ்வரங்களில் ஸாமகானம் வருவதை யறியலாம்.

ஸா ; ; ; ஸா ; ; ; கா ; ரீ ஸா
ஸா ; நீ ஸா நீ ஸ ரி கா ரீ ஸா
கா ரீ (ம்) கா ரீ ஸா நீ ஸா நீ ஸா
நி ஸ ரி கா ரி ஸா நீ தா பா நீ தா
பா நீ தா ஸா த ஸ ரி கா ரீ ஸா

என்ற ஸஞ்சாரம் ஸாமவேதம் போல் த்வனிப்பதை நாம் காணலாம். இதில் அளவில்லாத கீர்த்தனைகள் உண்டு.

130. திலீபகம்:—இது ஓர் வக்ர ஸம்பூர்ணராகம் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். அய்யர் அவர்களின் "ராமா நீயெட" என்ற கீர்த்தனையில் இந்த ராகத்தின் நிஜஸ்வரூபம் நன்கு விளங்கும். இதை அநேகர் கரஹரப்ரியா என்றே எண்ணி ஸர்வஸ்வரஸம்பூரணமாய் பாடிக்கொண்டு வந்தபோதிலும் அவர்களை யறியாமலேயே பநீத பதநிஸ என்ற முக்கியமான பிடி அடிக்கடி ஷை கிருதியில் பிரயோகிக்கப்பட்டிருப்பதைப் பாடும்போது அவர்கள் கெடுத்தாலும் ஸ்வரூபம் கெடாத நிலைமையில் ராகம் விளங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் பாடுகிறவர்களும் இதை அறிந்து பாடினால் இன்னம் விசேஷமான ரஞ்சகத்தைக் கொடுக்கும்.

ஆரோ:—ஸ ரி க ம ப நீ த ப த நி ஸா
அவரோ:—ஸ நி த ப ம க ரி ஸ

131. தேவாம்ருத வர்ஷணி:—இதுவும் ஓர் வக்ரஸம்பூர்ண ராகம். 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம் மிகவும் கம்பீரம் பொருந்திய ரக்தி ராகம்.

ஆரோ:—ஸ க ரி க ம நி த நி ஸ
அவரோ:—ஸ நி த ப ம க ரி ஸ

மத்யமும் நிஷாதமும் ஜீவஸ்வரங்கள். கிரமமான ஸஞ்சாரங்களினாலேயே ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

நிதநிஸா—நிரீதபமர—மநிதாநிஸா
கரிகமகரிஸ—நிதநிஸநிதா—தநிதபமகரிஸ
மமத தாமநிதா நிஸநீ—ஸநிதபாமகாரி
ஸகரிக மகமா போன்ற பிடிகள் ரஞ்சகம் உதாரணம்:—
அய்யரவர்களின் "எவரனி" என்ற கீர்த்தனம் பிரஸித்தம்.

132. மத்யமாவதி :—இது ஓர் ஔடவராகம் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம் காந்தார தைவதங்கள் வர்ஜ்யம் மத்யானகாலத்தில் மிகவும் ரஞ்சகம். மங்களகரமான ராக மாகையால் * இந்த ராகத்தைப் பாடுவது ஸம்பிரதாயம்.

ஆரோ :—ஸரி மப நிஸ

அவரோ :—ஸநிப மரிஸ

ஸரிமரி—ரிமபம் — மபநிப — பநிஸநி — நிஸரிஸ — போன்ற பிடிகளும் இன்னம ஸரிமரி ஸநி பநிஸரிஸா— ஸநி பமரிமபநி ஸாநி பாம ரிஸரீமபா போன்ற தாட்டு வரிசைப்பிடிகளும் மிகவும் ரஞ்சகம் உதாரணம்:— அய்யரவர்களால் அநேக கீர்த்தனைகள் உள "ராமக தாஸுதா" "எவரிச்சிரிரா" "அலகலெல்ல" "வெங்க டேச" முதலிய கீர்த்தனைகள் ப்ரஸித்தம்.

133. ஸ்ரீராகம் :—இது ஓர் வக்ரஸம்பூர்ணராகம் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம் ஆரோகணத்தில் காந்தாரதைவதம் வர்ஜ்யம். அவரோகணம் வக்ரஸம்பூர்ணம் இதுவும் மங்கள கரமான ராகம் ஸம்பிரதாயமான பஞ்சராகங்களில் இதுவும் ஒன்று கம்பீரமான ரக்திராகம்.

ஆரோ :—ஸரிம பநிஸ

அவரோ :—ஸநிபத நிபமரி காரிஸ

---

* ஸங்கீத கச்சேரிகளின் முடிவில்

உதாரணம்:—அய்யரவர்களின் பஞ்சரத்ன கீர்த்தனை களில் ஒன்றாகிய "எந்தரோ மஹாநுபாவ" என்ற கீர்த்தனம் பிரஸித்தம்.

134. முகாரி:—22-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ரஸம்பூர்ண ராகம். சோகரஸங்களுக்கு விசேஷமாய் உபயோகப்படும்.

ஆரோ:—ஸரிமப நிதஸா

அவரோ:—ஸநிதப மகரிஸ

பைரவியைப்போல் அவரோகணத்தில் சுத்ததைவதம் பேசும்.

ரிமபநிதஸா—ஸரிமா மகரிஸா—ஸநிதப

மபநீதப மகரி—ரிரி மகரிஸ—ரிமபநி

தநீதப—மபதப மகரி ரிஸநிதஸா

போன்ற ஸஞ்சாரம் ரஞ்ஜகம் சுத்ததைவதம் பிடிகளை உருக்கமாய்ப் பிடிக்க வேண்டும்.

உதாரணம்:—தியாகய்யர் கிருதிகள் பலஉள— "காருபாரு" "க்ஷீணமைதி" "ஸங்கீத சாஸ்த்ர" என்ற கீர்த்தனைகள் ப்ரஸித்தம்.

135. ஸாளகபைரவி:—22-வது மேளகர்த்தாவில் ஜன்யமான உபாங்கராகம். ஔடவ ஸம்பூர்ணம்.

ஆரோ:—ஸரிம பதஸா

அவரோ:—ஸநிதப மகரிஸ

முகாரி ராகத்திற்கு அடுத்தபடியில் இருக்கும் ராக மாகையால் விவரம் தெரிந்து பாடவேண்டும். இரண்டு ராகங்களுக்கும் அவரோஹணம் ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் ஸாளக பைரவி "ஸரிம பதஸா" என்றும், முகாரி "ஸரிமப நிதஸா" என்றும் ஸஞ்சரிப்பதால் ஜாக்ரதையாய்ப் பாடவேண்டும்.

உதாரணம் :—"பதவ நீ ஸத்பக்தி" என்ற அய்யரவர்களின் கீர்த்தனம் ராகஸ்வரூபத்தை நன்கு விளக்குகிறது.

136. ருத்ரப்ரியா :—22-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஓர் பாஷாங்க ராகம். ஔடுவ ஷாடவம் தைவதம் வர்ஜ்யம். ஆரோகணத்தில் பஞ்சமும் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம நீஸா

அவரோ :—ஸநிபம காரிஸ

காந்தார நிஷாதங்கள் ராகச்சாயாஸ்வரம் :—கமநீநீ ஸாநிப மகாரி ஸரிகமா—கமநீ பமகரி ஸமகரி ஸரி ஸநிபம நீநீஸா போன்ற பிடிகள் ரஞ்சகம். அய்யரவர்களின் "ஶ்ரீமாணிநீ" "லாவண்யராம" என்ற கீர்த்தனைகள் தகுந்த உதாரணம்.

137. காபி :—இது ஓர் வக்ர தேசீயராகம். 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஜாவளி பதங்களுக் கென்றே இயற்கையால் அமைந்த ஓர் ரக்தி ராகம் இது பாஷாங்கம். கர்கலி நிஷாதமும் ஆங்காங்கு கலக்கும் வக்ர ஸம்பூரணம்—காரி ஸநிஸ போன்ற இடங்களில் காகலி பேசும்.*

ஆரோ :—ஸரிகாம ரிபம பதநிஸ

அவரோ :—ஸ்நிதப மகரிஸ

ரிமபநி ஸரிகரி ஸநிதநிபா—காமககரி ஸரிகரி ஸநிஸா—ஸநிதநிபா—ரிஸாநிதப—காமதபா மகரி நிஸா—பநிஸரிகா—ரிபமாப நீபமகரி என்ற பிடிகளும் நிஸரி காரிஸநி — பநிஸரீஸநித் — பநிஸா நிதப — மபதநீத பமகரி. ரிமபநீ பாமகாரி ஸநிபநிஸா போன்ற வரிசைகளும் ரஞ்ஜகம்.

*"ஸமகமா" என்ற விடங்களில் அந்தர காந்தாரம் பேசும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "நீ வல்லகுணதோஷ மேமி" என்ற கீர்த்தனம்.

138. தர்பார் :—இது கரஹர ப்ரியாவில் ஜன்யம். ஆரோகணத்தில் காந்தாரம் வர்ஜ்யம். அவரோஹணம் ஸம்பூர்ணம். மிகவும் கம்பீரமான ராகம்.

ஆரோ :—ஸரிமப தநீஸ

அவரோ :—ஸநீதப மக ககாரிஸ

காந்தாரம் கொஞ்சம் கூடுதலாய்ப் பேசுவதை லக்ஷ்யத்தால் அறியவேண்டும். இதில் வர்ணங்கள் கீர்த்தனங்கள் இருப்பதால் கேள்வியால் ராக ஸ்வரூபத்தை நன்கறியலாம்.

139. நாயகி :—இதுவும் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ரக்திராகம். 20-வது மேளத்தில் ஜன்யம் என்று சில இடங்களில் காணப்பட்டாலும் அனுபவத்தில் பார்க்கையில் 22-வது மேளத்தில் ஜன்யம் என்றே தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

ஆரோ :—ஸரிமப தநீத பஸா

அவரோ :—ஸநிஸப தமபமரி காரிஸ

இதில் வரும் காந்தாரம் ரிஷபத்தை யொட்டி கோமலமாகப் பேசும். அதேமாதிரி நிஷாதமும் தைவதத்தை யொட்டி கோமளமாகப் பேசும். இதைத் தெரிந்து பாடினால் தான் ராகஸ்வரூபத்தை விளக்க முடியும். இல்லாவிடில் தர்பாருடன் கலந்துவிடும். இதிலும் வர்ணங்கள் உண்டு. அய்யரவர்களின் "நீபஜன கான" என்ற கீர்த்தனம் உதாரணம்.

140. கன்னடகௌளா :—22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவராகம் ஆரோகணத்தில் தைவதமும் அவரோகணத்தில் ரிஷபமும் வர்ஜ்யம். ரக்திராகம்.

ஆரோ :——ஸரிகம பநிஸ

அவரோ :——ஸநிதப மகஸ

உதாரணம் :—அய்யரவர்களின் "ஓரஜூபுஜூசேதி" என்றக்ருதி.

141. ஹூஸேநி :—இது ஓர் புராதன ரக்திராகம் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம். வக்ரப்ரயோகங்களினால் தான் ராகம் ரஞ்சகம்.

ஆரோ :——ஸபமப நிதமா பநிதநிஸா

அவரோ :——ஸநிதப மபதநி தபகரி கமகரி ஸ

அவரோஹணப் பிடிகளில் தைவதம் குறைந்து பேசும் " மகப மகரிஸ " என்பது லக்ஷணப் பிடிப்பு ஸாரி. கமா—பதமா பநிதா நிஸா—ரீஸா நிதபா மபமக ரிஸா—ரிகமப தபமநிதப தமபம பநிதப—மமபம கரிஸா—ரீகமபா பநிதாமா பாநித நிஸரீஸா ஸா—பஸநிஸா—பாதமப காரிகமா காரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம். இதில் அநேக பதங்கள் கீர்த்தனைகள் ஸ்வர ஜாதிகள் உண்டு.

உதாரணம் :—அய்யரவர்களின் " ராமாநின்னே " என்ற கீர்த்தனம்.

142. ஸ்ரீரஞ்ஜநி :—இது 22-வது கர்த்தாவில் ஜன்யம். ரஞ்ஜகமுள்ள ஷாடவராகம். பாடுவதற்கும் மிகவும் ஸுலபமானது. பஞ்சமம் வர்ஜ்யம்.

ஆரோ :——ஸரிகம தநிஸா

அவரோ :——ஸநிதம கரிஸா

மத்யம நிஷாதங்கள் ஜீவஸ்வரம். ஸரிகமா மதாத்—காமதாநி ஸாநிதநிஸ நீத மாகாரி—கமநிதநீ ; தாமகரி கமதமா காரி கமகரி ஸநிஸா போன்ற ஸஞ்சாரம்

ரஞ்ஜகம். பகலில் 3-வது ஜாமத்தில் மிகுந்த ரக்தியைக் கொடுக்கும்: ஆனாலும் எப்போதும் பாடலாம்,

உதாரணம் :—அய்யரவர்களின் "மாரு பல்க" என்ற கீர்த்தனம்.

143. மனோஹரி :—22-வது மேளகர்த்தாவில் ஜன்யம் வக்ர ஷாடவராகம் ரக்தி யுள்ளது. நிஷாதம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸகரிகம பதஸா

அவரோ :—ஸதபம கரிஸ

உதாரணம் :—அய்யரவர்களின் "பரிதாபமு கநி பாடின" என்ற கீர்த்தனம்,

144. தேவமனோகரி :—இது ஓர் ஷாடவ வக்ர ரக்தி ராகம் 22-வது மேளகர்த்தாவில் ஜன்பம் காந்தாரம் வர்ஜ யம் அவரோகணத்தில் நிஷாதம் வக்ரம்.

ஆரோ :—ஸ ரி ம ப த நி ஸா

அவரோ :—ஸ நி த நி ப ம ரி ஸ

ரீம பநிதநிஸ நிதநிபா மாபதநிஸா நிதநிபா—தநிஸ ரீ ஸநிதநிபா—ஸரிம ரீஸ நிஸரி ஸாநி—தநிஸ ரீத— பதநிஸாநி தநிபா—பமப மரிமரி ஸாரிபபா மரிஸா நிதநிஸா போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "எவரிகை", "கன்ன தண்ட்ரி" என்ற கீர்த்தனைகள்.

145. ஜயமனோகரி :—இது ஓர் ஔடுவ ஷாடவ ராகம். 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். பஞ்சமம் வர்ஜ்யம். ஆரோகணத்தில் நிஷாதமும் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸ ரி க ம த ஸ

அவரோ :—ஸ நி த ம க ரி ஸ

ஸரிகமாம—கமத ஸாஸ—ஸரிகம கரிஸ ரிஸாநிதமா —நிதஸ நிநிததமா—மதநித தமகரி—கமகரி— —ஸநிதஸா—போன்ற பிடிகள் ராக ரஞ்ஜகம்.

உதாரணம் :—"நீ பக்தி பாக்யஸுதா " என்ற அய்யரவர்களின் கீர்த்தனம்.

146. மாதவமனோகரி :—ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம் பாஷாங்க ரக்தி ராகம் ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் பின்வருமாறு காணப் படும்.

ஆரோ :—ஸரிகம பநிதநிஸ

அவரோ :—ஸநித மகரிஸ

உதாரணம் :—தீக்ஷிதரவர்களின் "மஹாலக்ஷ்மி கருணாரஸ" என்ற கீர்த்தனம்.

(*Note* :—இதே பெயருள்ள ஜன்ய ராகம் 57-வது மேளகர்த்தாவிலும் இருக்கிறது. ஸிம்ஹேந்திரமத்யமம் என்ற கர்த்தாராகத்தின் ஜன்யங்களைப் பார்க்கவும்).

147. மஞ்ஜரி :—22-வது மேளகர்த்தாவில் உண்டான வக்ர ஸம்பூர்ண ராகம் இதில் நிஷாதம் கமக ஒரிசைகளுடன் பேசும், ஸகரிகாம — நிதநிஸா, என்றபிடியில் ரிஷப காந்தாரங்களை வக்ரமாகப் பிடிக்கவேண்டும்.

ஆரோ :—ஸகரிகமப நிதநிஸா

அவரோ :—ஸநிதப மகரிஸ

வக்ரப்பிடிகள் மிகவும் ரஞ்சகம் "ஸகரிகாகா மகரி ஸநித பநிதநி ஸகரிக மபாம கரிஸநி".

உதாரணம் :—"பட்டி விடுவராது" என்ற அய்யரவர்களின் கீர்த்தனம்.

148. பலமஞ்சரி :—இது 22-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் ரிஷப, பஞ்சம, நிஷாதங்கள் வர்ஜ்யம், அவரோகணம் ஸம்பூர்ண வக்ரம்.

ஆரோ :—ஸ க ம த ஸ

அவரோ :—ஸ நி த ப ம கா ம ரி ஸ

ஸகரிஸ கமரிஸ—கமதபா மகாமரிஸ கமதநிதபமகா மரிஸ—மதஸ நிதபம காமரிஸ—போன்ற ஸஞ்சாரம் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "ஸநாதநாபரம" என்ற கீர்த்தனம்.

149. ஜயந்தஸேநா :—இது ஓர் ஔடுவ ஷாடவ ராகம் 22-வது மேளகர்த்தாவான கரஹரப்ரியாவில் ஜன்யம்.

ஆரோ :—ஸகம பதஸ

அவரோ :—ஸநிதப மகஸா

ஸகமகஸா—பதஸ நிதபமகஸா—மபதநி தபமகஸா—கஸா நிதபா மபதநிதப மகமகஸா போன்ற பிடிகள் ராகஸ்வரூபத்தை விளக்கும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "விநதாஸுத வாஹன" என்ற கீர்த்தனம்.

150. ஸித்தஸேநா :—22-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ண ராகம்.

ஆரோ :—ஸகரி கமபதஸ

அவரோ :—ஸநித நிபமரிகரிஸ

ஸகரிக—ரிகரிஸ—மபதஸ—ஸநிதம பதஸ கரிஸ—ஸநித மபா—தஸநி தபா நிதமா பமரி கரிஸா போன்ற பிடிகள் ராகரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "எவரைன லேரா பெத்தலு" என்ற கீர்த்தனம்.

151. **ப்ருந்தாவனஸாரங்க** :—இது ஓர் வக்ர ஷாடவ ராகம். 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். தைவதம் வர்ஜ்யம்—ரக்தி ராகம்,

ஆரோ :—ஸகரி மபநிஸ

அவரோ :—ஸநிப மரிகஸ.

ஸரிகஸ—ரிமபநி பமரிகஸ—ஸநிப நிபம ரிமப நிபம ரிகஸ—ரிமபநி ஸக்ரிகஸ ஸநிபம ரிமபநிபா—ரிமாம ரிகரிஸ—நிஸ கரிகஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—"கமலாப் தகுல" என்ற அய்யரவர்களின் கீர்த்தனம்.

152. **மணிரங்கு** :—இது ஓர் ஔடுவ ஷாடவ ராகம். 22-வது மேளத்தில் ஜன்யம். மங்களகரமான கம்பீர ராகம். பகல் வேளையில் மிகவும் ரஞ்ஜகம். ஆனாலும் எப்போதும் பாடலாம் ஆரோஹணத்தில் காந்தார தைவதமும், அவரோஹணத்தில் தைவதமும் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிம பநிஸ

அவரோ :—ஸநிப மகரிஸ

கிரமமான பிடிகளினாலேயே ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

ஸரீரிமா மகாரி—ஸரிபப மகரி—ரிமபநி பமகரி—பநிஸநி பமகரி—பநிஸரி மகரிஸ நி ஸநிபம—ரிமபநி ஸாநி பாம பமகாரிஸ. போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "ராநிதி ராது" தீக்ஷிதரவர்களின் 'மா மவ பட்டாபிராம்' என்ற கீர்த்தனைகள்.

153. மாளவஸ்ரீ :—இது ஓர் வக்ர ஷாடவராகம். 22-வது மேளத்தில் ஜன்யம். ரிஷபம் வர்ஜ்யம். உபாங்க ராகம்.

ஆரோ :—ஸகமப நிதநிப தநிஸ
அவரோ :—ஸநிதப மகஸா

ஸகமபா—நிதநிபா—ஸ்நிதபா—பமகம பமகஸ—பமபநிதநி—நிதபம கமகஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "எந்நாள்ளுதிரிகே" என்ற கீர்த்தனம்.

154. சுத்தபங்காளா :—22-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஷாடவ வக்ர ராகம், ஆரோகணத்தில் காந்தார நிஷாதங்களும், அவரோகணத்தில் நிஷாதமும் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிமப தஸ
அவரோ :—ஸதபம ரிகரிஸ

உதாரணம் :—"ராமபக்தி ஸாம்ராஜ்ய" என்ற அய்யரவர்களின் கீர்த்தனம்.

ஸரிமா மரீரி கரிஸரி கரிஸதஸா—ரிமபதா பமரிக ரிஸ—ரிமபதஸா—ஸ ரிகரிஸ—தஸரிஸதா—பதஸ தபம—ரிமபம ரிகரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

155. சுத்தவேளாவளி :—இது 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். இது காபி மாதிரியான ராகம் என்று ஒரு வதந்தி உண்டு. ஆனால் காபி ராகத்தில் உள்ள தேசிய பிடிகள் இதற்கு இல்லை. இதை சுத்தமாகவும் வக்ர மாகவும் தான் பாடவேண்டும். இதில் ஒரு வர்ணம் உண்டு. "வர்ண மாலிகா" என்ற புஸ்தகத்தில் பார்க்கலாம். இந்த வர்ணம் அபூர்வ மானதையால் இதில் ராக மூர்ச்சை முழுவதையும்

காணலாம். கைசிகி நிஷாதம்—சதுச்ருதி தைவதம் ஸாதாரண காந்தாரம் இவைகள் ராகச் சாயாஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிம பநிஸ

அவரோ :—ஸநிதநி பம கரிஸ

156. களாநிதி :—இது 22-வது மேளகர்த்தாவில் ஜன்ய மான வக்ரஸம்பூர்ண ராகம் தாட்டுப்ரயோகங்கள் இந்த ராகத்திற்கு ரஞ்ஜகம்.

ஆரோ :—ஸரிகம ஸபாமதநிஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

"சின்ன நாட" என்ற அய்யரவர்களின் கீர்த்தனை யில் இந்த ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

157. ஜயநாராயணி :—22-வது மேளகர்த்தாவாகிய கரஹரப்ரியாவில் ஜன்யம் ஷாடவ ஸம்பூர்ணம்.

ஆரோ :—ஸரிகாம பதஸா

அவரோ :—ஸநிதப மகரிஸ

உதாரணம் :—"மநவிநி வினுமா" என்ற அய்யரவர் களின் கீர்த்தனம்.

158. பஞ்சமம் :—22-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ராகங்களில் இது ஒன்று. வக்ரப்ரஸ்தாரம் மிகவும ரஞ்ஜகம். ஆரோகணத்தில் காந்தார மத்யமங்கள் வர்ஜ்யம் இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸ ரி த த ப நி ஸா

அவரோ:—ஸ் நி த ப ம க ரி ஸ

ஸரிததபா மகரி —தபநிஸாநிதப நிஸகாரிஸ—மகரிஸ நிதாப—பதபநி தபமகரிஸ போன்ற பிடிகள் ரஞ் ஜகம்.

உதாரணம் :—சிங்கராச்சாரியாரின் "கனிகாமும்சி காவகராதா" என்ற கீர்த்தனம்.

159. ஆபோகி :—22-வது மேளகர்த்தாவில் ஜன்யமான மிருந்தரக்தியுள்ள ஔடுவராகம். பஞ்சம நிஷாதங்கள் வர்ஜ்யம்.

ஆரோ:—ஸ ரி க ம த ஸ

அவரோ :—ஸ த ம க ரி ஸ

இதில் வர்ணம் கீர்த்தனை பல உள

உதாரணம் :—அய்யரவர்களின் "மனஸுநில்ப சக்தி லேகபோதே" என்ற கீர்த்தனம்.

160. கானடா:—இது ஓர் வக்ரஸம்பூர்ண ராகம் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம், பாஷாங்கம்.

ஆரோ :—ஸ ரி கா ம ப ம தா நி ஸ.

அவரோ :—ஸ நி ப த நி த ப ம கா ம ரி ஸ

ஆரோகணப்பிடிகளில் நிஷாதம் அடியில் கண்டபிடி கொஞ்சம் கூடுதலாகவே பேசும். இதில் வர்ணங்கள் கீர்த்தனைகள் அநேகம் உண்டு.

ரிகமா நிதநீ ஸநிபா பமகா
ரிகமப காரிஸ ஸநிரிஸ ரீ—
ரிதபம கமரிஸ ரிகம ரிரிஸநிப
நிஸ ரிப மபகாம நீ தப—
பகாம நி தநிஸ நிஸரிஸ்
ககாம ரிரீஸ ஸஸ்ாநி பபாம
கமதநிஸா—ரிஸ நிபம நிதபமகா
கமரிரிஸ போன்ற பிடிகள் ராகஸ்வரூபத்தை விளங்க வைக்கும்.

உதாரணம் :— "ஸாகியெவ்வரோ" "ஸ்ரீ நாரத" என்ற அய்யரவர்களின் கீர்த்தனைகள்.

161. ஸ்வரபூஷணி :—இது ஓர் ஷாடவராகம், 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம், ரக்தி ராகம்.

ஆரோ :—ஸகம பதநிஸா

அவரோ :—ஸநிதப மரிஸ

ஸகம பாம ரிஸ—ஸநித நிதபமரிஸ

ஸகம பதநித பமரிஸ—ஸரிஸகமரிஸ

நித நிஸ நிதபா மரிஸ—கமபதநிதபமரிஸ

போன்ற பிடிகள் ராகஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

உதாரணம்:—அய்யரவர்களின் "வரதராஜநின்னு" என்ற கீர்த்தனம்.

162. ஸைந்தவி :—இது ஓர் பஞ்சமாந்த ராகம் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம், பாடுவதற்கு ஸுலபமானது. மத்யம சுருதியில் பாடுவதால் இந்த ராகத்திற்கு அதிக ரக்தி யுண்டு. இதில் லக்ஷணகீதம் உண்டு.

ஆரோ :—நிதநிஸ ரிகமப

அவரோ :—பமகரிஸ நிதநிஸா

ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் காணப்படும் தீக்ஷிதரவர்களின் அபிப்ராயப்படி இந்தராகம் ஸம்பூர்ணம் என்றும் பாஷாங்கராகம் என்றும் தெரிகிறது.

உதாரணம் :—"மேலு மேலுரா" என்ற க்ஷேத்ரஜ்ஞரின் பதம்.

163. புஷ்பலதிகா :—22-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஷாடவராகம். ஸஞ்சாரக்ரமத்தினாலேயே ராகஸ்வரூபம் விளங்கக் கூடியது.

ஆரோ :—ஸரிகம பநிஸா

அவரோ :—ஸநிபம கரிஸா

திருப்பதி நாராயணஸாமியின் "இகநைனா" என்ற கீர்த்தனம் ராகத்தின் ஸ்வரூபத்தை நன்று விளக்கும்.

164. ப்ருந்தாவநி :—இது ஓர் பாஷாங்க ஔடுவ ராகம் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம் தேசிய ரக்தி ராகம். காந்தார தைவதங்கள் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிமப நிஸா

அவரோ :—ஸநிப மரிஸா

"ப்ருந்தாவனஸாரங்கா" என்ற ராகத்திற்கும் இந்த ராகத்திற்கும் சிற் சில வித்யாஸங்கள் இருப்பதால் அதை நன்குணர்ந்து பாடவேண்டும். தீக்ஷிதரவர்களின் "ஸௌந்தரராஜமாச்ரயே" என்ற கீர்த்தனம் இந்த ராகஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

165. மாருவதன்யாஸி :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு. வக்ரமான பிடிகளால் ராகரஞ்ஜகம். கிறமமறிந்து ஸஞ்சாரம் செய்ய வேண்டும்.

ஆரோ :—ஸகமப தநிதப மப்நிஸ

அவரோ :—ஸநிதப மதம கரிஸ

ஸகம கரிஸ—கமபத பமதம கரிஸ—மபதநீத பமதமாகரிஸ—நிதபநி ஸநீதப மதமகரி—காமபம தமாகரிஸ. போன்ற வக்ர பிடிகள் ராகரஞ்ஜகம்.

166. மந்தமாரி :—இது 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் காந்தார நிஷாதங்கள் வர்ஜ்யம்.

அவரோகணம் வக்ர ஸம்பூர்ணம். இதற்கும் லக்ஷணகீதம் இருக்கிறது.

ஆரோ :—ஸரிம பதஸ

அவரோ :—ஸநிஸதப மகரிஸ

ஸரிமா மகரிஸ—ரிமபத பமகரிஸமபதஸா ஸதபம—பதஸா ஸநீஸ தாப ஸரிம கரிஸ—ஸநிஸ தாப—ஸதாப மகரிஸ போன்ற பிடிகள் ராகரஞ்ஜகம்.

167. மல்லாரு :—இது 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணம் வக்ரம் நிஷாதம் வர்ஜ்யம். அவரோகணத்தில் காந்தார நிஷாதங்கள் வர்ஜ்யம். வக்ர மான பிடிகள் ரஞ்ஜகம். இதற்கு லக்ஷண கீதம் இருக்கிறது.

ஆரோ :—ஸரிமக மபத பதஸா

அவரோ :—ஸதப மரிஸ

ஸரிமக மாமரீஸ—ரிமரிஸா ரிமாம கமபா—மபதப மரிஸரி மாம—பதபதஸ தாப—மபதஸ தாப—மகம பதப—தபத—பதஸா—ஸரிம ரிஸ தஸரி ஸத—பதஸதப—பமப தபத ஸா—ஸதாப மகம—பதப மரிஸ போன்ற பிடிகள் ராகரஞ்ஜகம். மகம—பதப—ஸதப போன்ற பிடிகள் அடிக்கடி மாரி மாரி வரவேண்டும்.

168. பாலகோஷி :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம் 22-வது மேளகாத்தாவில் ஜன்யம். ஆரோகணம் வக்ர மாகவும் அவரோகணம் ஸம்பூர்ண மாயும் ஸஞ்சாரம்.

ஆரோ :—ஸரிகப மநிதஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

இந்த ரக்தி ராகத்திற்கு லக்ஷண கீதம் இருக்கிறது. கிரமமான வக்ரப் பிடிகளினால் ராகம் ரஞ்ஜகம்.

உதாரணம் :—ஸரிகபா பமாகரிஸ—ரிகபம நிதபம கரிஸ—கபமநி தஸநிதப—ஸரிகரிஸ ஸநிதப மக ரிஸ—பாம

நீத பமகாரி மநிதநி தபமகரி கபமா—பநிதஸா ஸஸரிஸா கரிஸ நிதபா—மநிதஸாஸ நிதபா—பமநித பமகரீ பமாகரிஸா போன்ற பிடிகள் ராகஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

169. பாலசந்தரிகா:—இது ஓர் ஷாடவ ராகம். 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் ரிஷபமும். அவரோகணத்தில் பஞ்சமமும் வர்ஜ்யம். ரக்தி ராகம்.

ஆரோ :—ஸகம பதநிஸ

அவரோ :—ஸநித மகரிஸ

ஸகம கரிஸ—கமபாப தமகரிஸ—மபதாத நித மாம—கமப்பாப தமகரி—பதநிஸா நிதமகரி—கமபத நிதமகரிஸ—ஸகரி ஸாஸ நீதத மகாரி கமப தநித மகரி—தமாகரிஸ போன்ற பிடிகள் ராகஸ்வரூபத்தை விளக்கும்.

170. லலிதழுஞ்சேகரி:—இது 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவ ராகம். ஆரோகணத்தில் ரிஷபமும், அவரோகணத்தில் தைவதமும் வர்ஜ்யம். கிரமமான ஸஞ்சாரங்களினாலேயே ராகஸ்வரூபம் விளங்கும் ரக்திராகம்.

ஆரோ :—ஸகம பதநிஸ

அவரோ :—ஸநிப மகரிஸ

171. வஜ்ரகாந்தி :—இது ஓர் ஔடுவ ஸம்பூர்ண ராகம் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் ரிஷப தைவதங்கள் வர்ஜ்யம். ரக்திராகம். கிரமமான ஸஞ்சாரங்களினாலேயே ராகஸ்வரூபம் விளங்கக் கூடியதாகையால் ஸுலபமாய்ப் பாடலாம்.

ஆரோ :—ஸகம பநிஸா

அவரோ :—ஸநிதாப மகரிஸ

172. **சுத்தமனோகரி** :—இது ஓர் வக்ர ஷாடவம் 22-வது மேளகர்த்தவில் ஜன்யம். ஆரோகணத்தில் நிஷாதமும் அவரோகணத்தில் தைவதமும் வர்ஜ்யம். அவரோகணத்தில் காந்தாரம் வக்ரம்.

ஆரோ :—ஸரிகம பதஸ
அவரோ :—ஸநிப மரிகஸ

ஸரிகமா மரிகஸ—ரிமபநப மரிகஸ—மபதஸா நிபம ரிகஸ—பதநிப மரிகஸா ஸரிகஸா நிபாம—ரிகமபா மரிகஸா போன்ற பிடிகளால் ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

173. **கௌரிமனோகரி** :—இது 23-வது மேளகர்த்தா ராகம் ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். ரிஷப காந்தார தைவத நிஷாதங்கள் ராகச்சாயா ஸ்வரங்கள். எப்போதும் பாடக் கூடியது. இதில் லக்ஷண கீதம் உண்டு. அநேக கீர்த்தனைகள் உள. கர்பபூரிவாசர் கீர்த்தனை ப்ரஸித்தம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "குருலேக" என்ற கீர்த்தனை.

174. **வேளாவளி** :—இது 23-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஔடுவ ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் காந்தார நிஷாதங்கள் வர்ஜ்யம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிம பதஸ
அவரோ :—ஸநிதப மகரிஸ

ஸரிம காரிஸ—ரீமமபா—பமக ரிமப தாப—மபதஸ நிதபா—ஸரிக ரிஸா நிதபா—ரிஸா நிதபா—தஸநி தபம கரிஸ— போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

175. **ஹம்ஸதீபகம்** :—இதுவும் 23-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஔடுவ ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் பஞ்

சம நிஷாதங்கள் வர்ஜ்யம். கிரமமான ஸஞ்சாரங்களிலேயே ஸ்வரூபம் விளங்கக் கூடிய ராகம்.

ஆரோ :—ஸரிகமதஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

176. வருணப்ரியா :—இது 24-வது மேளகர்த்தா ராகம் ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். சதுசுருதி ரிஷபம் ஸாதாரண காந்தாரம். ஷட்சுருதி தைவதம் காகலி நிஷாதங்கள் ராகச் சாயா ஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு.

177. வீரவஸந்தம் :—இது 24-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் தைவத நிஷாதங்கள் வர்ஜ்யம். காந்தாரம் வக்ரம். அவரோகணம் ஸம்பூர்ணம் இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸகரி மபஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

உதாரணம் :—அய்யரவர்களின் "ஏமனி பொகடுது" என்ற கீர்த்தனம்.

178. மாரரஞ்ஜனி :— இது 25-வது மேளகர்த்தா ராகம் ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். சதுச்ருதி ரிஷபம் அந்தர காந்தாரம் சுத்த தைவதம் சுத்த நிஷாதம் இவைகள் ராகச் சாயா ஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு. "மனஸா ஸ்ரீராமுனி" என்ற அய்யரவர்கள் கீர்த்தனம். தகுந்த உதாரணம்.

179. கேஸரி :—இது 25-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம்.

ஆரோ :—ஸரிகம பம தபதஸ

அவரோ :—ஸதநித பமகரிஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு.

180. தேசமுகாரி :—இந்த ராகமும் 25-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிகம பதநிதஸ
அவரோ :—ஸதநித பமகரிஸ

181. சரத்யுதி :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 25-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணம் ஸம்பூர்ண வக்ரம். அவரோகணம் ஸம்பூர்ணம். இதில் லக்ஷண கீதம் இருக்கிறது.

ஆரோ :—ஸரிகம பதநிதஸ
அவரோ :—ஸநிதப மகரிஸ

182. சாருகேசி :—இது 26-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம் ரக்தி ராகம். இதில் அநேக கீர்த்தனைகள் உண்டு.

உதாரணம் :—"ஆடமோடி கலதே" என்ற அய்யரவர்களின் கீர்த்தனம்.

183. தரங்கிணீ :—இது 26-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ண ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிமகரி மபதநி தஸ
அவரோ :—ஸநிதப மகரிஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு. தீக்ஷிதரவர்களின் "மாயே" என்ற கீர்த்தனம் பிரஸித்தமான உதாரணம்.

184. ஸோமப்ரதாபம் :—இது 26-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் ரிஷப காந்தாரங்கள் வர்ஜ்யம். வக்ர ஸஞ்சாரம். அவரோகணம் ஸம்பூர்ணம்.

ஆரோ :—ஸபம தநிஸ
அவரோ :—ஸநிதப மகரிஸ

ஸபா மகரி—பமதநி தபா மகரி—மதாநி ஸநிதபம தநிஸா—தநிஸநி தப தநிஸா—பாம கரிஸா—ரிஸா நிதப மதநிதப மகரிஸ— போன்ற கிரமமான பிடிக ளால் ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும்.

185. ஸரஸாங்கி :—இது 27-வது மேளகர்த்தா ராகம் ஸர்வ ஸ்வர ஸம்பூர்ணம். சதுச்ருதி ரிஷப அந்தர காந்தார சுத்த தைவத காகலி நிஷாதங்கள் ராகச் சாயா ஸ்வரங்கள்.

உதாரணம் :—அய்யரவர்களின் "மேனு ஜூசி" கீர்த்தனம். பட்டணம் சுப்ரமணிய அய்யர் கீர்த்தனம் "நீ கேல தயராது" என்பதும் முக்கியம்.

186. கமலாமனோகரி :—இது 27-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஔடுவ ஷாடவ ராகம். ஆரோகணத்தில் ரிஷப தைவதங்களும்—அவரோகணத்தில் ரிஷபம் மட்டும் வர்ஜ்ய ஸ்வரங்கள் மிகுந்த ரக்தியான ராகம்.

ஆரோ :—ஸகம பநிஸா

அவரோ :—ஸநிதப மகஸா

இதற்கு ரிஷபம் வர்ஜ்யமாயிருப்பதைக் கொண்டு இதை 15-வது மேளத்தில் ஜன்யமான ராகம் என்று அபிப் ராயப் படுவோரும் உண்டு. ஆனால் கிரந்தங்களில் அதற் குள்ள ஆதாரம் ஒன்றும் காணோம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "நீமுத்து மோமு" என்ற கீர்த்தனம் பிரஸித்தம். தீக்ஷிதரவர்களின் "கஞ்ச தளாயதாக்ஷ" என்னும் கீர்த்தனம். 33-வது மேளகர்த் தாவில் இதே ஆரோஹண அவரோஹண கிரமமுள்ள மனோ கரீ என்ற ராகத்தில் ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் காணப்படுகிறது.

187. ஸிம்ஹவாஹினி :—இதுவும் 27-வது மேளகர்த்தா வில் ஜன்யம். ஷாடவ ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் ரிஷ பம் வர்ஜ்யமான ரக்திராகம்.

ஆரோ :—ஸகம பதநிஸ

அவரோ :—ஸ்நிதப மகரிஸ

உதாரணம் :—அய்யரவர்களின் "நெனருஞ்சரா" என்ற கீர்த்தனம்.

188. நளினகாந்தி :—இது 27-வது மேளத்தில் ஜன்யமான வக்ர ஷாடவம். தைவதம் வர்ஜ்யம். ஆரோகணத்தில் ரிஷபம் வக்ரம்.

ஆரோ :—ஸகரிம பநிஸ

அவரோ :—ஸநிப மகரிஸ

ஸ்கா—ரிமா—பநீ பஸா—ஸரிஸநி பா—ரிமகரிஸ போன்ற தாட்டு வரிசைப் பிடிகள் ரஞ்ஜகம். அய்யரவர்களின் "மனவ்யால கிஞ்சரா" என்ற கீர்த்தனம் பிரஸித்தமான உதாரணம்.

189. ஸுரஸேனா :—இது 27-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஔடுவ ஸம்பூர்ண ராகம்—ரக்தியுள்ளது. ஆரோகணத்தில் காந்தார நிஷாதங்கள் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸ ரி ம ப த ஸ

அவரோ :—ஸ் நி த ப ம க ரி ஸ

கிரமமான ஸஞ்சாரங்களினாலேயே ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

190. திவ்யபஞ்சமம் :—இதுவும் 27-வது மேளகர்த்தாவில் ஜன்யம் ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். லக்ஷணகீதம் உண்டு.

ஆரோ :—ஸ ரி க் ம ப த நி ஸ

அவரோ :—ஸ நி த ப ம க ரி ஸ

191 ஹரிகாம்போஜி :—இது 28-வது மேளகர்த்தாராகம் ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். சதுச்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம் சதுச்ருதி தைவதம் கைசிகி நிஷாதம். இவைகள் ராகச்சாயாஸ்வரங்கள். ப்ரஸித்தமான ரக்தியுள்ள மேளகர்த்தா இதில் அநேக கீர்த்தனைகள் உள. அய்யாவர்களின் "எந்தராநீதன" "தினமணிவம்ச" என்ற கீர்த்தனைகள் ப்ரஸித்தம்.

192. காம்போஜி :—இது 28-வது மேளகர்த்தாவில் ஜன்யமான புராதன ப்ரஸித்த கனராகம்—பாஷாங்கம்—ஆரோகணத்தில் நிஷாதம் வர்ஜ்யம். அவரோகணம் ஸம்பூர்ணம். ஆரோகணம் ஸ ரி க ம ப த ஸா—அவரோகணம் ஸ நி த ப ம க ரி ஸ என்பது பிரஸித்தமான அபிப்ராயமானாலும் ஸா நி* பா தா ஸா என்ற லக்ஷணப்பிடிப்பும்—ம க ப த ஸா என்ற லக்ஷணப்பிடிப்பும் இந்த ராகத்தின் பூர்ணகளையையும் கொடுக்குமாகையால் இவைகளை கவனித்து உபயோகப் படுத்துவதுடன் நிஷாதம் காகலியாகப் பேசுவதையும் மெய்பிக்க வேண்டும். இதில் அநேக வர்ணங்கள் கீர்த்தனைகள் பதங்கள் உள.

ஆரோ :—ஸ ரி க ம ப த (ம க ப த) ஸா
அவரோ :—ஸ நி த ப ம க ரி ஸ நி பா தா ஸா

உதாரணம் :— அய்யரவர்களின் "மாஜானகி" என்ற கீர்த்தனம்.

193. யதுகுலகாம்போஜி :—இது 28-வது மேளகர்த்தாவில் ஜன்யமான புராதன ரக்திராகம் ஸரிம பதஸா—ஸநிதபமகரிஸ என்ற ஸஞ்சாரம் கிரமம் இதற்கு ரிஷபகாந்தாரங்கள் கமக ஓரிகையுடன் பேசும். இதை அனுபவத்தினால் காணலாம். ரிஷப நிஷாதங்களை தீர்க்கமாய்ப் பிடிக்கவேண்டும். மத்யமத்தை மிகுந்த கமகத்துடன் பிடிக்க வேண்டும். "காம" "காழ" "ரீக" என்ற அசைவுகள் விசேஷம்.

* காகலி நிஷாதம்.

ஆரோ :—ஸ ரி ம கா ம ப த ஸா
அவரோ :—ஸ நி த ப ம க ரி ஸ பா தா ஸா:

இதில் அநேக கீர்த்தனைகள் பதங்கள் உள. அய்யரவர்களின் "ஏதாவுன நேர்ச்சிதி" என்ற கீர்த்தனம் ப்ரஸித்தம். பட்டணம் சுப்ரமணிய அய்யர் அவர்கள் "பதரே" என்ற மிகவும் அழகான வர்ணம் செய்திருக்கிறார். ("வர்ணமாலிகை" என்ற நூலில் காண்க)

194. கமாஸ் :—28-வது மேளகர்த்தாவில் ஜன்யம் வக்ர ஸம்பூர்ணம். ரஞ்சகமான பாஷாங்க ராகம் என்றே சொல்லலாம். ஆரோஹணத்தில் காந்தாரம் வக்ரம்.

ஆரோ :—ஸகம பகாம பதநிஸ
அவரோ :—ஸநிதப மகரிஸ

இந்த ராகத்தில் ரிஷபமே வர்ஜ்யம் என்ற ஓர் அபிப்ராயமும் இருந்து வருகிறது. அதன்படி பார்த்தால் ஸகம பதநிஸ—ஸநி தபமகஸ—என்ற கிரமம் ஏற்படும். ஆனல் அனுபவத்தில் "ஸகாம பகாம" "ஸமகம" என்று ஆரோஹணத்திலும் "ஸநிதப மகரிஸ" என்று அவரோகணத்திலும் பாடப்பட்டு வருகிறது. தவிரவும் "ஸநிஸ" என்ற இடங்களில் காகலி நிஷாதம் பேசும். இதில் தாட்டுவரிசைகள் மிகவும் ரஞ்ஜகம். உதாரணமாக "ஸ்நிதபமபா—தமா—பகா—மபா—மதா. தநீ—ஸ்நீ நிஸா போன்ற பிடிகளும் ஸமகம பகாம — பதநித பதமப — கமநித பதநிஸ — ஸநீதா — நிஸரி ஸநீதா — பகாம பதநீத போன்ற பிடிகளும்—ஸரிநிஸ — நிஸஸநி — தநிநித போன்ற ஜண்டைவரிசைப் பிடிகளும் மிகவும் ரஞ்சகம். இதில் அளவற்ற ஜாவளிகள் இருப்பதால்

ஜாவளிக்காகவே இந்த ராகம் ஏற்பட்டதோ என்று கூட எண்ணும்படியாக விருக்கிறது. இதில் அநேக கீர்த்தனைகள் உள.

உதாரணம் :—அய்யரவர்களின் "ஸீ தா ப தே" "ஸ்வஜன ஜீவனு" என்ற கீர்த்தனைகள்.

195. கர்நாடகப்யாகு :—இது ஓர் ஸம்பூர்ண வக்ர ரக்தி ராகம். உபாங்கம் 28-வது மேளத்தில் ஜன்யம். எப்போதும் பாடக் கூடியது.

ஆரோ :—ஸரிகம பதநிஸ

அவரோ :—ஸநிதநி பதமா கரிகஸா

ஸரிகமா பதமா—பதநிஸா நிதநி பதமா—கஸா ரிகமா—மகரிஸ நிதநிஸ ரிகமா—மபதநி ஸரிகமா—மகரிகஸா—நிதநிபா மகரி கஸா போன்ற தாட்டு வக்ரப் பிடிகள் மிகவும் ரஞ்ஜகம். மேலே காட்டியபடி மத்யமங்களை கம்பீரமாய்ப் பிடிக்க வேண்டும். 'பதமா' என்பது லக்ஷணப் பிடிப்பு.

உதாரணம் :—அய்யரவர்களின் "நே ...நெந்துவெதகுதுரா" என்ற கீர்த்தனம் ப்ரஸித்தம்.

196. கேதாராகௌளை :—இது 28-வது மேளத்தில் ஜன்யம். ரக்தியான புராதன ராகம்—ஔடுவ ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் காந்தார தைவதங்கள் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிம பநிஸா

அவரோ :—ஸநிதப மகரிஸா

இதில் வரும் ஸ்வரங்களை நீண்டொலிக்கச்செய்கிற ப்ரயோகங்கள் மிகுந்த ரஞ்ஜகம். கமக வரிசைகளும் ரக்தியுள்ளவை.

ஸரிமா—பஸீா—நிஸரீஸா நிதபா ரிமபா—நீதபா—தபமகரீ—ஸரிமா மகரி—ரிமபநீத பமகரீ—மபநீ—ஸரிஸா—நிதபா—மபநீத பமகரி ஸாநித பநிஸரீ—ரி மா மகரீ—மக ரிஸா போன்ற பிடிகள் ரஞ்ஜகம். மேலே குறித்தபடி அவரோகப் பிடிகளில் வரும் நிஷாதம் குறைந்து பேசுவதையும் மகரீ என்ற பிடிகளில் ரிஷப காந்தாரத்திலிருந்து இழுக்கப் பட்டு பிடிக்க வேண்டும். அனுபவ மூலமாயும் கேள்வியாலும் அறிய வேண்டும்.

உதாரணமாக:—தியாகய்யரவர்களின் "துளஸி பில்வ" 'வேணுகான லோலுனி' தீக்ஷிதரவர்களின் "நீலகண்டம் பஜே" பூச்சி ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்களின் "ஸரகுண பாலிம்ப" என்னும் கீர்த்தனைகள்.

197. நாராயணகௌள:—28-வது மேளத்தில் ஜன்யம் இதற்கும் கேதாரகௌளத்திற்கும் உள்ள வித்யாஸத்தை அனுபவத்தால் அறிவதுடன் கூட இதிலிருக்கும் பநிதநிஸா—மகரிகரிஸா என்ற ப்ரயோகங்களை உற்று நோக்கி சுத்தமான சஞ்சாரம் செய்வதினாலேயே ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

ஆரோ:—ஸ ரி ம ப நி த நிஸா

அவரோ:—ஸ நி த ப ம க ரி கரிஸ

இதில் அநேக வர்ணங்கள் க்ருதிகள் உள.

உதாரணம்:—அய்யரவர்களின் "கதலே வாடு"—"இங்க தயராகு" என்ற கீர்த்தனைகள்.

198. ஸஹாந:—இது 28-வது மேளத்தில் ஜன்யமான புராதன ரக்திராகம். வக்ர ஸம்பூர்ணம்.

ஆரோ:—ஸ ரி க ம ப ம தா நி ஸ்

அவரோ:—ஸ நீ த ப ம க ம ரி க ரி ஸ்

இந்த ராகத்தில் ஸ்வரங்களின் ச்ருதிபேத விஷயங்களை செவியார லாய்க்கேட்டு அனுபவ பூர்வமாய்ப் பாட வேண்டும். இல்லாதவரை ரஞ்சிக்காது.

இதில் ரிகரிஸ—ரீகமபம ககரி கரிஸ போன்ற பிடிகளில் காந்தாரம் குறைந்து பேசும். மதாநிஸ்—ஸ்பா என்ற ப்ரயோகங்கள் அடிக்கடி பேசும். இதில் அநேக கீர்த்தனைகள் பதங்கள் ஜாவளிகளும் உள.

உதாரணம் :—அய்யரவர்களின் "கிரிபை" என்ற கீர்த்தனம் ப்ரஸித்தம்.

199. நாட்டகுரஞ்ஜீ :—இது 28-வது மேளத்தில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ணராகம்—புராதன ரக்திராகம்.

ஆரோ :— ஸ ரி க ம நி த நி ப த நி ஸா
அவரோ :—ஸ நி த ம க ரி க ஸா

ஆரோகண அவரோகண கிரமங்களின் சுத்தமான ஸஞ்சாரங்களினாலேயே ராகஸ்வரூபம் நன்கு விளங்கும். ஆனால் இதற்கு அவரோஹணத்தில் பஞ்சமத்தை வக்ரமாகவும் பிடிக்கும்போது ஸநித மகமப கரிஸ என்று வரும் ப்ரயோகம் இந்தராகத்தின் மற்றொரு ஸ்வரூபத்தையும் நன்கு விளக்கும். இதில் அனேக வர்ணங்கள் கிருதிகள் உள.

உதாரணம்:—அய்யரவர்களின் "மனஸா விஷயநட" "குவலயதள"; ராமஸ்வாமி சிவன் அவர்களின் "எக்காலத்திலும் மறவேன்" என்னும் கீர்த்தனைகள்.

200. ஸௌரட்டி :—இது ஓர் ரக்தியான ஜன்யராகம். 28-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் காந்தார தைவதங்கள் வர்ஜ்யம். அவரோகணம் ஸம்பூர்ணவக்ரம்.

இது ஓர் மங்களகரமான ராகமாகையால் இதை மங்களம் பாடுவதற்கு உபயோகிக்கிறார்கள்.

ஆரோ :—ஸ ரி ம ப நீ ஸா

அவரோ :—ஸ நி த ப ம க ப ம ரீஸ

இதில் வரும் ரிஷப நிஷாதங்கள் தீர்க்க ஓரிகையுடன் பேசவேண்டும்,

ரீமா பநீநி ஸாநிதபா மகபமரீ—மபநித பநிதப மகப மரீ—ஸரிமா மரீ—தபமக பமரீ ஸநிதப நீநிஸா போன்ற பிடிகள் ரஞ்ஜகம்,

உதாரணம் :—அய்யரவர்களின் "பஜனபருல" "வோரவ்வரே" என்ற கீர்த்தனைகள்.

201, மோஹனம்:—இது ஓர் ஔடவ ரக்தி ராகம் 28-வது மேளத்தில் ஜன்யம். மத்யம நிஷாதங்கள் வர்ஜ்யம். காந்தார தைவதங்கள் நல்ல கமக ஓரிகையுடன் பேசவேண்டும். தாட்டு வரிசைகள் நல்ல ரக்தியைக் கொடுக்கும்.

ஆரோ :—ஸரிகப தஸா

அவரோ :—ஸதப கரிஸா

ஸரிஸரி ஸத—தஸரி ஸதப—பதஸ தபக—கபதப கரி—ரிகப கரிஸ—ரீக ஸரிஸ—தாஸ பதப—காப ரிகரி—ஸாரி தஸதஸ ரிகபத ஸரிக போன்ற பிடிகள் ரஞ்ஜகம். இதில் அநேக கீர்த்தனங்கள் பதங்கள் உள.

உதாரணமாக :—அய்யரவர்களின் "மோஹனராம" "நன்னு பாலிம்ப" அருணாசலகவியின் "ஏன்பள்ளி கொண்டீரைய்யா" என்னும் கீர்த்தனைகள்.

202. ஸிந்துகன்னடை :—28-வது மேளத்தில் ஜன்யம். ஆரோஹணம் ஔடவ வக்ரம் அவரோஹணம் ஸம்பூர்ணம் ஆரோகணத்தில் தைவத நிஷாதங்கள் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸமகம ரிகமபஸ
அவரோ :—ஸநிதப மகரிஸ

ஸமகம ரிபம—பஸ நித பம கம—கரி கம ரிகம பம கரிஸ நித பஸ போன்ற வக்ர பிடிகள் ராகரஞ்ஜகம். உதாரணம் :—அய்யரவர்களின் "நன்னு கன்ன தல்லி" என்ற கீர்த்தனம்.

203. நீலாம்பரி :—28-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ணம்—ப்ராசீன ரக்திராகம் பாஷாங்கம் சுத்த மத்யம காகலி நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள். ஆரோகணப் பிடிகளில் காகலியும் அவரோகணமான சில இடங்களில் கைசிகி நிஷாதம் பேசும்.

ஆரோ :—ஸரிகம பதப நிஸா
அவரோ :—ஸநிபம கரிகஸா

பதநிப—பநிதநிப—போன்ற இடங்களில் கைசிகி நிஷாதம் பேசும். ஜன்டை தாட்டு வரிசையான ப்ரயோகங்கள் ராகரஞ்ஜகம்.

ஸஸ நிப — நிநிபம—பபமக—மமகஸ மகபம நிபஸ நிபம—போன்றவை உதாரணம் இதில் மத்யம ஸ்வரத்தை ந்யாஸமாகவைத்து உருக்கயாய் கமக ஓரிகையுடன் விந்யாஸம் செய்தல் மிகரஞ்ஜகம்—ஸரிகமா—பநிஸ நிபமா—கமபத நிபமா—ரிஸாநி பமா கரிக ஸாரி கமா—பநி தநி பம கமா போன்றவைகள் உதாரணம். இதில் அளவில்லாத கீர்த்தனைகள் பதங்கள் உண்டு.

உதாரணமாக :—அய்யரவர்களின் "என்னகாமன ஸுகராநி" தீக்ஷிதரவர்களின் "அம்ப நீலாயதாக்ஷி" மைசூர் லிங்கராஜர் அவர்களின் "ச்ரிங்கார லஹரி" என்ற கீர்த்தனங்கள்.

204. பலஹம்ஸா :—28-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஔடுவ வக்ர ஸம்பூர்ண ராகம். இதில் ஐரோப்ய ஸங்கீதங்கள் * தோன்றுவதை நன்கு காணலாம்.

ஆரோ :—ஸரிம பதஸ
அவரோ :—ஸநிதப மரிமகஸ

ரிமபநி தபமரி மகஸ—மபத ஸநிதபம கரிகஸா நிதப தஸா—ரிமாம காரிஸ ரிகஸா—ரிமகஸா ரிமா போன்ற மூர்ச்சனைகள் அடிக்கடி வரும்

உதாரணம் :—அய்யரவர்களின் "தல்லி தண்ட்ரி" சதாசிவராயர் அவர்களின் "எவருந்நாரு ப்ரோசேவா" என்ற கீர்த்தனங்கள்.

205. குந்தலவராளி :—28-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஔடுவ வக்ரம்—மிகவும் ரஞ்ஜகமானது தாட்டு கமகப் பிடிகள் விசேஷம். மத்யமமும் தைவதமும் ஜீவஸ்வரங்கள் ரிஷப காந்தாரங்கள் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸமபத நிதஸா
அவரோ :—ஸநிதப மாஸா

ஸமா பதநிதா—ஸநித பமா—தாப தநிதா பாமா—ஸநிதப மபத நிதா—ஸாஸ மாம நிதநி பதா—மபதநி ஸநிதா—ததநித தஸநித தநிதத பபமா போன்ற மத்யம தைவத ப்ரதானமான பிடிகள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "கலிநருலகு" என்ற கீர்த்தனம்.

206. ஸரஸ்வதி மனோகரி :—28-வது மேளத்தில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ண ராகம். ஆரோகணத்தில் நிஷாதம் வர்ஜ்யம். மிகவும் ரக்திபுள்ள ராகம். ஆங்கில ஸங்கீத

* மெட்டுகள்.

நோட்டுகளில் வரும் ஸ்வரப்ரஸ்தாரங்கள் போல் இதில் வரும் ஸ்வரங்கள் ரஞ்ஜகமானவை.

ஆரோ :—ஸரிகம பமதஸ
அவரோ :—ஸதநிப மகரிஸ

ஸரிக மாம—பமத ஸாஸ—ஸரி கஸா—ஸதநிபா—மாம தாத ஸாஸ—மகரிஸ தநிபா—மத்ஸத நிபாம காம கரிஸ போன்ற கிரமமான பிடிகளினாலேயே ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும்.

உதாரணம்:—அய்யரவர்களின் " எந்தவேடு கொந்து ராகவா " என்ற கீர்த்தனம் ப்ரஸித்தம்.

207. ஈசமனோகரி :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 28-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ரக்திராகம்

ஆரோகணம் :—ஸரிகம பநிபத நிஸா
அவரோகணம் :—ஸநிதப மரிம கரிஸா

ஸரிக மாம பநிப தநிஸா—ரிமக ரிஸா ஸநிதநி பத நிஸா—நிதபம ரிமக ரிஸா போன்ற வக்ரப் பிடிகள் ராகரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் " மனஸா ஸ்ரீ ராம சந்த்ர " என்ற கீர்த்தனம்.

208. உமாபரணம் :—இது 28-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம்—ரக்தியான ராகம்.

ஆரோ :—ஸரிகம பதநீஸ
அவரோ :—ஸநிபம ரிகமரி ஸநிஸா

ஸரிகம பதநீ—ஸநிபம ரிகமாரி—மபத நீஸ நிபமரீ ரிகமப தாநிபா மகம பம கமரிஸ—பாமரீ கமப நிபா ஸநிபா ரிஸநி பமரீ ரிகமரி ஸநிஸா போன்ற பிடிகள்

ரஞ்ஜகம். நிஷாதத்தைத் தீர்க்கமாகப் பிடிக்கையில் கம்பீரமாகப் பிடிக்க வேண்டும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "நிஜமர் மமுலனு" என்ற கீர்த்தனம்.

209. ஆந்தாளி :—இது ஓர் ஔடுவ வக்ர ராகம். 28-வது மேளகர்த்தாவில் ஜன்யம். கம்பீரமான ராகம். ஆரோகணத்தில் காந்தார தைவதங்களும், அவரோகணத்தில் தைவதமும் வர்ஜ்யம். மத்யம நிஷாதங்கள் ராகச் சாயா ஸ்வரங்கள். ரிகமரிஸ என்ற ப்ரயோகம் அடிக்கடி வருவதால் ராக ஸ்வரூபம் தெளிவாகும்.

ஆரோ :—ஸரிம பநிஸ

அவரோ :—ஸநிபம ரிகமரிஸ

மபநி ஸாநிபம ரிகமரிஸ—ஸரிமா மரிக மரிஸ ஸபம பபநிபம ரிகமரிஸ—ரிஸஸநி பநிஸ ரிமா போன்ற பிடிகள் ராக ரஞ்ஜகமானவைகள்.

உதாரணம் :—அய்யரவர்களின் "அபிமானமுலே" என்ற கீர்த்தனம்.

210. ஆந்தோளிகா* :—28-வது மேளத்தில் உண்டான ஔடுவ ராகம். ஆரோகணத்தில் காந்தார தைவதங்களும் அவரோகணத்தில் பஞ்சம காந்தாரங்களும் வர்ஜ்யம். காந்தாரம் வர்ஜ்யமாயிருப்பதைக் கொண்டு ப்ரஸ்தாரக்ரமத்தில் 22-வது மேளத்தில் ஜன்யம் என்று அபிப்ராயப்படுவோரும் உண்டு.

ஆரோ :—ஸரிம பநிஸா

அவரோ :—ஸநித மரீஸா

பநிதமா—ரீமபா—ஸநித மாரீ மபா—மபநித மாரீ ஸா—போன்ற பிடிகளில் மத்யம ரிஷபங்களில் ஓரிகை கொடுக்கவேண்டும்.

* "மயூரத்வனி" என்று சிலர் வழங்குகிறார்கள்.

உதாரணம் :—அய்யரவர்களின் " ராகஸுதாரஸ " என்ற கீர்த்தனம்.

211. ஸாம :—28-வது மேளகர்த்தாவில் ஜன்ய மான ரக்தியுள்ள ஔடுவ ஷாடவ ராகம்.

ஆரோ :—ஸரிம் பதஸா

அவரோ :—ஸதபம கரிஸா

உருக்க முள்ள கமக ராகம். ஸரிமா மகரி காரி ரிம பாதபா மகரி காரி—ரிமப தஸா—ஸாஸ தாப மம் மகாரி ரிகரீ—ஸரிமா மகரி—மபத ஸதாப போன்ற பிடிகள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

உதாரணம் :—அய்யரவர்களின் " சாந்தமுலேக " என்ற கீர்த்தனம் பிரஸித்தம். பட்டணம் ஸுப்ரமண்ய்யரின் " மறவகவேஓமனஸா " என்ற கீர்த்தனமும் உண்டு.

212. நவரஸகன்டை :—28-வது மேளகர்த்தாவில் உண்டான ரக்திராகம். ஆரோகணத்தில் தைவத நிஷாதங்களும், அவரோகணத்தில் பஞ்சமும் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிம பஸா

அவரோ :—ஸநித மகரிஸ

மத்யமம் ஜீவஸ்வரம் கிரமமான எந்த ப்ரஸ்தாரமும் ரஞ்ஜகமாயிருக்கும். ஸகம பாம கமப தமா கரிஸ—ஸகமப நிதமா கரிஸா—ஸகம பஸா நிதமா கரிஸ—பாப ஸாஸ கரிகமா மகரிஸா—ரிநீத மாக ரிஸா—ஸநித பஸா போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் " நின்றுவிஞநாமதிந்து " " பலுகுகண்ட " என்ற கீர்த்தனைகள் பிரஸித்தம்.

213. நாராயணி:—இதுவும் 28-வது மேளத்தில் உண்டான ரக்தியான ஔடுவ ஷாடவ ராகம்.

ஆரோ :—ஸரிமபதஸ

அவரோ :—ஸநிதப மரிஸ

காந்தாரம் வர்ஜ்யம். நிஷாதம் ஆரோகணத்தில் வர்ஜ்யம்—நீதபா மரீம—பதஸா ஸநிநித தஸா—ஸநி தபம பதாஸ—ஸரிம ரிமா மரிஸ நிதஸ நிதபா—ரிமப தஸா நிதபா—பதபம ரிமரிஸ போன்ற பிடிகள் ராகஸ்வரூபத்தை விளக்கும் ரஞ்ஜகமான பிடிகள்.

உதாரணம் :—அய்யரவர்களின் "ராமநீவேகானி" பட்டணம் ஸுப்ரமண்ய அய்யரின் "கன்னதண்டரீ நீவே" என்ற கீர்த்தனங்கள்.

214. **காபிநாராயணி** :—28-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஷாடவ ஸம்பூர்ண ராகம். அவரோகணத்தில் வக்ரம்.

ஆரோ :—ஸரிமப தநிஸா

அவரோ :—ஸநிதப மரிகா ரிஸ

ரிம ரிமா—பத பதநீ—தநிநித தபபம மரிகரி ரிகக ரிஸா போன்ற ஆஹதப்ரத்யாஹத கமகங்கள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "ஸரஸஸாமதான"

215. **பங்காளா** :—28-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஔடுவ வக்ர ஷாடவ ராகம்.

ஆரோ :—ஸரிகம பமரி பஸ

அவரோ :—ஸநிபம ரிகா ரிஸ

ரிபா மகரி ஸரிக ரிரீ—பஸா ஸநிப மரிகா ரிரீ—நிநி பா பமரீ மபஸா—ஸரிகரி ஸரிஸநி பஸா ஸநிபா—பமரீ கரிஸா போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "கிரிராஜஸுதா" "முனுபேதெலியக" என்ற கீர்த்தனைகள் பிரஸித்தம்.*

* ஆங்கிலேய ஸங்கீத மெட்டுகள் மாதிரி.

216. பஹுதாரி :—28-வது மேளத்தில் ஜன்யமான வக்ர ஷாடவ ஔடுவ ரக்திராகம்.

ஆரோ :—ஸகம தபத நிஸா

அவரோ :—ஸநிப மகஸ

பதநிபா மகா—மதபத நிஸாநி பமகா—கமதப தநீப மகா—கமதப பமகஸா போன்ற பிடிகள் ரஞ்ஜகம்

உதாரணம் :—அய்யரவர்களின் "ப்ரோவபாரமா" என்ற கீர்த்தனம்.

217. சாயாதரங்கிணி :—28-வது மேளகர்த்தாவில் ஜன்யமான பலபாஷங்க ராகங்களில் இதுவுமொன்று.

ஆரோ :—ஸரிம கமப நிஸா

அவரோ :—ஸநிதப மகரிஸா

கிரமமான ஸஞ்சாரங்களினுலேயே ராகஸ்வரூபம் நன்கு விளங்கக் கூடியது.

ஸரிமா மகமா—பநிஸா நிதபா—மகம பநிநி தபா—பஸா நிதப மகாரி என்ற ப்ரயோகங்கள் ரஞ்ஜகம். மேலே காட்டியபடி அவரோஹணங்களில் நிஷாதம் குறைவு.

உதாரணம் :—அய்யரவர்களின் "இதரதைவமுல வல்ல" "தீக்ஷிதரவர்களின்" "ஸரஸ்வதி சாயா தரங்கிணி" என்ற கீர்த்தனைகள்.

218, கோகிலத்வனி :—28-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ண ராகம். ஆரோகணத்தில் பஞ்சமம் வர்ஜ்யம். மிகுந்த ரக்தியான ராகம். சுத்தமத்யம சதுச்ருதி தைவதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள்.

ஆரோ :—ஸரிக மதநி தஸ

அவரோ :—ஸநிதநி பமகரிஸ

மதநி தஸா—ரிஸநி தநிப மகரிஸ நிதநி ஸரிகா மதநி பமக ரிகமா—கரிஸ் ரிகா மதா—நிபம்க ரிகமா—தத நித தஸநித நிபமக கமதா நிமதக மதமத—நிதஸநி தநிதஸ ஸரிகரி கமகரி ஸநிதநி பா மதநித தநிதஸா ரிஸரி கரிகம—மகரிஸ நிதநிபா மகரி ஸரிகமா போன்ற பிடிகள் ராகரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "தொலிநேனுஜேயு" "கொளியாடேநாயெட" என்ற கீர்த்தனைகள்.

219. ஸ்வராவளி :—28-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ண ராகம். ஆரோகணத்தில் ரிஷபம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸமகம பநித நிஸ
அவரோ :—ஸநிபத மகரிஸ

உதாரணம் :—அய்யரவர்களின் "ப்ராரப்தமிட்லுண்டக" என்ற கீர்த்தனம்.

220. நாகஸ்வராவளி:—28-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஔடுவ ராகம். ரிஷப நிஷாதங்கள் வர்ஜ்யம். மிகுந்த கம்பீரமான ரக்தி ராகம்.

ஆரோ :—ஸ்கம பதஸ
அவரோ :—ஸதப மகஸ

இந்த ராகத்தில் தாட்டு ப்ரயோகங்கள் மிகவும் ரஞ்ஜகம் :—ஸமகம—பஸதஸ—ஸதபத மபகஸா கமப மகா—மபம கஸா—தஸ்க மபா—பதஸ தஸா—ஸதபம பதஸா போன்ற பிடிகள்.

உதாரணம் :—த்யாகய்யர் அவர்களின் "ஸ்ரீபதே"—பட்டணம் ஸுப்ரமண்ய அய்யரவர்களின் "கருடகமன" என்ற கீர்த்தனங்கள்.

221. ராகபஞ்ஜரம் :—இது 28-வது மேளகர்த்தாவில் ஜன்யம். காந்தாரம் வர்ஜ்யம். ஆரோகணத்தில் வக்ரமாயும் அவரோகணத்தில் பஞ்சமும் வர்ஜ்ய மாயுமுள்ள ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிமப தநிதஸ

அவரோ :—ஸநித மரிஸ

ரிமபத நிதத மரிஸ—நிதப தநிஸ ஸரிமாம—ரிமபத மரிஸ ரிமா—தஸநி தமா ரிஸரிமா போன்ற பிடிகள் ராகஸ்வரூபத்தை நன்கு விளக்கும் அய்யரவர்களின் "ஸார்வபௌம" என்ற கீர்த்தனை ப்ரஸித்தம்.

222. ஸுபோஷிணி :—இது 28-வது மேளகர்த்தாவில் உண்டான ஓர் வக்ர ஸம்பூர்ண ஜன்யமான ராகம்.

ஆரோ :—ஸ்கரிம பதநி பஸா

அவரோ :—ஸதநி பமகஸ

ஸஞ்சார க்ரமங்களினாலேயே ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும். அய்யரவர்களின் "ரமிஞ்சு வாரெவருரா" என்ற கீர்த்தனம் தகுந்த உதாரணம்.

223. மாளவி :—28-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ண ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிகம பநிம தநிஸ

அவரோ :—ஸநிதநி பகம ரிஸ

வக்ரப் பிடிகள் இதில் மிகவும் ரஞ்ஜகம். கமபம தநிஸா—நிஸரி காம கமரீ—ரிஸநி ஸாநித நிபா—காமதா நிதநிபா—மகமரிஸ—ஸரிக மபநி மாத நிஸா போன்ற பிடிகள் மிகவும் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "நெனருஞ்சினாநு" என்ற கீர்த்தனம்.*

---

* சுப்ர. அய்யரின் "இதிநியாயமா" வும் தெரிந்த கீர்த்தனமே.

224. ரவிசந்தரிகா :—28-வது மேளகர்த்தாவில் ஜன்யம் ஒளடுவ வக்ர ஷாடவ ராகம். பஞ்சமம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம தநிதஸ

அவரோ :—ஸநித மகரிஸ

மாம காரி ஸரிகமா நிதமா தஸநி தமா மதநித ஸநி தம—ரிகம காரி ஸரிகா நிதஸ்நி தமக ரிஸா போன்ற பிடிகள் ரஞ்ஜகம். அய்யரவர்களின் "நிரவதி ஸுகதா" "மாகேலரா" என்ற கீர்த்தனைகள் பிரஸித்தம்.

225. ப்ரதாபவராளி :—28-வது மேளத்தில் ஜன்யமான ஒளடுவ ஷாடவ ரஞ்ஜக ராகம். கமக ஓரிகை யுள்ளது.

ஆரோ :—ஸரிமா பஸ

அவரோ :—ஸதப மகரிஸ

ஸரிமா மமக ரிகரீ ரிமபத பாமக ரிமா—மபத பஸா—ரிமமக ரிஸா தபா—மபஸா தபா மகரி மகரிஸ போன்ற ஸஞ்சாரம் ரஞ்ஜகம். அய்யரவர்களின் "விநாஸகொனி" என்ற கீர்த்தனம் தகுந்த உதாரணம்.

226. ஜஞ்ஜோடி :—28-வது மேளகர்த்தாவில் ஜன்யமானமத்யஸ்தாயிராகம். நிஷாதாந்தம். மிகவும் ரஞ்ஜகமான பாஷாங்கம். செஞ்சுருட்டி என்று தமிழில் வழங்குகிறது.

ஆரோ :—தஸரிக மபதநி

அவரோ :—தபமக ரிஸநி தபநி தநிப தஸா

இதில் சில இடங்களில் ஸாதாரண காந்தாரம் காகலி நிஷாதம் இவைகளை ப்ரயோகப்படுத்த வேண்டும். அப்போதுதான் ராகத்தின் பூர்ண ரஞ்ஜகம் வெளிப்

படும். ரிமகரி ஸநிதாபா —பதபத ஸாஸ தஸாஸ ரிமரி பமகா—ககமாம கரிஸ நிஸா—நிஸரிஸ நிதா— தஸரிக மபா மகா—கமபத நிதப மகா கமகரி ஸநிஸரி கரிஸ நிஸரி ஸநிதா—போன்ற பிடிகள் ரஞ்ஜகம். இதில் அநேக ஜாவளிகள்—பதங்கள் காவடிச்சிந்து கள் உள—அய்யரவர்களால் "ராம ராம ராம" என்ற கீர்த்தனையும் உண்டு.

227. த்விஜாவந்தி :—28-வது மேளகர்த்தாவில் ஜன்ய மான வக்ர ஸம்பூர்ண ரக்தி ராகம். இதில் உள்ள காந்தாரம் கொஞ்சம் குறைந்து பேசுவதை அனுபவத்தாலும் கேள்வி யினாலும் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு தடவையாவது கேட்டால் தான் ஸ்வரூபம் நன்கு தெரியும்.

ஆரோ :—ஸரிமக மபத நிஸ

அவரோ :—ஸ்நிதப மகரிகஸ

ஸரிம கமபா—மகரிக ஸா — ஸ்நிதப மகம மகம கரி கஸா—ரிமகம ரிகஸ—ம்கமப தநிஸ நிதபா போன்ற பிடிகள் ரஞ்ஜகம். இதில் அநேக கீர்த்தனைகள் அருணாசல கவிராயர் ராமாயணத்தில் உள்ளன. பதங்கள் உள—தீக்ஷிதரவர்களால் "சேத ஸ்ரீபாலக் ருஷ்ணம்பஜரே" என்ற கீர்த்தனம் உண்டு.

228. தேசாக்ஷி :—இது 28-வது மேளகர்த்தாவில் ஜன்ய மான ராகம். ஆரோகணத்தில் மத்யம நிஷாதங்கள் வர்ஜ யம். அவரோஹணம் வக்ர ஸம்பூர்ணம். காலை நேரத்தில் மிகவும் ரக்தியைக் கொடுக்கும் ராகம்.

ஆரோ :—ஸரிக பதஸ

அவரோ :—ஸநிதப மகம ரிஸ

இது பஞ்சமாந்தராகம் என்றும் மபதஸ ரிகமப— மரிகஸ நிதம என்ற ஸஞ்சாரக்ரமம் உள்ள தென்றும்

அபிப்ராயப்படுவோரும் உண்டு. ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் காணப்படும் நாராயண தேசாக்ஷி என்ற ராகம் 29-வது மேளகர்த்தாவில் ஜன்யமென்றும் ஸரிகம பதநிஸ ஸநிதப மகரிஸ என்ற ஸர்வ ஸ்வர ஸம்பூர்ண ஸஞ்சாரம் காணப்படுகிறது. சைல தேசாக்ஷி என்று 35-வது மேளகர்த்தாவில் ஜன்ய ராகமாகக் காணப்படும் ராகத்திற்கும் இதற்கும் ஸம்பந்தமில்லை. அதில் பமகபதஸா—ஸநிதஸ நிபம ரிஸ என்ற ஸஞ்சாரம் போடப்பட்டிருக்கிறது. அனுபவத்தில் இதில் ஷட்சுருதி ரிஷபம் கலக்கவில்லையாகையால் 28-வது மேளகர்த்தாவில் தான் ஜன்யம் என்று சொல்ல வேண்டும். அம்மாதிரி லக்ஷண கீதமும் இருக்கிறது. இதில் அநேக சில்லரை உருப்புடிகளும் கதை பாட்டுகளும் இருக்கின்றன.

229. நடநாராயணி:—இது 28-வது மேளகர்த்தாவில் உண்டான ஓர் வக்ர ஸம்பூர்ண ஜன்ய ராகம் ரக்தி ராகம் ஆரோகணத்தில் பஞ்சம வர்ஜ்யம் வக்ரம். அவரோகணம் ஸம்பூர்ண வக்ரம்.

ஆரோ:—ஸரிகம தநிதஸ

அவரோ:—ஸ்நிதப மகம ரிஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு. கிரமமான ஸஞ்சாரங்களினாலேயே ராகஸ்வரூபம் விளங்கும்.

உதாரணமாய்:—ஸரிகா மதாத தநிபா மகம ரிஸ—மதநித ஸநிதபா மகம ரிஸ—தநித ஸாஸா ரிகம ரிஸா—ஸநிதபாம கமரீ—ரிகமதா நிதப மகமரி—ஸரிஸ நிதஸ போன்ற பிடிகளில் ராக ஸ்வரூபம் விளங்கும். தீக்ஷிதரவர்களின் "மஹாகணபதே" என்ற கீர்த்தனம் தகுந்த உதாரணம்.

230. மத்தகோகிலம் :—இதுவும் 28-வது மேளகர்த்தாவில் ஜன்யம். நிஷாதாந்தம். காந்தார மத்யமங்கள் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரித தபஸ்
அவரோ :—ஸ்ததப ஸரிஸ

உதாரணம் :—லக்ஷண கீதம் உளது.

231. தீரசங்கராபரணம் :—அல்லது சங்கராபரணம் என்று சுருக்கமாய்ச் சொல்லப்படும். இந்த ராகம் 29-வது மேளகர்த்தாராகம். கம்பீரமான கனராகம் 5-வது சக்ரத்தின் 5-வது ராகம் ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். எப்போதும் பாடக்கூடியது "ஸ்தாப" என்ற ப்ரயோகம் இந்த ராகங்களை நன்கு காட்டும். இதில் அளவிறந்த வர்ணங்கள், பதங்கள், கீர்த்தனைகள் உள.*

உதாரணம் :—அய்யரவர்களின் "ஸ்வரராகஸுதா" என்ற கீர்த்தனம்.

232. அடாணு :—இது 29-வது மேளத்தில் ஜன்யமான புராதன வக்ர ஸம்பூர்ண பாஷாங்க ராகம் என்றும் தேசீயமென்றும் ஸம்பூர்ண ஸ்வரூபம் உள்ள தென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த ராகத்திற்கு ஒரே வழியான ப்ரயோகம் இல்லை இதில் ஸாதாரண மாய் வழங்குகின்ற மூர்ச்சனைகளை அனுபவத்தினால் தான் அறிய முடியும். இதில் இரண்டு நிஷாதங்களும் சிலஸமயங்களில் அற்பமாய் ஸாதாரண காந்தாரமும் வரும். கைசிகி நிஷாதம் தீவ்ரதைவதம் சேரும் பிடிகள் இந்த ராகத்தில் வருகிறபடியால் இதை 28-வது மேளகர்த்தாவில் ஜன்யம் என்று அபிப்ராயப்படுவோரும் உண்டு. ஆனால் பாஷாங்க ராகங்களில் கலப்புஸ்வரம் வருவதால் இந்த அபிப்ராயப் பேதங்கள் ஏற்படுவது ஸகஜம். தவிர பக்கஸ்வரகலப்பு வரும்

* ரிஷப காந்தாரங்களை தீவிரமாகவும் கமகமாகவும் பிடிக்கவேண்டும்.

இடங்களில் அதாவது " ரிமரி கரி ஸதா ரிமககரி ஸஸநி ஸதா போன்ற பிரயோகங்களில் ஸாதாரண காந்தாரம் கலந்து பேசும். ஆகையால் பூர்ண மூர்ச்சனைகளையும் கேட்டு தெரிந்து பாடவேண்டும். ஸ்வரூபத்தை விளங்க வைக்கக் கூடிய விதமாய் அடியில் கண்டபடி ஆரோகண அவரோகணங்கள் விளங்கும் :—

ஆரோ :—ஸரிமப நிபத நிஸ

அவரோ :—ஸநிஸ தாப மபகா ரிஸ

ஆரோகணத்தில் முதலில் வரும் நிஷாதம் கோமல மாகவும் இரண்டாவது தீவ்ரமாகவும் பேசும். அவரோ கணத்தில் ஸ்தாப—மபகா என்று இரக்கஜாருக்களை கவனித்துப் பிடிக்கவேண்டும். இதில் கணக்கில்லாத வர்ணங் கள், கீர்த்தனைகள், பதங்கள் உள.

உதாரணம் :—அய்யரவர்களின் " ஏபாபமு ஜேஸிதி ரா " என்ற கீர்த்தனையில் அடாணு ராகத்தின் ஸ்வரூபம் பூர்த்தியாய் விளங்கு வதைக் காணலாம்.

233. ஆரபி :—இது 29-வது மேளகர்த்தாவில் ஜன்யம். இதுவும் தேவகாந்தாரியும் ஒரே தாய் வயற்றில் பிறந்ததாகை யாலும் ஸ்வல்பமான வித்தியாஸந் தான் உள்ள தாகையா லும் ராக மூர்ச்சனையை நன்கு கவனித்தாலன்றி ஸ்வரூப வித்யாஸம் நன்கு புலப்படாது. இந்த ராகத்திற்கு நிஷாதம் ஒட்டுஸ்வரமாய்ப் பேசுவதால் இதன்

ஆரோ :—ஸரிம பதஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

ரிஷப மத்யம தைவதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள் இதில் முக்யமாய் ஜண்டை ஸ்வரப்ரயோகங்கள் மிகவும் ரஞ்ஜகம். (ததபா மகரீ—ததபப மகரீ—

ஸாஸாரீரீ மகரீ ரீரீம மபா என்றவை) "ஸாதிஞ்சனே" என்ற அய்யரவர்களின் பஞ்சரத்ன கீர்த்தனையில் இதன் பூர்ணஸ்வரூபம் நன்கு விளங்கும்.

234. தேவகாந்தாரி:—வக்ர ஸம்பூர்ண கம்பீர ராகம் 29-வது மேளத்தில் பிறந்தது. பாஷாங்க ராகம் தீர்க்கமான தீவ்ரஸ்வரங்களை யுடையது தைவதம் இரண்டு நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள் ஷட்ஜத்திற்கு காகலி நிஷாதமும்—மத்யஸ்தாயி வக்ரப்ரயோகங்களுக்கு கைசிகி நிஷாதங்களும் கலந்து பேசும் தைவத மத்யமங்களை தீர்க்கமாய்ப் பிடிக்க வேண்டும். கேள்வியின் பேரில் பாட வேண்டும்.

ஆரோ:—ஸரிகரி மாப தநிஸா
அவரோ:—ஸநிதா பமக ரீஸா

அய்யரவர்கள் இந்தராகத்தில் அநேக கீர்த்தனைகள் செய்திருக்கிறார்கள். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தினுஸான ஜீவகளை விளங்குவது ஊன்றி கவனிப் போருக்குத் தெரியும்.

ஸாரி கரீ—ரிமா பதாப—மபதபா மகரீ—மபதநி ஸநி தாப—தரீஸா நிதாபா—பதநித மபதப மகரீ—ஸரி மபா—ஸநி தாபா நிஸ்ரிஸ ஸநிதா பா—பதநித மப பத பதநித தப பமகரீ ஸரிஸநி தாரீ ஸா முதலிய ப்ரயோகங்களில் நிஷாதம் குறைவதைக் கவனிக்கவும். மதா—தரீ—ஸதா போன்ற தாட்டு ப்ரயோகங்கள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

உதாரணம்:—அய்யரவர்களின் "க்ஷீரஸாகரசயன" "கருணாஸமுத்ரா" முதலிய கீர்த்தனைகள்.

குறிப்பு:—ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் 22-வது மேளகர்த்தாவில் ஜன்யம் என்று ஒரு தேவகாந்தா

ரியும், 29-வது மேளகர்த்தாவில் ஜன்யமானதென்று ஒரு தேவகாந்தாரியும் ஆக இரண்டு தேவகாந்தாரிகள் காணப் படுகின்றன. அவைகளில் பின்னுள்ளதில் "க்ஷிதிஜாரமணம் சிந்தயே" என்ற கீர்த்தனம் தீக்ஷிதரவர்களுடையது.

235. பேகட :—29-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ண ரக்திராகம். புராதனமான பாஷாங்க ராகம். கமக ஒரிலைகள் நிறைந்த ராகம்.

ஆரோ :—ஸகரி கமா பதநீத பஸா

அவரோ : ஸநீத பமாக ரிஸா

இதில் வரும் மத்யமம் சுத்த மத்யமத்தைவிட ஒரு சுருதி கூடுதலாய்ப் பேசுவது கவனிக்கப்பட வேண்டும். இதை கமகத்துடன் பிடிப்பதினால் இந்த ராகத்தின் ரக்தி விளங்கும். பதநீதப என்ற பிடியால் நிஷாதம் குறைவாகவும் ஸநிதப என்ற பிடியில் கூடுதலாகவும் பேசும். "தரிஸா" என்றது லக்ஷணப் பிடிப்பு. வக்ர ப்ரயோகங்களும் தாட்டு ப்ரயோகங்களும் மிகவும் ரஞ்ஜகம், இதை வர்ணங்களில் எத்துகடை ஸ்வரங்களில் காணலாம். இதில் அநேக வர்ணங்கள்—பதங்கள் கீர்த்தனைகள் உள. அய்யரவர்களின் "தனவாரி தனமு" "நாதோபாஸன" முதலிய கீர்த்தனைகள் மிகவும் பிரஸித்தம்.

236. பிலஹரி :—இது 29-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ரக்தியுள்ள ஔடவ ஸம்பூர்ண பாஷாங்கம்.

ஆரோ :—ஸரிக பதஸா

அவரோ :—ஸநிதப மகரிஸ

"ஸநிதப" என்ற ஷட்ஜம் சேர்ந்த அவரோகப்ர யோகத்தில் நி காகலி நிஷாதமும்—"பத நி த ப" என்ற ப்ரயோகத்தில் நி கைசிகியும் பேசுவது கவனிக் கத் தக்கது. இதில்அநேக வர்ணங்கள்—பதங்கள் கீர்த்தனைகள் உள. அய்யரவர்களின்" தொருகுநா" "நாஜீவாதாரா" என்ற கீர்த்தனைகள் பிரஸித்தம்.

237. சுத்தஸாவேரி:—29-வது மேளகர்த்தாவில் ஜன்யம். காந்தார நிஷாதங்கள் வர்ஜ்யம். கம்பீர மான ரக்திராகம்.

ஆரோ:—ஸரிம பதஸ

அவரோ:—ஸதப மரிஸ

ஸரிம ரிமா—மபத பதா—பதஸ் தஸா— ஸ்ரிமா ஸரி ஸதஸா—தஸதப மபதஸ ரிமரி ஸதப மபதப மரீ— ரிமபம ரிமரிஸ—ஸரிமரி ஸரிஸ தஸா போன்ற எவ் விதமான பிடிகளும் ராக ரஞ்ஜகம்.

உதாரணம்:—"த்ரிபுரஸுந்தரி நீ தெலு கொண்டி" "காலஹரண" என்ற அய்யரவர்களின் கீர்த்தனைகள் பிரஸித்தம்.

238. கன்னடா:—இது 29-வது மேளகர்த்தாவில் ஜன்ய மான வக்ர ஷாடவ வக்ர ஸம்பூர்ணம் இதன் மூர்ச்சனைகள் வக்ரமாகவே வரும். ஆகையால் நிகாவுடன் பாடவேண்டும்.

ஆரோ:—ஸநிஸ கமப மதநிஸ

அவரோ:—ஸநிஸத பமப கமரிஸ

இதில் தைவதம் ஜீவஸ்வரமாகையால் அதை தீர்க்க மாய்ப் பிடித்து விந்யாஸம் செய்வது ரஞ்ஜகம்:— கமத பதா—தநிஸ நிஸ்தா ப—மபமக மதா—மத நிஸ ரிஸதா—தநிஸரி ஸகம ரிஸ்நிஸ தாஸதாப கம

தாநிஸ தப—கமதப கமரிஸ போன்ற ஸஞ்சாரங்களால் ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும்—அய்யரவர்களின் "ஸாகேத நிகேதன", பட்டண ஸுப்ரமண்ய அய்யரவர்களின் "இந்தகண்டே காவலனு" என்ற கீர்த்தனைகள் பிரஸித்தம்.

239. கருடத்வனி:—29-வது மேளத்தில் ஜன்யமான ஸம்பூர்ண ஔடுவம் மிகுந்த ரக்தியான ராகம்.

ஆரோ:—ஸரிக மபத நிஸா
அவரோ:—ஸதப கரிஸா

இதில் தாட்டு வரிசை ப்ரயோகங்கள் கிரமமாகப் பிடிப்பதினால் ராகத்தின் காம்பீர்ய பாவத்தையும் நிஜஸ்வரூபத்தையும் காணலாம். பதநிஸ தாப—கமபத நிஸரி கரிஸ தாப கமபத பகரிஸ ரிகமா கமபத நிஸதப மபக ரிஸா—ஸதபம பகரிஸ ஸரி—நிஸத—பதப—கமபத பகரிஸ—ஸரிகம பதநிஸ ரிக ரிஸ—ஸநிஸ தபக மபதப கரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம். அய்யரவர்களின் "தத்வமெருகதரமா" என்ற கீர்த்தனை பிரஸித்தம்.

240. கோலாஹலம்:—29-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ண ராகம் பாடுவதற்கும் சுலபமானது.

ஆரோ:—ஸபம கமப தநிஸா
அவரோ:—ஸநித பமக ரிஸ

"ஸபமகம" என்ற வக்ர ப்ரயோகம் அடிக்கடி வரும். அய்யரவர்களின் "மதிலோன" என்ற கீர்த்தனம் தகுந்த உதாரணம்.

241. பூர்ணசந்திரிகா:—29-வது மேளத்தில் ஜன்யமான வக்ர ஷாடவ ராகம். வக்ரமான பிடிகளினலேயே ராக ரஞ்ஜகம். ரக்தியான ராகம்.

ஆரோ :—ஸரிகம பத பஸா

அவரோ :—ஸநிபத பமரிக மரிஸ

ரிஷபத்தை சில இடங்களில் தீர்க்கமாய்ப் பிடித்து விந்யாஸம் செய்ய வேண்டும் :—ரீரீ கமபா பமரீ கம ரிஸ—ரீரிஸநி பஸா ரீகமரீ—கமபத பபமம ரிகமரி ஸஸரீ கமபம ரிகமரி ஸரிக மபா—தபமரி கமரிஸ— ரிகமப தபரிஸ—ரிகமரி ஸநிபா தபமரி கமரீ—கமபரி கமபத பபஸா ரிகமரி ஸரிஸநிபதப தாமம ரிகம ரிஸ போன்ற பிடிகள் மிகவும் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யாவர்களின் "தெலிஸிராம சிந்தனதோ" என்ற கீர்த்தனம் பிரஸித்தம்.

242. கேதாரம் :—29-வது மேளத்தில் ஜனித்த கம்பீர கமக ராகங்களில் ஒன்று. பாஷாங்கம். வக்ர மத்யமம் காகலி நிஷாதம் ராகச் சாயாஸ்வரங்கள். சில ஸமயங்களில் கமக ஒரிஜையால் நிஷாதம் குறைந்து கைசிகி நிஷாதமே தைவதமாய் பேசும். இதை கவனியாது சிலர் தைவதமே இந்த ராகத்திற்கு இல்லை யென்று ஆக்ஷேபிப்பார்கள். ஆகையால் அந்த இடங்களை கவனித்துப் பாட வேண்டும். இதற்கு கேள்வி அவசியம்.

ஆரோ :—ஸமகம பநிஸ

அவரோ :—ஸ்நிபம கமபத பமக ரிஸ

கா—கமபம கரிகா—ஸமகம பதப மகா—கமபநி ஸநி பமகா—தபாம கமகரிஸ—ஸரி கஸா—ஸபமபா கத மபதபம—பநிஸ ரிகா ரிஸாநி பாமா காரிஸா—கமபத பமகம கரிஸ ஸமகம பநிஸரி காரிஸா நிபா மாகாரி கமபநி பம கரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம். மேலே நிஷாதம் குறைந்து பேசுவதைக் கவனிக்கவும். இதில் அநேக கீர்த்தனங்கள் பதங்கள் உள.

உதாரணமாக :—அய்யரவர்களின் "மரசேவாடனு" "ராமாநீயேதனகு" என்ற கீர்த்தனைகள் ப்ரஸித்தம்.

243. ஜனரஞ்ஜனி ;—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ஔடுவ ராகம். 29-வது மேளத்தில் ஜன்யம். அவரோகணத்தில் நிஷாத காந்தாரங்கள் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம பதப நிஸ—

அவரோ :—ஸதப மரீஸ

ஸரிக மரீ—ரிகமப தபப மரீ—பதபநி ஸதபமரீ—ஸரிகம பாமரீ—தபாம பநிஸா ஸதாப பமரீ—ஸரிகமரீஸா போன்ற பிடிகள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "ஸ்மரணேஸுகம்", "விடஜாலதுரா" என்ற கீர்த்தனைகள் பிரஸித்தம்.

244. ஹம்ஸத்வநி :—29-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ரஞ்ஜகமான ஔடுவ ராகம். மத்யம தைவதங்கள் வர்ஜ்யம். அந்தர காந்தாரம் காகலி நிஷாதம் இவைகள் ராகச் சாயாஸ்வரங்கள். இதில் தாட்டு ப்ரயோகங்கள் ரஞ்ஜகம்.*

ஆரோ :—ஸரிகப நி ஸா

அவரோ :—ஸநிப கரிஸா

இதில் வர்ணங்கள் கீர்த்தனைகள் உள.

உதாரணமாய் :—"ரகுநாயகா" என்ற அய்யரவர்களின் கீர்த்தனம் பிரஸித்தம். தீக்ஷிதரவர்களின் "வாதாபி கணபதிம் பஜேஹம்" என்கிற கீர்த்தனமும் பிரஸித்தம்.

245. விவர்த்தனி :—29-வது மேளகர்த்தாவில் உண்டான ஔடுவ ஸம்பூர்ணம். மிகுந்த ரக்தி ராகம்.

---

* ஸக, ரிப, கநி, பஸ்—போன்றவைகள்.

ஆரோ :—ஸரிம ஸபா

அவரோ :—ஸநிதப மகரிஸ

பதபஸ ாஸ—பரீரீ மகக ரிஸா—ரிஸா நிதப ரிமபஸா நிதப—பதப மகரி—ஸரிமா மகரிஸ—ஸநிதப பப ஸா—போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "விநவேஓமனஸா" என்ற கீர்த்தனம்.

246. ஸிந்துமந்தாரி :—29-வது மேளத்தில் ஜன்யமான ஔடுவ வக்ர ராகம். ஆரோகணத்தில் தைவத நிஷாதங்கள் வர்ஜ்யம்—வக்ரமான பிடிகள் ரஞ்ஜகம்.

ஆரோ :—ஸரிகம பஸ்ா

அவரோ :—ஸநிதப கமதப மரிஸ

உதாரணம் :—பட்டணம் ஸுப்ரமண்ய அய்யரவர்களின் "கருணிஞ்சுடகு" என்ற கீர்த்தனம்.

247. குரஞ்ஜி :—29-வது மேளகர்த்தாவில் ஜன்யமான புராதன ரக்தி ராகம். உபாங்கம். தைவதாந்தராகம். மத்யஸ்தாயி ஸஞ்சாரி யாகையால் மத்யம சுருதியில் பாடுவது மிகவும் ரஞ்ஜகம்.

ஆரோ :—ஸநிஸ ரிகம பத

அவரோ :—தபம கரிஸ நிஸ

இதில் அநேக க்ருதிகள் ப்ரபந்தங்கள் பதங்கள் உள.

உதாரணமாய் :—தீக்ஷிதரவர்களின் "ஸ்ரீ வேணு கோபல" என்ற கீர்த்தனம் பிரஸித்தம். "சிவதீக்ஷாபரு" என்ற பதமும் பிரஸித்தம்.

248. நவரோஜ் :—இதுவும் 29-வது மேளத்தில் உண்டான மத்யஸ்தாயி ஸஞ்சாரியான ரக்தி ராகம். மங்களகர

மான மிகபூர்வீக ராகம். பஞ்சமாந்த ராகமாகையால் மத்யம சுருதியில் பாடுவது ரஞ்ஜகம். இதைப் பாடுவதற்கு அனுபவம் முக்யம். கல்யாண காலங்களில் நமது ஸ்த்ரீகள் இந்த ராகத்தில் பாடுவார்கள்.

ஆரோ :—பதநிஸ ரிகமப
அவரோ :—பமகரி ஸநிஸ தாப

இதில் அநேக தேவாரப்பண்கள் உண்டு. ஸதா சிவப்ரம்ஹேந்த்ராளின் கீர்த்தனைகள் சில உள.

உதாரணமாக :—ஸுந்தரமூர்த்தி நாயனாரின் "பொன்னார் மேனியனே" என்ற தேவாரப்பண் ப்ரஸித்தம். "சிந்தாநாஸ்திகில" என்ற ப்ரம்ஹேந்த்ராளின் கீர்த்தனமும் ப்ரஸித்தம்.

249. குதூஹலம் :—29-வது மேளத்தில் ஜன்யமான வக்ர ஔடுவ ஸம்பூர்ண ராகம்.

ஆரோ :—ஸரிமா நிதஸா
அவரோ :—ஸநிதப மகரிஸ

ரிமநீ தபஸா—ஸநிதப மாநி தஸா—ஸரிம கரிஸ நித ஸா—மநிதப மகரிமா ஸரிமா பமக ரிஸா போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—வெங்கிட சுப்பய்யரின் "ஆவாருதா" என்ற கீர்த்தனம்.

250. கதனகுதூகலம் :—இதுவும் 29-வது மேளகர்த்தாவில் ஜன்யம். உற்று நோக்குங்கால் இதன் வக்ர ஸஞ்சாரம் ஆங்கில ஸங்கீத மெட்டைத் தழுவினதாயிருக்கும். இதில் வரும் தாட்டு ஸஞ்சாரங்கள் இன்றியமையாதன.

ஆரோ :—ஸரிம தநிக பஸா
அவரோ :—ஸநிதப மகரிஸ

ஸரிமா—தபபம மககரி ஸரி ஸநி தபஸா — ஸரி மகாரிஸ—ஸரிமக—ரிமதப—ஸஸநி—ஸரிமக ரிமபம கரிஸரி மகரிஸ நிதாப—கபா பஸா ஸரீ ரிமா மகரீ மகா கரிஸ நிநிதத பமகரி ஸரிரிம மததநி கபபஸ ஸரிரிம மககரி ரிஸஸநி நிததப பமக ரிஸா போன்ற பிடிகள் ரஞ்ஜகம். பட்டணம் ஸுப்ரமண்ய அய்ய ரவர்களின் "ரகுவம்ச ஸுதாம்புதி" என்ற கீர்த் தனம் பிரஸித்தம்.

251. ப்யாக்:—இது ஒரு தேசிய வக்ர ஸம்பூர்ண ராகம். 29-வது மேளத்தில் ஜன்யம் என்று தெரிகிறது. அது போல் லக்ஷண கீதமும் உண்டு. பாஷாங்க தேசிய மாகை யால் இதில் அன்யஸ்வரங்கள் கலப்பு அதிகம். அதை மிகவும் கவனித்து கேள்வியின் மேல் பாடவேண்டும. காகலி நிஷாதம அந்தரகாந்தாரம் சுத்த மத்யம ப்ரதிமத்ய மங்கள் ராகச்சாயா ஸ்வரங்கள். சில ஸமயங்களில் சுத்த மத்யமத்தை விட கொஞ்சம் தீவ்ரமான பேகட ராகமத் யமும் இதில் கலக்கும். சில ஸமயங்களில் கைசிகி நிஷா தமும் பேசும்.

ஆரோ :—ஸகம பநிதா நிஸ

அவரோ :—ஸநிதப மகா மதபம கரிஸா

ஆரோகணத்தில் காணப்படும் மத்யமம் சுத்த மத்யம மாகவும் அவரோகணத்தில் காணப்படும் மூன்று மத் யமங்களும் முறையே ப்ரதிமத்யம—தீவ்ரமத்யம— சுத்த மத்யமங்கள் என்பதை கவனிக்க வேண்டும். ஸகமபாமகமகா—கமப நிதநி தபம காகம பநிதநி ஸநிதபமகா—ஸாநித பமாம மகர் போன்ற பிடி கள் ரஞ்ஜகம். ஸாநித பமம மகா என்ற பிடியில் முறையே மேல்சொன்ன 3 மத்யமங்களும் கமக

ஓரிகையாய்ப் பேசும். இதில் அநேக ஜாவளிகள் கீர்த்தனைகள் உள.

உதாரணம் :—"நிருபமகுண ஸாமி நின்னே" என்ற ஜாவளி ப்ரஸித்தம்.

252. கௌடமல்லாரு :—29-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஓர் ஔடுவ ஷாடவ ராகம். ஆரோகணத்தில் காந்தார நிஷாதங்களும் அவரோகணத்தில் பஞ்சமும் வர்ஜ்யம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிம பதஸ

அவரோ :—ஸநித மகரிஸ

ஸரிமா மகரிஸா—ரிமபா பதமா கரிஸ—நிதமப தஸாஸ நிதமா மபதம கரிஸ—ரிமாம பாப ததநித—தஸநித மாமகா—ரிமாம பதம கரிஸ—ஸரிம கரிஸ நிதபத மகதம கரிஸ—போன்ற பிடிகள் மிகவும் ரஞ்ஜகம்.

253. ஆஹிரிநாட :—இது 29-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஷாடவம். ரிஷபம் வர்ஜ்யம் பாஷாங்கம்.

ஆரோ :—ஸமகம பதநிஸ

அவரோ :—ஸநிபத நிபகம மகஸ

பதநிப என்ற வக்ர பிடியில் கைசிகி நிஷாதம் பேசும். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஸமகம பதநி பதநிப கமாம—ஸமாம ககமா மகஸ—ஸநிஸ மகம—கஸமம கமபா தநிபப தநிஸா—ஸநித நிபா—பதநி ஸாநி பதநீ பக மமகஸ—நிபஸநி பதநிப கமாம கமபத நிஸாநி பதநிப மமகஸ போன்ற ஸஞ்சாரம் ராக ஸ்வரூபத்தை விளக்கும்.

254. **நாகத்வனி** :—இது 29-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ண ராகம். வக்ரமான பிடிகளினாலேயே ராகரஞ்ஜகம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிஸ, மகம, பநித, நிஸா

அவரோ :—ஸநிதநி பம ஸகா

ஸரிஸம கமபா—நிதம பநித நிப—பபநித நிஸா நிபா—மகம பநித நிபா—ஸரிஸ ஸநித நிபா—நிதநி ஸாநித நிப மகா (கமபநி தபமகா—பஸாநி தநிப மகா) ஸரிஸ மகஸ நிதநிபா—கமமப நித தநிபப மமகா—பாபம கஸா போன்ற பிடிகள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

255. **சுத்தவஸந்தம்** :—இதுவும் 29-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவ, வக்ர ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் தைவதம் வர்ஜ்யம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிகம பநிஸ

அவரோ :—ஸதநிப மகரிஸ

கமபநி தநிப மகா—ஸதாநி பாமகா—கமபநி பம கரிஸ—போன்ற ஸஞ்சாரம் ரஞ்ஜகம்.

256. **நாகபூஷணி** :—இது 29-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஓர் ஷாடவ ஔடுவம். மிகவும் ரஞ்ஜக மானது காந்தாரம் வர்ஜ்யம். அவரோகணத்தில் நிஷாதமும் வர்ஜ்யம். இதை ஊன்றி கவனிக்கையில் இதில் வரும் ப்ரயோகங்கள் ஆங்கில ஸங்கீத பாணியைத் தழுவி நிற்பதைக் காணலாம்.

ஆரோ :—ஸரிம பதநிஸ

அவரோ :—ஸதப மரிஸ

தைவத மத்யமங்கள் ஜீவஸ்வரமாகையால் அதை தீர்க்கமாய்ப் பிடித்து விந்யாஸம் செய்தல் ரஞ்ஜகம். உதாரணமாய் :—ஸரிமா மரிஸ—ரிமபதா தபாப மாம பதநிஸ தாப மரீரீ—ரிமாம பதநீ தபாப—ஸரிமரிஸ—நிஸரி ஸத—தநிஸ தப—மபதபம—ரிமப மரிஸ—மபதநி ஸதாப மரிஸ—தாதா—தநி ஸதா—நிஸரி ஸதா—ஸரிம ரிஸ நிஸதா ரிமபத நிஸதா—பாபா மரிஸ போன்ற பிடிகள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

257. மாஹுரி :—இது 29-வது மேளகர்த்தாவில் ஜன்யம். நிஷாதாந்த வக்ர ராகம். ஆரோகணத்தில் தைவதம் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிகரி மாபநீ

அவரோ :—தபம கரிஸ

ஸரிகரி மகரி—மாம கரிஸ—ரிமாம பாப மகரீ—மபநித பமகரீ—நிதப மாப—மகம பாப நிதபா—பதபநீ தாப மாம—ரிமாம கரிஸா போன்ற பிடிகள் ரஞ்ஜகம். ஸங்கீத ஸம்ப்ரதாயப்ரதர் சினியில் இந்த ராகம் 28-வது மேளகர்த்தாவில் ஜன்யம். என்று காணப்படுகிறது. ஸம்பூர்ண உபாங்க ராகமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இதில் தீக்ஷிதரவர்களால் "மாமவ ரகுவீர" என்ற கீர்த்தனமும் இருக்கிறது.

258. பூர்வகௌளை :—இதுவும் 29-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ண ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிமக ரிமபநி தநிஸா

அவரோ :—ஸநிதப மகரிஸ

ஸரிமாம—காரி மாம—பாப நிதநிஸா—ஸநிதபா பநிதபா—ரிமபநி தநிதபா—ஸாஸ ரீஸ—ஸரிமக

ரிஸநி தபா—ரிமபநீ தபாப மகரி ஸரிக ரிஸா இது போன்ற ஸஞ்சாரங்களை உற்று நோக்குங்கால் ஆங்கில ஸங்கீத பாணியைத் தழுவி நிற்பதைக் காணலாம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு. ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் இந்த ராகம் "ஸகரிக ஸரிமப தநிஸ ஸநிதப மகரிஸ" என்ற ஸஞ்சாரமுள்ள தாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இதில் கீர்த்தனைகள் இருப்பதாகத் தெரியவில்லை.

259. சம்புக்ரியா:—இதுவும் 29-வது மேளத்தில் ஜன்ய மான ரக்தி ராகம். வக்ர ஷாடவம். தைவதம் வர்ஜ்யம். வக்ரப் பிடிகளினாலேயே ராக ரஞ்ஜகம் ஏற்படும்.

ஆரோ:—ஸகரி மப நிஸா

அவரோ:—ஸநிப நிமா கரிஸ

மத்யம நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள் விந்யாஸம் செய்கையில் அவைகளை தீர்க்கமாய்ப் பிடிக்க வேண்டும். ஸகரி மாம—பநீநிபா—மாகரி ஸகரிமா—பநிமா பநிஸநி மாமகா—ரிமபநி மாம கரிஸ—பநிஸ கரிஸ—ரிமாம கரிஸ—ரிஸநி பநிமாம— ரிமபநி மாமக ரிஸா போன்ற ஸஞ்சாரங்கள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

260. ஜுலாவ்:—இதுவும் 29-வது மேளகர்த்தாவில் ஜன்யம். பஞ்சமாந்த ஷாடவ ராகம். தைவதம் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ:—பநிஸரி கமப

அவரோ:—பமகரி ஸநிபா

மத்யமும் நிஷாதமும் ராகச்சாயா ஸ்வரங்களாகை யால் அவைகளை ஊன்றிப் பிடித்து பாடுதலவசியம்.

நவரோஜூக்கும் இத்றகும் நெருங்கிய ஸம்பதம் இருப்பதால் கவனித்துப் பாடவேண்டும். நிஷாதத்தை தீர்க்கமாய்ப் பிடிப்பது முறை.

261. நாகாநந்தினி :—இது 30-வது மேளகர்த்தா ராகம். இதில் வரும் ஷட்சுருதி தைவதத்தை கவனமாய்ப் பிடித்துப் பாடவேண்டும். ஸர்வஸ்வர ஸம்பூர்ண மாகையால் சுலபமாய்ப் பாடலாம். இதில் லக்ஷண கீதம் உண்டு. அய்யரவர்களால் "ஸத்தலேனிதினமு" என்ற கீர்த்தனம் தகுந்த உதாரணம்.

262. நாகாபரணம் :—இது 30-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ண ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிகம பநித நிஸா

அவரோ :—ஸநிபம கமரிஸ

கிரமமான ஸஞ்சாரங்களினுலேயே ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும். இதில் தீக்ஷிதரவர்களால் "நாகாபரணம் நகஜாபரணம்" என்ற கீர்த்தனை உண்டு.

263. ஸாமந்தம் :—இதுவும் 30-வது மேளத்தில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிஸ மகம பதநிஸ

அவரோ :—ஸநிதநி பமக ரிஸ

வக்ர மான பிடிகளினுல் ராக ரஞ்ஜகம்.

ஸரிஸ மாகமா—பதநிஸ நிதநீ பமா—மகம பாம காரிஸ—ஸமகம கரிஸரிஸ நிதநிப தநிஸா போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

264. யாகப்ரியா :—இது 31-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். ஆருவது சக்ரத்தில் முதல் ராக

மாகையால் சுத்த தைவத நிஷாதங்களும் ஷட்சுருதி ரிஷப அந்தர காந்தாரங்களும் ராகச் சாயா ஸ்வரங்கள்.

265. **கலஹம்ஸ:**—இது 31-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவ வக்ரம்—காந்தாரம் வர்ஜ்யம்.

ஆரோ:—ஸரீம தநிதஸ்

அவரோ:—ஸநீத பமரீஸ

கிரமமான ஸஞ்சாரங்களினாலேயே ராக ஸ்வரூபம் விளங்கும். இதில் லக்ஷண கீதம் உண்டு.

266. **ராகவர்த்தனி:**—இது 32-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். கைசிகி நிஷாதம் ஷட்ச்ருதி ரிஷபம் ராகச் சாயா ஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு.

267. ராகசூடாமணி:—இது 32-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஔடவ ஷாடவ ராகம். ஆரோகணத்தில் தைவத நிஷாதங்களும், அவரோகணத்தில் பஞ்சமும் வர்ஜ்யம்.

ஆரோ:—ஸரிகம பஸா

அவரோ:—ஸநிதம ரிகஸா

அவரோகணத்தில் "ஸநித மரிகஸா" என்ற வக்ர ப்ரயோகம் லக்ஷண கீதத்தில் காணப்படுகிறது.

268. ஹிந்தோளதர்பார்:—இதுவும் 32-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ரக்தி ராகம். ஆரோகணத்தில் ரிஷப தைவத நிஷாதங்களும் அவரோகணத்தில் காந்தாரமும் வர்ஜ்யம்.

ஆரோ:—ஸகம பஸ

அவரோ:—ஸநிதப மரீஸ

ஸகம பாப நிதபா—மபநீத பமரீ ரிஸா—பஸநித பாப மகம பாப மரீரீ—ஸகம பாமரீஸ—ஸகரி ஸநித—பஸா நிதப மாமரீஸ ஆரோகணத்தில் அந்தர காந்தாரத்தையும் அவரோகணத்தில் ஷட்ச்ருதி ரிஷபத்தையும் கவனமாய்ப் பிடித்து விந்யாஸம் செய்ய வேண்டும்.

269. காங்கேயபூஷணி :—இது 33-வது மேளகர்த்தா ராகம். ஷட்ச்ருதி ரிஷப அந்தர காந்தார சுத்த தைவத கைசிகி நிஷாதங்கள் ராகச் சாயா ஸ்வரங்கள். ஸர்வஸ்வர ஸம்பூர்ண ரக்தி ராகம். அய்யரவர்களின் "எவ்வரேராம" என்ற கீர்த்தனத்தில் ராக ஸ்வரூபம் விளங்குவதைக் கேள்வி யால் அறிந்து கொள்ள வேணும்.

270. கங்காதரங்கிணீ :—இது 33-வது மேளகர்த்தாவின் ஜன்யமான ஔடுவ வக்ர ஸம்பூர்ண ராகம்.

ஆரோ :—ஸரிகம பஸா

அவரோ :—ஸநிதப மகம ரிஸ

"பஸாநி தபம கமரிஸ" என்பது லக்ஷணப் பிடிப்பு. இதில் லக்ஷண கீதம் உண்டு. ஸங்கீத ஸம்ப்ரதாயப் ரதர்சினியில் "ஸரீகமா பதா நிஸா—ஸநிஸத மமக மரிஸ" என்ற ஸஞ்சாரம் குறிக்கப்பட்டிருக்கிறது. இதில் தீக்ஷிதரவர்களால் "வரதராஜா" என்ற கீர்த்தனம் உதாரணம்.

271. மனோகரி :—இந்தப் பெயருள்ள ஒரு ராகம் ஏற்கனவே 22-வது மேளகர்த்தா ஜன்யங்களில் குறிக்கப் பட்டிருக்கிறது. நிற்க ஸங்கீத ஸம்ப்ரதாயப் ரதர்சினியில் 33-வது மேளகர்த்தாவில் ஜன்யமான அதே பெயருள்ள ஒரு ராகம் குறிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு :—

ஆரோ :—ஸகம பநிஸா

அவரோ :—ஸநிதப மகஸா

ரிஷப வர்ஜ்யமான இந்த ராகம். இந்தக் கடைசீ சக்ரத்தில் வந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் கமலா மனோஹரியைப் போலவே ஸகல அம்சங்களிலும் காணப்படும். இந்த ராகத்திற்கு மனோகரியென்ற பெயரிட்டிருப்பதும் ஸுப்பராம தீக்ஷிதரவர்களால் இதில் செய்யப்பட்டிருக்கும் "கஞ்சதளாயதாக்ஷி" என்ற கீர்த்தனையில் "கம்லா மனோஹரி" என்ற பெயர் வந்திருந்தும் இதை மனோஹரி ராகம் என்று குறிப்பிட்டு கமலா மனோஹரிக்கும் இதற்கும் ஏதோ வித்யாஸம் இருப்பது போல் வ்யவஹரித் திரிப்பது இங்கு கவனிக்க தக்கது. இதில் "சங்கரமபிராமீ மனோஹரம்" என்ற இரண்டாவது கீர்த்தனையும் காணப்படுகிறது. அது முத்துஸ்வாமி தீக்ஷிதருடைய கீர்த்தனம்.

272. கீதமூர்த்தி :—இது 33-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஸம்பூர்ண ஷாடவ ராகம். அவரோகணத்தில் ரிஷபம் வர்ஜ்யம். ஷட்ச்ருதி ரிஷபம் இதற்கு முக்கிய மான சாயா ஸ்வரமாகையால் அதையும் சுத்த தைவதத்தையும் கவனமாய்ப் பிடிக்க வேண்டும்.

ஆரோ :—ஸரிகம பதநிஸ

அவரோ :—ஸநிதப மகஸ

ரிஷப தைவதங்களை தீர்க்கமாய்ப் பிடித்தல் ராக ரஞ்ஜகம். உதாரணமாய் சில ஸஞ்சாரங்கள்.

ஸரீகா மபம கமகஸ—கமப தாபம கமகஸ—பதா பாமக ஸரீகா மபா—பதநிஸா நிதபம கஸரீ

—ஸரீரி காமகஸ—நிஸரீ ரிகாம—பமக ஸரீரீ காம கஸநிஸ

273. ஹிந்தோளஸாவேரி :—இது 33-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஷாடவ ராகம். ஆரோகணத்தில் ரிஷபமும் அவரோகணத்தில் காந்தாரமும் வர்ஜ்யம்.

ஆரோ ;—ஸகமப மதநிஸ
அவரோ :—ஸநிபத மாரீஸ

ஷட்ச்ருதி ரிஷபம் சாயாஸ்வரம். ஸகமரீஸ—நிஸ காரீஸ—கமபா மரீஸ நிஸக மபா—பமகா மரீஸ—கமதபா மரீஸ கமபாம தநீபத மாரீஸா—கமபம தநிஸா ஸநிபத மாரீஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

274. ஹிந்தோளநாயகி :—இதுவும் 33-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ண ரக்தி ராகம்.

ஆரோ :—ஸமக மபஸ
அவரோ :—ஸநிதப மகமரீஸ

ஷட்ச்ருதி ரிஷபம் சாயாஸ்வரம். பஸஸா ரீஸ—மகமரீஸ—மபம கமரீஸ கமபா பதபம கமரீஸ—பமபநீ தபமகம ரீஸ—பஸாநி தபமக மபாம கமரீஸ ரீஸாநி தபமப ஸநிதப மகமரீஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

275. வாகதீச்வரி :—இது 34-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். ஷட்ச்ருதி ரிஷபம் அந்தர காந்தாரம். சதுச்ருதி தைவதம் கைசிகி நிஷாதம் இவைகள் ராகச் சாயா ஸ்வரங்கள். அய்யர் அவர்களின் "பரமாத்முடு" என்ற கீர்த்தனம் தகுந்த உதாரணமாகும்.

276. சாயாநாட :—இது 34-வது மேளகர்த்தாவில் ஜன்யமானது. ஆரோகணத்தில் தைவத நிஷாதங்கள்

வர்ஜ்யம். அவரோகணத்தில் காந்தாரம் வர்ஜ்யம். வக்ர ஸஞ்சாரம் ஷட்ச்ருதி ரிஷபம் சதுச்ருதி தைவதம் கைசிகி நிஷாதம் ராகச் சாயா ஸ்வரங்கள்.

ஆரோ :—ஸரிக மபஸ

அவரோ :—ஸநிதநி பமரிஸ

கிரமமான ஸஞ்சாரங்களினுலேயே ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும். அய்யரவர்களின் "இதிஸமய முரா" என்ற கீர்த்தனம் ப்ரஸித்தம்.

277. பானுமஞ்ஜரி :—இது 34-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஷாடவ வக்ர ராகம். தைவதம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம பநிஸ

அவரோ :—ஸநிபம ரீகரிஸ

ஸரீகா மபமரி கரிஸ—ஸபம பாமரி கரிஸ கமபநி பாம ரிகரிஸ—மாபநீ நிஸாநி பமரீ—கமபம கமரீஸ. போன்ற பிடிகளில் ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும். இதில் லக்ஷண கீதம் உண்டு.

278. சாரதாபரணம் :—இது 34-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஷாடவ வக்ர ராகம். ஆரோகணத்தில் ரிஷபமும் அவரோகணத்தில் காந்தாரமும் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸமகம பமத நிஸ

அவரோ :—ஸநிதம பமமரிஸ

ஷட்ச்ருதி ரிஷபம் சாயா ஸ்வரமாகையால் அது அடிக்கடி வரும்படி ஸஞ்சாரம் செய்ய வேணும். இதில் லக்ஷண கீதம் உண்டு.

279. மேசநீலாம்பரி :—இது 34-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ரக்தி ராகம். ஷாடவ ஔடுவ ராகம்.

ஆரோகணத்தில் ரிஷபமும் அவரோகணத்தில் தைவத காந்தாரங்களும் வர்ஜ்யம். ஷட்சுருதி ரிஷபம் ராகச் சாயா ஸ்வரமாகையால் அது ஸஞ்சாரங்களில் அடிக்கடி வருவதால் ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும்.

ஆரோ :—ஸகம பதநிஸ

அவரோ :—ஸநிப மரிஸ

ஸகம பமரீஸ—கமபத பமரீஸ—மபதநி ஸநிப மரீஸ—ஸகம ரீஸஸ நிபம காம பதநி பாம பமரீஸ— போன்ற பிடிகளால் ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும்.

280. குஸுமப்ரமரி :—இது 34-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணம் வக்ர ஸம்பூர்ணமாயும். அவரோகணத்தில் காந்தாரம் வர்ஜ்யமாயும் பேசும். ஷட்சுருதி ரிஷபம் சாயா ஸ்வரமாகையால் அதை கவனமாய் ஊன்றிப் பிடித்தலவசியம். கிரமமான ஸஞ்சாரங்களிலேயே ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

ஆரோ :—ஸரிகம பமத நிஸ

அவரோ :—ஸநிதப மரீஸ

ஸரீகாம பமரீஸ—ரீகாமா பாம தபம ரீஸ—கமபம தநி தப மரீஸ — மதாநி ஸா நித பம ரீஸ—தநி ஸரீ ஸ்ஸா நிதப நிதய மதாநிதபமரீஸ போன்ற பிடிகளால் ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும்.

281. சூலினி :—இது 35-வது மேளகர்த்தா ராகம். ஸர்வ ஸ்வர ஸம்பூர்ணம். ஷட்ச்ருதி ரிஷபமும் காகலி நிஷாதமும் ராகச் சாயாஸ்வரங்கள். ஆகையால் அவைகளை ஊன்றிப் பிடிக்க வேண்டும். ஷட்ச்ருதி ரிஷபம் ஸரியாகப் பிடிக்கப் படாமல் குறைவதால் ராகம் சங்கராபரணமாக மாறி விடுவதை தத்காலம் அநேகா "ப்ராணநாத" என்ற அய்யரவர்களின் கிருதியை பாடுவதிலிருந்து அறியலாம்

282. மேசநாராயணி :—இது 35-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஷாடவ ராகம். ஆரோகணத்தில் நிஷாதமும் அவரோகணத்தில் காந்தாரமும் வர்ஜ்யம்.

ஷட்ச்ருதி ரிஷபம் சாயாஸ்வரம்.

ஆரோ :—ஸரிக மபதஸ

அவரோ :—ஸதாநி பமரிஸ

வக்ர மான பிடிகள் ராக ரஞ்ஜகம். ரிஷபமும் தைவதமும் தீர்க்கமாய்ப் பிடித்து ராக மூர்ச்சனைகளைக் காண்பிக்க வேண்டும்.

உதாரணம் :—

ஸரீகா மரீஸ—ரீகாமப மப தாப—மபதா தாநித பாமரீ—மபத ஸாஸ தாநிபா மரீஸ—ஸரீரி காம கம—கமபம ரீகாமா—ரீகாம பதபம ரீஸ—ஸதாநி பாதஸ ரீரீ கா மரீஸ போன்ற பிடிகள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

283. ஹம்ஸகண்டாணம் :—இது 35-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஸம்பூர்ண வக்ர ஷாடவ ராகம். அவரோகணத்தில் தைவதம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரீகம பதநிஸ

அவரோ :—ஸநிபம கமரிஸ

ஷட்ச்ருதி ரிஷபம் ராகச் சாயாஸ்வரம்.

பதநி ஸாஸ—ஸரீகா மரீஸ—கமபம கமரீஸ—கமபத பமக மரீஸ—ஸாநிபா மகா மரீஸ—நிஸரிக மகம ரீஸா—காக மாம கமரீஸ—பமக மரீஸ ரீஸாநி பமக மரீஸ—ஸரீகாம பதமா பதநி பாம கமரீஸ—பஸாநி பமக மரீஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்,

284. கானவாரிதி:—இது 35-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ராகம். வக்ர ஸம்பூர்ண ரக்தி ராகம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ:—ஸமரிக மபத நிஸ

அவரோ:—ஸதநிப மரீஸ

ஷட்ச்ருதி ரிஷபம் சாயாஸ்வரம். கிரமமான ஸஞ்சாரங்களினாலேயே ராக ஸ்வரூபம் விளங்கும். "தயஜூசுட" என்ற அய்யரவர்களின் கீர்த்தனையால் இதன் ஸ்வரூபத்தை நன்கறியலாம்.

285. சலநாட:—இது 36-வது மேளகர்த்தா ராகம். ஆருவது சக்ரத்தில் ஆருவது ராகம் இதில் வரும் ஸ்வரங்கள் எல்லாம் (மத்யமம் நீங்கலாக) தீவ்ரஸ்வரங்களாகையாலும் ஸர்வஸ்வர ஸம்பூர்ணமாகையாலும் இந்த ராகத்தை மிகவும் கவனமாய்ப் பாட வேண்டும். இதில் லக்ஷண கீதம் உண்டு.

286. நாட:—இது ஓர் புராதன கனராகம்.—ஸம்ப்ரதாயமானபஞ்சராக ரத்தினங்களில் இதுவும் ஒன்று. மிகவும் கம்பீரமான ராகம். மங்களகரமான ராகமாகையால் தேவாலயங்களில் ஸ்வாமி புறப்படும் ஸமயங்களில் இந்த ராகத்தை வாசிப்பது இன்னம ஸம்ப்ரதாயத்தில் இருந்து வருகிறது. ஷட்ச்ருதி ரிஷப தைவதங்கள் இதற்கு ஜீவஸ்வரங்களாக விளங்கு வதால அதை கவனித்து பிடித்து மெய்பிக்க வேண்டியது முக்கியம். பாஷாங்க ராகம் என்றும் இதில் இரண்டு நிஷாதங்கள் வருவதாயும் சிலர் அபிப்ராயப் படுகிறார்கள். உற்று நோக்குங்கால் இதில் இரண்டு நிஷாதம் பேச இடம் இல்லை யென்றும் அப்படிப் பேசுவதாகப் நினைக்கப்படும் கைசிகி நிஷாதம் வாஸ்தவத்தில் ஷட்ச்ருதி தைவத மாகையாலும் அந்த தைவதம்

இதில் ராகச் சாயாஸ்வரமாக இருப்பதால் அதை கைசிகி நிஷாதமாக மாற்றுவது சாஸ்த்ர விரோதம் என்று சிலர் அபிப்ராயப் படுவதாய்த் தெரிகிறது.

ஆரோ :—ஸரிகம பதநிஸ

அவரோ :—ஸநிப மரீஸ

அய்யரவர்களின் பஞ்சரத்ன கீர்த்தனைகளில் முதலாவதாக விளங்கும் "ஜகதானந்தகாரக" என்ற கீர்த்தனையில் இந்த ராக ஸ்வரூபம் நன்கு விளங்குகிறது. இதில் உள்ள விசேஷம் என்னவென்றால் பதநிஸா என்ற ப்ரயோகம் காணப் படவில்லை. ஷட்ச்ருதி தைவத காகலி நிஷாதங்களை சேர்த்து அடிக்கடி ஸஞ்சரிக்க எல்லோராலும் முடியாது என்ற காரணத்தினாலோ அல்லது ரக்தி குறைவாக இருக்கலாம் என்ற எண்ணத்தினாலோ அந்த "பதநிஸா" ப்ரயோகம் காணப்படவில்லை. அதே மாதிரியே "ஸரிகம" என்ற ப்ரயோகமும் காணப் படவில்லை. அவைகளுக்கு பதிலாய் "பஸாநிப" "பநிப" "ஸபா மரிஸ" "ஸமா மரிஸ" "ஸகா ம" என்ற ப்ரயோகங்களே காணப்படுகின்றன. ஆனால் இந்த ராகத்தின் லக்ஷண கீதத்தில் ஸரீகா மமாரீஸ—ஸநிதா நீஸாஸ—பாதாநீ ஸரீமரிஸ—ஸரிகம பதநிஸ நிபமரீஸ என்ற பிரயோகங்கள் காணப்படுகின்றன. ஆகையால் "ஸகம பநிஸா—ஸநிபம கமரீஸ" என்ற ஆரோகண அவரோகண கிரமத்தை ஸ்தாபிக்கும் கட்சியை ஒப்புக் கொள்வதற்கில்லை.

287. சிதானந்தி :—இது 36-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ண ராகம். வக்ரப் பிடிகளினாலேயே ராகம் சுலபமாய்ப் பாடக் கூடியதாய் அமைந்திருக்கிறது.

ஆரோ :—ஸரிகம பதநிஸ

அவரோ :—ஸநிதநி பமக மரிஸ

ஸரீகா மரிஸ—கமபம கமரிஸ—ரீகாம பாமக மரிஸ—பதாநீ பமக மரிஸ—பதநிஸா நிதநி பமக மரிஸ போன்ற பிடிகளினுல் ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும்.

இத்துடன் சுத்த மத்யம ராகங்கள் முடியும். இனி ப்ரதிமத்யம சக்ரங்களின் ராகங்களைக் குறிப் பிடுவோம்.

ப்ரதி மத்யம சக்ரங்களின் ராகங்கள்.

288. ஸாலகம் :—இது 37-வது மேளகர்த்தா ராகம். கனகாங்கிக்கு நேர் ப்ரதிமத்யம ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். ப்ரதிமத்யமத்தைத் தவிர இதர ஸ்வரங்கள் எல்லாம் சுத்த ஸ்வரங்கள். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

289. ஸாளவி :—இது 37-வது மேளகர்த்தாவில் ஜன்ய மான வக்ர ஸம்பூர்ண ராகம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸகரிக மபத நீதஸா

அவரோ :—ஸநிதப மகரிஸா

சுத்த ஸ்வரங்களை கவனமாய் பிடித்துப் பாட வேண்டும்—ஸகரிக மாம பாப—மாமா காரிஸ—ஸநிஸ கரிக மாகரிஸ—மாப தநீத பமா கரிஸ—மாம பதப—மமபத நிதபத மப—மாம காரி ஸகரிகா கமா—தநிதஸா நிதப மாகரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

290. போகஸாவேரி :—இதுவும் 37-வது மேளகர்த்தா வில் ஜன்யமானது நிஷாதாந்த ராகம். ஆரோகணத்தில்

காந்தாரம் வர்ஜ்யம். மத்யஸ்தாயிஸஞ்சாரியான ராக மாகையால் மத்யமச்ருதியில் பாடுவது மிகவும் ரஞ்ஜகம்.

ஆரோ :—ஸரிமா பதநீ

அவரோ :—தபமா கரிஸ

கிரமமான ஸஞ்சாரங்களினுலேயே ராக ஸ்வரூபம் விளங்கக் கூடியது. இதில் லக்ஷண கீதம் உண்டு.

291. ஜலார்ணவம் :—இது 38-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். மத்யம நிஷாதங்களைத் தவிர இதர ஸ்வரங்கள் சுத்தஸ்வரங்கள். பாடுவதற்கும் சுலப மானது. லக்ஷண கீதம் உண்டு.

292. ஜகன்மோஹனம் :—இது 38-வது மேளகர்த்தாவில் ஜன்யமானது. வக்ர ஷாடவ ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் காந்தாரம் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிமா பதஸ நிஸ

அவரோ :—ஸநிதப மாகரிஸ

ஸரிமா மபாப—தபமா கரீஸ—ஸநிஸரி காரிஸ—நீத பமா கரிஸ—தஸாநி ஸநிதப மாமப தபமா கரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

293. நாகதீபரம் :—இது 38-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஷாடவ ராகம். பஞ்சமம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம தநிஸ

அவரோ :—ஸ்நித நிமக ரிகஸ

ஸரிக மாம காரி கஸா—மதாத தநிமா கரிகஸா—மாதநி ஸநித நிமா—கமரி கஸா போன்ற ஸஞ்சாரங்கள் மிகவும் ரஞ்ஜகம்.

294. ஜாலவராளி-அல்லது வராளி:—இது 39-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். இதில் வரும் மத்யமம் ப்ரதிமத்யமத்தை விடக் கொஞ்சம் கூடுதலாய் இருப்பது கவனிக்கப்பட வேண்டும். ஆகையால் இந்த ப்ரதிமத்யமத்தை வராளி மத்யமம் என்று அழைத்து வருகிறார்கள். இதுவே ஜீவஸ்வரம். ஸம்ப்ரதாயமான பஞ்ச ராக ரத்னங்களில் இதுவும் ஒன்று. இதில் அநேக கீர்த்தனங்கள் பதங்கள் உள. உதாரணமாய் அய்யாவர்களின் "மரகதமணிவர்ண" என்ற கீர்த்தனம்.

Note:—இது பாஷாங்கராகமாகையால் தநி தப என்ற அவரோகண ப்ரயோகங்களில் நிஷாதம் குறைந்து பேசுவதை லக்ஷ்யத்தினால் அறிய வேண்டும். மாமா பத மாமா—பதநித பதமாமா—தப மாமா—தபமக ரிகமாமா—கரிஸாரி கமாமா—மாம பதபமம—மமபத நிதபத—மமபத நிஸரிக—மாமா ககரிரி ஸஸநி நிதத—மதாதா மநீநீ தநிஸ நீதப மகாரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

295. விஜயஸ்ரீ:—இது 39-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆனால் சிலர் இதை 41-வது மேளகர்த்தாவில ஜன்யம் என்று அபிப்ராயப்பட்ட போதிலும் அனுபவத்தில் இதில் வரும் ஸ்வரங்களைக் கொண்டு தைவத வர்ஜ்யமான இந்த ஷாடவ ராகத்தை 39-வது மேளகர்த்தா ராகமாகிய ஜாலவராளியில் ஜன்யம் என்பது மிகவும் பொருந்தும். இதற்கு சுத்த ரிஷப சுத்த காந்தார * வராளி மத்யம காகலி நிஷாதங்கள் சாயாஸ்வரங்களாய் விளங்குவதாலும் ப்ரஸ்தாரக்ரமத்தில் 39-வது மேளத்தில் ஜன்யமாகி விடுகிறது.

ஆரோ:—ஸகரி மாப நீஸா

அவரோ:—ஸநிபா மகாரிஸ

---

* இந்த கமக காந்தாரம வராளிக்கே ஏற்பட்டது என்று வாத்தியம் வாசிப்போர்களுக்கு விளங்கும். ஆகவே "வராளி காந்தாரம்" என்று கூறுவதும் உசிதம்.

ஸரிஸ காரிஸ—பாம காரிஸ—ஸகரி மாம பாபா—பநிபம—பநிஸா நிபம—ரிஸா நிபம—பநீநீஸா—ஸநி ஸ்ரிஸநி—காரிஸநி—பாம காரிஸநி பாம காரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம். அய்யரவர்களின் "வரநாரத" என்ற கீர்த்தனை.

296. பூபாலபஞ்சமம்:—இது 39-வது மேளகர்த்தாவில் ஜன்யம் வக்ரஷாடவம். நிஷாதம் வர்ஜ்யம். அவரோஹணத்தில் காந்தாரமும் வர்ஜ்யம்.

ஆரோ:—ஸகரிக பமாதஸ
அவரோ:—ஸபதமா ஸரிஸ

ஸரிஸகரிஸ—ஸகரிகாக மாமாஸரிஸ—கபாமஸரிஸ—கபதமாஸரிஸ—கரிகமாம ஸரிஸ—மதாத தமாஸரிஸ—மாதஸாஸ பதமா—பமதாதபதம—ஸபாதமா ஸரிஸ போன்ற பிடிகள் ராகஸ்வரூபத்தை விளக்கும். இதில் லக்ஷணகீதம் உண்டு.

297. நவனீதம்:—இது 40-வது மேளகர்த்தாராகம் ஸர்வஸ்வரஸம்பூர்ணம். சதுச்ருதிதைவத கைசிகிநிஷாதங்களும் வராளி மத்யமும் ராகச்சாயாஸ்வரங்கள். சுத்த காந்தாரத்தையும் கவனித்துப் பிடிக்கவேண்டும்.

தாதா பதநிதா பாமா காரீஸ—ஸரிகாக மாமபதப—பதநிதப மபத—காமாபாத ஸரிகா மாபதநீதா—பதநிஸநீதபம—காமா பதநிஸரிஸ—ஸரிகரிஸ நீதா—பதநிஸரிகரிஸ நிரிஸநிதா—பதநிஸநிதப—மாபதப—பநித பஸநித—பாமகாரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்; அய்யரவர்களின் "லேமி தெல்ப" என்ற கீர்த்னம் தகுந்த உதாரணம்.

298. நபோமணி:—40-வது மேளகர்த்தாவில் ஜன்யம். சுத்த ரிஷப காந்தாரங்களை கவனமாய் பிடிக்க வேண்டும். ஆரோகணத்தில் தைவத நிஷாதங்கள் வர்ஜ்யம்.

ஆரோ:—ஸரிகரி மபஸ

அவரோ:—ஸநிதப மகரிஸ

மப்ஸா—ஸநித பமா—நிதபம பஸநித பமா பமம ககரி ஸரிக ரிமா—கரிமா மகரி ஸநித பஸா போன்ற பிடிகள் ராக ரஞ்ஜகம்.

உதாரணம்:—அய்யரவர்களின் "நாயெடவஞ்சன" என்ற கீர்த்தனம்.

299. நவரஸகுந்தலி:—இதுவும் 40-வது மேளகர்த்தாவில் ஜன்யம்: சுத்த ரிஷப காந்தாரங்களும் ப்ரதி மத்யமமும் ராகச் சாயாஸ்வரங்கள். ஆரோஹணத்தில் ரிஷப காந்தாரங்கள் வர்ஜ்யம்.

ஆரோ:—ஸமப தநிஸ

அவரோ:—ஸநிதப தமக ரிஸ

ஸமாம காரிஸ்—மாம பாப தமா கரிஸ—ம்பத நிஸ நீதபத மாகரிஸ—ஸரிஸ நிதப தநிஸா—பதநிஸா—மாப தநிஸா தபத மாப—தநிதப தமஸ—தமா கரிஸ போன்ற பிடிகள் ராக ரஞ்ஜகம்.

300. பாவநி:—இது 41-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். ப்ரதிமத்யம சதுச்ருதி தைவதங்களும் காகலி நிஷாதமும் ராகச் சாயாஸ்வரங்கள். ஏற்கனவே சொல்லியபடி போல சுத்த ரிஷப காந்தாரங்களை கவனமாய்ப் பிடிக்க வேண்டும். லக்ஷண கீதம் உண்டு.

ஸரிக மாம காரி—மகரி ஸரிஸ ஸதா நிஸ—தபத மபத பதநி பத நிஸா—கரிகரி ஸநிதநி ஸநீதப—பாம

காரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம். தியாகய்யர் கீர்த்தனையும் இந்த ராகத்தில் உண்டு.

301. சந்த்ரஜ்யோதி :—இது 41-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவ ராகம். நிஷாதம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம பதஸா

அவரோ :—ஸதபம கரிஸ

ப்ரஸ்தார க்ரமத்தில் இதை 40-வது மேளமாகிய நவநீதத்தில் ஜன்யம் என்று அபிப்ராயப்படுவோரு முண்டு. ஆனால் உற்று நோக்குங்கால் "ஸதாப" என்ற பிடியை ஒரிகையாகப் பிடிக்கையில் காகலி நிஷாதங்கள் அந்தர் கதமாய்ப் பேசு மாகையால் 41-வது மேளந்தான் இதற்குத் தாய் ராகம். உதாரணமாக :—அய்யரவர்களின் 'பாகாயெனய்யா' என்ற கீர்த்தனை.

302. ப்ரபாவளி :—இது 41-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவ வக்ர ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் காந்தாரம் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிமா பதநிஸா

அவரோ :—ஸநிதம பமரி கரிஸ

ஸரிமா மகரிஸ—ரிமாம ரீகரிஸ—மாப தமா பமரி கரிஸ—பதநித மாப மரிகரிஸ—தநி ஸாஸ ஸநி தமா—நிதமரி கரிஸ போன்ற பிடிகள் ராக ஸ்வரூபத்தை விளக்கும்.

303. ரகுப்ரியா :—இது 42-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். சுத்த ரிஷப சுத்த காந்தாரங்கள் தவிர இதர ஸ்வரங்கள் எல்லாம் தீவ்ரம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஸரிக மாம காரி—ஸபா மப—மபதா தாபா மபதா நீஸா—ஸரிஸநி தாப—ஸரிகா ரிஸநீ தாப—மாப தநீ தாப மபம காரிஸ போன்ற ஸஞ்சாரம் ராகரஞ்ஜகம்.

304. ரகுலீலா :—இது 42-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம். வக்ர மான பிடிகளினலேயே ராக ரஞ்ஜகம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸமரி பமகம பமரி மபநிஸா

அவரோ :—ஸநிதநி பமக மரிம கரிஸ

ப்ரதி மத்யமம் ராகச் சாயாஸ்வரமாகையால் வக்ர மான பிடிகளில் அது மாறி மாறி வருவதை இங்கு கவனிக்க வேண்டும். ஸமரி பமகம— ரீரிம கரிஸ— நிதநி பமகம—பமரிம பநிஸ—மரிம கரிஸா—ஸமம் ரிபமப காம பமரிரி—மமா மகரிஸ—நிதநி பநிஸநி ஸநிதநி பநிஸ போன்ற பிடிகள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

305. கந்தர்வம் :—இது 42-வது மேளகர்த்தாவில் ஜன்யம். காந்தாராந்த ராகம். மத்யஸ்தாயி ஸஞ்சார மாகையால் மத்யதாரஸ்தாயிகளில் ஸஞ்சாரம் செய்வது ரஞ்ஜகம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—மபத நிஸரிக

அவரோ :—ரிஸநி பமப

"தநிஸரிக" என்ற பிடியில் வரும் ஸ்வரங்கள் அடுத் தடுத்த ஸ்வரங்களாகையால் அவைகளே கவனமாய்ப் பிடித்து மெய்ப்பித்தால் தான் இந்த ராகம் ரஞ்ஜக மாகும். பாப—மபதா நிபாமப—பதநிஸா நிபமப தநி ஸரிஸா நிபமப—மாப தாநீ ஸாரீக ரீஸா—நிபாமப ஸரிஸநி தாநிஸா—ஸரிகரி ஸநிபம பதாநிஸ தநிஸநி பதநிஸ—பமப தநிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

306. **கோபதி** :—இதுவும் 42-வது மேளகர்த்தாவில் ஜன்யம். நிஷாதாந்த ராகம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிக மபதநீ
அவரோ :—பமரி கரிஸ

ஸரிகரி கரிஸ—ரிகமரி கரிஸ—ஸஸரி ககமப—மரிக ரீஸா—ஸஸரி ரீகரி—மபம ரிகரிஸ—மாப தபமப—தநீபம ரிகரிஸ போன்ற பிடிகளால் ராக ஸ்வரூபம் விளங்கும்.

307. **கவாம்போதி** :—இது 43-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம்—ஸாதாரண காந்தார ப்ரதி மத்யமங்கள் தவிர இதர ஸ்வரங்கள் சுத்த ஸ்வரங்கள் இதில், ப்ரதி மத்யம பஞ்சம தைவத நிஷாதங்கள் அடுத்தடுத்து வருவதால் ஜாக்ரதையாய்ப் பிடிக்க வேண்டும். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஸஸரி மாகரிஸ—ரிக மகாரிஸ காம பதபம மபதநி தபதமப—நிதநி பதமப—மாப ததநீ—தநிஸாஸ நீதப—பமபத தபமகா ரீஸ போன்ற பிடிகள் ராக ஸ்வரூபத்தை விளக்கும்.

308. **கீர்வாணி** :—43-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம். வக்ர மான பிடிகளால் ராக ரஞ்ஜகம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிகரி மகம தநிப நிதஸா
அவரோ :—ஸநிதப மகரிஸ

ஸரிரி கரிகரி—மகம கரிகரி—கரிமா மகாரி ஸநித நிதஸா—மகரி ஸாஸ—ஸரிகரி மாம மகமத நிதப—கமதநி பநித—பநித ஸாநித—ஸரிஸ நிதபம—தஸாநி தபமத—தநித பநிதப—மாம கரிமா—கரிஸரி கரிஸ

போன்ற பிடிகள் ராக ரஞ்ஜகம். "நமோநமஸ்தே கீர்வாணி" என்ற தீக்ஷிதர் கீர்த்தனம் உதாரணம்.

309. கலவஸந்தம் :—43-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவ ஔடுவம். ஆரோகணத்தில் ரிஷபமும் அவரோகணத்தில் தைவத ரிஷபங்களும் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ,—ஸகம பதநிஸ

அவரோ :—ஸநிப மகஸ

ஸகம கஸநிப—தநிஸ ஸககம—கமப பமகஸ— கமபத பமக—ஸகம பதநிப—தநிஸ ஸநிபம—ஸநிப மகஸா போன்ற பிடிகள் ராக ரஞ்ஜகம்.

310. பவப்ரியா :—இது 44-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். இது ஹநுமத் தோடிக்கு நேர் ப்ரதி மத்யம ராகம். பாடுவதற்கு மிகவும் ரக்தியான ராகம். இதில் லக்ஷண கீதம் உண்டு. இந்த ராகத்தின் ஸ்வரூபம்—லக்ஷணம் பூராவும் அய்யரவர்களின் "ஸ்ரீகாந்த நீயெட" என்ற கீர்த்தனையில் விளங்குவதை நன்கறியலாம்.

311. பவாநி :—இது 44-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவ ராகம். பஞ்சமம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம தநிஸா

அவரோ :—ஸநிதம கரிஸா

மேல் கண்ட ஸஞ்சார க்ரமத்தில் இதற்கு லக்ஷண கீதம் இருந்தாலும் "ஸரிகம தநிஸா—ஸநிதப தம கரிஸ" என்ற கிரமம் இருப்பதாய் ஓர் அபிப்ராயம் இருந்து வருகிறது. ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் ஸரிகம பதப நிஸா—ஸநிதப மகாரிஸ என்ற பூர்ண ஸஞ்சாரம் குறிக்கப் பட்டிருக்கிறது.

"ஜயதிசிவா பவானி" என்ற கீர்த்தனமும் காணப் படுகிறது. உற்று நோக்குங்கால் ஹநுமத் தோடி யில் ஜன்யமான தோடி என்ற ராகத்தில் பஞ்சமம் வர்ஜ்யம். என்ற சாஸ்த் ரோக்த மான அபிப்ராய மிருந்தும் பஞ்சமம் கலந்து ஸம்பூர்ணமாகப் பாடப் பட்டு வருவது போல் பவப்ரியாவில் ஜன்ய மான பவானி யிலும் பஞ்சமம் கலந்து பாட்டப்பட்டு வருகிற தோ என்ற சங்கை உண்டாகிறது. இருந்தாலும் பஞ்சமம் வர்ஜ்ய மான ஸஞ்சாரங்கள் இன்னம் அதிக ரஞ்ஜக மாயிருப்பதை அனுபவத்தினாலும் லக்ஷ்யத்தினாலு மறியலாம்.

312. ஸரஸீருஹம்:—இது 44-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஷாடவம். பஞ்சமம் வர்ஜ்யம். "தநிதஸ" என்ற வக்ர ஸஞ்சாரம் லக்ஷணப் பிடிப் பாகையால் அது அடிக்கடி வர வேண்டும்.

ஆரோ:—ஸரிகம தநிதஸ

அவரோ:—ஸநித மகரிஸ

ஸரிக மாம கரிஸ—கமதநீ தமகரிஸ—காக மாமத நிதஸா—ஸநிதம தநிதஸ தஸரி காரிஸ—ஸாநி தமத நிதஸ—மதநீ தமகரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

313. மேசபங்காளா:—இது 44-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஷாடவ ராகம். ஆரோகணத்தில் தைவதமும் அவரோகணத்தில் நிஷாதமும் வர்ஜ்யம். கிரமமான ஸஞ் சாரங்கள் ரக்தியைக் கொடுக்கும்.

ஆரோ:—ஸரிகமா பநிஸா

அவரோ:—ஸதாப மகா ரிஸ

ஸரிகா ரிஸநிஸ—காக மாம காரிஸ தாநிஸ் ஸரிகா கமாம தபாம காரிஸ—மாப தபமா காரிஸ—மாப நீதபம காரிஸ—மாபதா தபநீ நிதாத—பநிஸா நிதாப—பநிஸா ரிகாரி ஸதாப—மபநீத பமா மகா ரிஸ போன்ற ஸஞ்சாரங்கள் மிகவும் ரஞ்ஜகம்.

314. சுபபந்துவராளி :—இது 45-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். சாதாரண காந்தார ப்ரதி மத்யம காகலி நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு.

315. கமகஸாமந்தம் :—இது 45-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஔடவ ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் ரிஷப தைவதங்கள் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸகம பநிஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

ஸகாரி ஸநிஸ—ஸநிஸ காக மாம காரிஸ—காக மாம பாமா காரிஸ—மாப நிதப மாகா ரிஸ—ஸகாக மாம பாப பநிஸ நிதப—ஸநிதநி தபமா பாநீஸா ஸநித பமா காரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

316. ஷட்விதமார்க்கிணி :—இது 46-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். ஸாதாரண காந்தார ப்ரதி மத்யமங்களும் சதுச்ருதி தைவத கைசிக நிஷாதங்களும் ராகச் சாயாஸ்வரங்கள். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

317. தீவ்ரவாஹினி :—இது 46-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிகம பதப நிஸ

அவரோ :—ஸநிதப மகரி கமரிஸ

பதப மகரி கமா—பநிஸ நித பமப—நிஸரிஸ நித பம—ஸநிதப நிதபம—பமகரி கமரிஸ போன்ற வக்ர மான பிடிகளும் ஸரிக மாம பதபா கமதா தபநிஸ— ஸநிஸ ரீரீக மரீ—ஸரிஸ நிஸநி—தநித பதப—மபம கரிக ஸரிஸ போன்ற தாட்டு வரிசையான பிடிகளும் ரஞ்ஜகம்.

உதாரணம்:—அய்யரவர்களின் "ஸரிஜேஸி வேடு" என்ற கீர்த்தனை.

318. ஸ்ரீகண்டி:—இது 46-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஓர் ஷாடவம். ரிஷபம் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ:—ஸகம பதநிஸ
அவரோ:—ஸநிதப மகஸ

ஸகாக மாம கஸா—ஸமா மகஸ—நீதபா மபதநீ மாப தநிஸா நிதப—மதபம கஸா—பமக மபத நீதப—மபம கஸகா கமா—நீதபா மகஸ போன்ற பிடிகள் ராக ரஞ்ஜகம்.

319. ஸ்தவராஜம்:—இது 46-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஓர் ஔடுவம். ஸம்பூர்ணராகம். ஆரோகணத்தில் காந்தார நிஷாதங்களும் அவரோகணத்தில் பஞ்சம ரிஷபங்களும் வர்ஜ்யம்.

ஆரோ:—ஸரிமா பதஸா
அவரோ:—ஸாநித மகஸ

தமாகஸ—ஸாரி ஸநிஸா—தாதா ஸா—ரிமாம பாப—தமாகா ஸரிஸ—பத ஸாநி தமாப—மாப தமா—நிதமா ஸாநீ தாம காஸா போன்ற ஸஞ்சாரங்கள் ரஞ்ஜகம். தீக்ஷிதரவர்களால் "ஸ்தவராஜாதினுத" என்ற கீர்த்தனம் உண்டு.

320. ஸுவர்ணாங்கி :—இது 47-வது மேளகர்த்தா ராகம். சுத்த ரிஷபம் ஸாதாரண காந்தாரம்—ப்ரதி மத்யமம். சதுச்ருதி தைவதம் காகலி நிஷாதம் ராகச் சாயாஸ்வரங்கள். ஸர்வஸம்பூர்ணம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

321. ஸௌவீரம் :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 47-வது மேளகர்த்தாவில் ஜன்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிகரி மபத நிஸா

அவரோ :—ஸநிபத பமக ரிஸா

ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் "ஸரிக மபத நிஸ—ஸநிதம கரிஸ என்ற ஸஞ்சாரமும் தீக்ஷிதரவர்களால் "ஸரஸ ஸௌவீர" என்ற கீர்த்தனமும் காணப் படுகின்றன.

322. ரதிகா :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 47-வது மேளகர்த்தாவில் ஜன்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸ்கரி கமப தநிஸா

அவரோ :—ஸநிதப மகரிஸ

323. ஆபீரு :—இது ஓர் பஞ்சமாந்த ராகம்—மத்யஸ்தாயி ஸஞ்சாரம்—47-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ரிஷபம் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—பதநிஸ மகம

அவரோ :—பமகஸ நிதநிஸ

இந்த ராகத்தை மத்யமச் ருதியில் பாடினால் மிகவும் ரஞ்ஜக மாயிருக்கும்.

324. திவ்யமணி :—இது 48-வது மேளகர்த்தா ராகம். 8-வது சக்ரத்தில் கடைசீ ராகம். சுத்தரிஷப ஸாதாரண காந்தார ப்ரதி மத்யமங்களும் ஷட்ச்ருதி தைவத காகலி நிஷாதங்களும் ராகச் சாயாஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு.

325. துந்துபிப்ரியா :—இது ஓர் ஸம்பூர்ண ஷாடவ ராகம். 48-வது மேளமாகிய திவ்ய மணியில் ஜன்யம். அவரோகணத்தில் தைவதம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம பதநிஸ
அவரோ :—ஸநிபம கரிஸ

இதில் வரும் ஷட்ச்ருதி தைவதத்தை நன்கு கவனித்துப் பிடிப்பதால் ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும். ஆகையால் ஸ்வரப்ரஸ்தாரங்களில் தைவதத்தை தீர்க்கமாய் ஊன்றிப் பிடிப்பது முறை. பதாநிஸ—ஸாநி பாம காரிஸ—ஸரி காரிஸ—ஸரிக மாமகாரிஸ—பமப தாநிஸ—ஸாநீ பாம பதா தாபம காரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "லீலகானுஜுசே" என்ற கீர்த்தனம்.

326. ஜீவந்தினி :—இது ஓர் ஔடுவ ராகம். 48-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் ரிஷப காந்தாரங்களும் அவரோகணத்தில் தைவத ரிஷபங்களும் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸமா பதா நிஸ
அவரோ :—ஸநிப மகஸ

ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் "ஜீவந்திக" என்ற பெயருடனும் இதே மேளகர்த்தாவில் ஜன்யமானதும் "ஸரிகம பதநிஸ—ஸநிப மகரிஸ" என்ற ஸஞ்சாரத்துடனும் கூடியதான ராகம் இருக்கிறது. அதில் தீக்ஷிதரவர்களால் "ப்ராஹதீசகடாக்ஷண" என்ற கீர்த்தனம் காணப் படுகிறது.

327. சுத்தகாந்தாரி :—இது 48-வது மேளகர்த்தாவில் ஜன்யம்.

ஆரோ :—ஸரிகம நீஸா

அவரோ :—ஸநிதநி ஸநிப மரிஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு.

328. ஆம்ரபஞ்சமம் :—இது 48-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவம். பஞ்சமம் வாஜ்யம்.

ஆரோ :—ஸரிகம தநிஸ

அவரோ :—ஸநிதம கஸரிஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு.

329. ஆதிபஞ்சமம் :—இது ஓர் வக்ர ஸம்பூர்ணம். 48-வது மேளகர்த்தாவில் ஜன்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிப தநிஸ

அவரோ :—ஸநிதநி பமக ரிஸ

330. தவளாம்பரி :—இது 49-வது மேளகர்த்தா அந்தர காந்தார ப்ரதி மத்யமங்கள் தவிர இதர ஸ்வரங்கள் சுத்தம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். ப்ரதி மத்யம பஞ்சம சுத்த தைவத சுத்த நிஷாதங்களடங்கிய மபதநி என்ற பிடியில் ஸ்வரங்கள் அடுத்தடுத்து வருவதால் ஜாக்ரதையாகப் பிடிக்க வேண்டும். இதில் லக்ஷண கீதம் உண்டு.

331. தவளாங்கி :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 49-வது மேளகர்த்தாவில் ஜன்யம். இதற்கு லக்ஷண கீதம உண்டு.

ஆரோ :—ஸமகம பதநி தஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் "ஸரிக மப தஸ—ஸநிதப மகரிஸ" என்ற ஸஞ்சாரம் காணப் படுகிறது. தீக்ஷிதரவர்களால் "ச்ருங்காராதி" என்ற கீர்த்தனமும் உண்டு.

332. தர்மிணி :—இது ஓர் ஷாடவம். பஞ்சமம் வர்ஜ்யம். 49-வது மேளகர்த்தாவில் ஜன்யம்.

ஆரோ :—ஸரிகம தநிஸ

அவரோ :—ஸநித மகரிஸ

கிரமமான ஸஞ்சாரங்களினாலேயே ராக ஸ்வரூபம் விளங்கும். லக்ஷண கீதமுண்டு.

333. தேவகிரி :—இதுவும் 49-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோஹணத்தில் காந்தாரம் வர்ஜ்யம். ஷாடவ வக்ர ஸம்பூர்ணம்.

ஆரோ :—ஸரிமா பதநிஸ

அவரோ :—ஸநிதப மகரிகஸ

லக்ஷண கீதம் உண்டு.

334. பின்னபௌராளி :—இதுவும் 49-வது மேளத்தில் ஜன்யம். வக்ர ஷாடவம். ஆரோஹணத்தில் ரிஷப காந்தாரங்களும் அவரோஹணத்தில் ரிஷபமும் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸமப தநிதஸ

அவரோ :—ஸநிதப மகஸ

லக்ஷண கீதம் உண்டு.

335. நாமநாராயணி :—இது 50-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். அந்தர காந்தாரமும் ப்ரதி மத்யமமும் கைசிகி நிஷாதமும் தவிர இதர ஸ்வரங்கள் சுத்த ஸ்வரமும்ாய் உடையது. லக்ஷண கீதம் உண்டு.

336. மந்தாரி :—இது 50-வது மேளகர்த்தாவில் உண்டானது. ஷாடவம்—தைவதம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம பநிஸா

அவரோ :—ஸநிபம கரிஸ

சிலர் கைசிகி நிஷாதத்தை கவனிக்காமல் காகலி யாகப் பிடித்துப் பாடுகிறார்கள். அதனால் "காம வர்த்தினியில்" ஜன்யம் போல் தோன்றும்.

கமப நிஸா—நிபமகா—கமபம கரிஸா—பநிஸா நிப மகா—கமபநீ பாமகா என்ற ஸாதாரண பிடிகளே ரக்தியைக் கொடுக்கும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "பர லோக பய" என்ற கீர்த்தனம்.

337. **நர்மதா :**—இது ஓர் ஷாடவ வக்ர ஸம்பூர்ண ராகம். 50-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் பஞ்சமம் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிகம தநிஸ

அவரோ :—ஸநித மபம கரிஸ

கிரமமான ஸஞ்சாரங்களால் ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும்.

338. **ப்ரதாபம் :**—இது ஓர் ஷாடவ வக்ர ஸம்பூர்ண ராகம். 50-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோஹணத்தில் ரிஷபம் வர்ஜ்யம்—லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸகம பதநிஸ

அவரோ :—ஸநிதப மகஸரிஸ

(குறிப்பு :—இதே பெயருள்ள ராகம் 52-வது மேளகர்த்தாவில் உண்டு.)

339. **மதுகரி :**—இது 50-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஸர்வ ஸம்பூர்ணம்.

ஆரோ :—ஸரிகம பதநிஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

340. காமவர்த்தனி :—இது 51-வது மேளகர்த்தா ராகம். ஸர்வ்ஸ்வர ஸம்பூர்ண கனராகம். 15-வது மேளகர்த்தா வாகிய மாயா மாளவ கௌளைக்கு நேர் ப்ரதி மத்ய ராகம். லக்ஷண கீதம் உண்டு.

341. பந்துவராளி :—இதுவும் காமவர்த்தினியும் ஓரே ராகம். என்று கூடச் சொல்லலாம். ஏனென்றால் இதிலும் ஸர்வஸ்வர ஸம்பூர்ண ஸஞ்சாரம் இருப்பதால் தான். சிலர் சுபபந்து வ்ராளியில் பந்து வராளி ஜன்யம் என்றும் "ஸரிக மபதநிஸ—ஸதா பகரிஸ" என்ற ஸஞ்சாரம் உள்ளதென்றும் அபிப்ராயப் படுகிறார்கள். மற்றும் சிலர் "சுபபந்துவராளி" என்ற கர்த்தா ராகம் தான் "பந்து வராளி" என்றழைக்க படுவதாய் சொல்லுகிறார்கள். எப்படி ஹநுமத்தோடி தோடி யென்றும்—தீரசங்கரா பரணம் சங்கரா பரண மென்றும்—ஜால வராளி வராளி என்றும் அழைக்கப் படு கிறதோ அது போல் சுபபந்து வராளியும் பந்து வராளியாக ஆகியிருக்கலாம். ஆனால் இப்போது பாடப் பட்டு வருகிற முறையைப் பார்த்தால் இது 51-வது மேளமாகிய "காம வர்த்தனி" தான் என்பதில் ஸந்தேக மில்லை. ஆனால் சுபபந்து வராளிக்கும் இதற்கும் ஸம்பந்த மில்லாமலிருக்கிற தென்பது கவனிக்கத் தக்கது. ஒருக்கால் பந்து வராளிக்கு வேண்டிய ஸாதாரண காந்தாரம் சில வேளையில் ஓரிகையால் சுத்த காந்தாரமாகத் தோன்றி ஜால வராளியாக மாறி விடும் என்று அந்தர காந்தார மாய் பாடி விட்டார்களோ என்ற ஸந்தேகம் இங்கு க்வனிக்கத்தக்கது. இதில் அநேக வர்ணங்கள் கீர்த்தனங்கள் பதங்கள் உள. அய்யரவர்களால் அநேக கீர்த்தனங்கள் இந்த ராகத்தில் செய்யப் பட்டிருக் கின்றன. ஆனால் அவைகள் எல்லாம் காமவர்த்தனி யாகத் தான் பாடப் படுகிறது.

342. **தீபகம்:**—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ஜன்ய ராகம். 51-வது மேளகர்த்தாவில் ஜன்யமானது. ஆரோகணத்தில் ரிஷப நிஷாதங்கள் வர்ஜ்யம்.

ஆரோ:—ஸகம பதபஸ
அவரோ:—ஸநித நிபம கரிஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு. கிரமமான ஸஞ்சாரங்களினாலேயே ராக ஸ்வரூபம் விளங்கும். அய்யரவர்களின் "கலலநேர்ச்சி" என்ற கீர்த்தனம் உதாரணம்.

343. **போகவஸந்தம்:**—இது ஓர் ஷாடவ ராகம். 51-வது மேளகர்த்தாவில் ஜன்யம். பஞ்சம வர்ஜ்ய மான ரக்தி ராகம்.

ஆரோ:—ஸரிகம தநிஸ
அவரோ:—ஸநிதம கரிஸ

ஸரிக மாம கரிஸ—நிதம தமக ரிகா—கமதநி ஸநித மகரி—மாதா நீஸா நீஸ நிஸரி கரிஸ நிரிஸநித மத நிஸா நிரிநி—தஸநி—மதம—கமகா ரிகரிஸ போன்ற பிடிகளால் ராக ஸ்வரூபம நன்கு விளங்கும். இதில் லக்ஷண கீதம் உண்டு.

344. **ராமக்ரியா:**—இது ஓர் ராகாங்கம். 51-வது மேளகர்த்தாவில், ஜன்யம். ஸம்பூர்ண ஸஞ்சாரம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ:—ஸரிகம பதநிஸ
அவரோ,—ஸநிதப மகரிஸ

345. **கனகரஸாளி:**—இது ஓர் ஷாடவ ராகம். 51-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் பஞ்சமும் அவரோகணத்தில் நிஷாதமும் வர்ஜ்யம். ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிக மதநிஸ

அவரோ :—ஸதா பமகரிஸ

தநிஸ தாப—நிஸரிஸ தாப—காமா தாநிஸ நிதாப கமத பாம கரிகா மகரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

346. குமுதக்ரியா :—இது ஓர் உபாங்க ராகம். 51-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவம் பஞ்சமம் வர்ஜ்யம். ஆரோஹணத்தில் நிஷாதமும் வர்ஜ்யம். எப்போதும் பாடக் கூடிய ராகம்.

ஆரோ :—ஸரிகம தஸா

அவரோ :—ஸநிதம கம கரிஸ

ஸரிகமா—கமதம கரிகா—மதநித ஸாநித மகா—கம தஸாநி தமகா—கமத மகரி கமகரிஸ போன்ற ஸஞ்சாரம் ரஞ்ஜகம்.

347. ராமப்ரியா :—இது 52-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம்—சக்ர வாகத்திற்கு நேர் ப்ரதி மத்யமம். சதுச்ருதி தைவத கைசிகி நிஷாதங்களும் அந்தர காந்தார ப்ரதி மத்யமங்களும் ராகச் சாயாஸ்வரங்கள். லக்ஷண கீதம் உண்டு.*

348. ராமமனோஹரி :—இது 52-வது மேளகர்த்தாவில் உண்டானது. வக்ர ஸம்பூர்ணம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ ;—ஸரிகம பதநி தஸா

அவரோ :—ஸநிதப மகரிஸ

சுத்த ரிஷபத்தை ஜாக்ரதையாகப் பிடித்துப் பாட வேண்டும். அய்யரவர்களின் "ஸீதா மனோஹர" என்ற கீர்த்தனம் தகுந்த உதாரணம்.

349. ரீதிசந்த்ரிகா :—இது ஓர் ஷாடவ ஸம்பூர்ண ராகம். 52-வது மேளகர்த்தாவில் ஜன்யமானது. ஆரோகணத்தில் நிஷாதம் வர்ஜ்யம். ரக்தி ராகம்.

---

* அநேக கீர்த்தனங்களும் ப்ரஸித்தம்.

ஆரோ :—ஸரிகம பதஸ
அவரோ :—ஸநிதப மகரீஸ

ஸரிக ரீஸ—ஸாரீ கமப மகரிஸ—காம பதப மகரிஸ—மபதஸா நிதப மகரிஸ—நிதநி பதநித பத்ஸ நிதா—தாதா பமபத ஸாநி தஸா—மபத ஸாஸ நிதபம கரிஸ போன்ற பிடிகளினுல் ராகஸ்வரூபம் நன்குவிளங்கும்.

350. கமனச்ரமா :—இது 53-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். சுத்த ரிஷப அந்தர காந்தார ப்ரதி மத்யம, சதுச்ருதி தைவத காகலி நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள். சுத்த ரிஷபம் கவனமாய்ப் பிடிக்கப் பட வேண்டும். இதில் லக்ஷண கீதம் உண்டு. அய்யரவர்களின் ("ஞான மொஸக ராதா") "ஸங்தேகமு" என்ற கீர்த்தனை கள் ப்ரஸித்தம்.

351. பூர்வகல்யாணி :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ஜன்ய ராகம். 53-வது மேளகர்த்தா ஜன்யங்களில் மிகுந்த ரக்தி வாய்ந்தது. சதுச்ருதி தைவத காகலி நிஷாதங்கள் முக்ய ஸ்வரங்கள். வக்ர ப்ரயோகங்கள் ரஞ்ஜகம்.

ஆரோ :—ஸரிகம பதநீ தபஸா
அவரோ :—ஸநிதப மகரிஸ்

பாம பமகம ரிகா—பமக மரிம கரிஸா ஸரிக ரிகா—பதப ஸாஸ, ஸநிஸ ரீஸ நிதபஸா—ஸநித ஸமநி தம கரிகா போன்றவை சில முக்யமான பிடிகள்.

உதாரணம் :—ஐய்யரவர்களின் "பரிபூர்ணகாமா" ஸ்ரீநிவாஸஐய்யங்காரவர்களின் "பரமபாவனராம" என்கிற கீர்த்தனங்கள்.

352. கமகக்ரியா :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண / ஜன்ய ராகம். 53.வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத் தில் காந்தாரம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிம பதநிஸ

அவரோ :—ஸநிதப மகம ரீஸ

இதற்கு மேற்கண்ட விபரப்படி லக்ஷண கீதம் உண்டு. ஸங்கீத ஸம்ப்ரதாயப்ரதர்சினியில் இதே பெயருள்ள ராகத்தை தேசீப ராகாங்க ரக்தி ராக மாகப் போடப் பட்டிருப்பதுடன் ஸம்பூர்ண ஸஞ்சா ரத்துடன் (ஸரிகம பதஸ—ஸநிதப மகரிஸ) காந்தாரம் ஜீவஸ்வரமாக உள்ள தென்று குறிக்கப் பட்டி ருக்கிறது. தீக்ஷிதரவர்களால் "மீனாக்ஷி" என்ற க்ருதி ப்ரஸித்தம்.

353. ஹம்ஸானந்தி :—இது 53-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ராகம். ஷாடவம். பஞ்சமம் வர்ஜ்யம் மிகுந்த ரக்தி யுள்ள தேசீய ராகம்.

ஆரோ :—ஸரிகம தநிஸா

அவரோ :—ஸநிதம கரிஸா

இந்த ராகம் மஹாராஷ்டர ஹரிகதா காலக்ஷேபங் களில் அடிக்கடி வரும். நமது தென்னிந்தியாவில் செய்யப்பட்டு வரும். தமிழ் காலக்ஷேபங்களிலும் தஞ்சை ப்ரம்ஹ ஸ்ரீ கிருஷ்ண பாகவதரவர்கள் காலம் முதல் கொண்டு பாடப்பட்டு வருகிறது. இந்த ராகத்தில் பாகவதரவர்களின் அருமையான சிட்டா ஸ்வரங்கள் சில உண்டு.

354. விச்வம்பரி :—இது 54-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். சுத்த ரிஷப, அந்தர காந்தார, ப்ரதி மத்யம ஷட்ச்ருதி தைவத காகலி நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

355. விஜயவஸந்தம் :—இது 54-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஔடுவ ராகம். ஆரோகணத்தில் ரிஷப காந்தா

ரங்களும் அவரோகணத்தில் தைவத ரிஷபங்களும் வர்ஜ்யம். ரக்தி ராகம். ஸஞ்சார க்ரமத்தினாலேயே ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும்.

ஆரோ :—ஸமாப தாநிஸ
அவரோ :—ஸநிபம காஸ

உதாரணம் :— அப்பாவர்களின் "நீசித்தமு நாபாக்யமு" என்ற கீர்த்தனம்.

356. வைசாகம் :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 54-வது மேளகர்த்தாவில் ஜன்யம்.

ஆரோ :—ஸரிகம பதநிஸ
அவரோ :—ஸநிதநி பமக மரீஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு. க்ரமமான ஸஞ்சாரங்களினாலேயே ராக ஸ்வரூபம் நன்கு விளங்கக் கூடியது.

357. ச்யாமலாங்கி :—இது 55-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். பத்தாவது சக்ரத்தில் முதல் ராகம். ப்ரதி மத்யம பஞ்சம சுத்த தைவத சுத்த நிஷாதங்கள் அடுத்தடுத்து வருவதால் ஜாக்ரதையாய்ப் பிடித்துப் பாட வேண்டும். சதுச்ருதி ரிஷப ஸாதாரண காந்தாரங்கள் ராகச் சாயாஸ்வரம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

358. ச்யாமலா :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 55-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ராகாங்கம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸகரிக மபத நிதஸ
அவரோ :—ஸநிதப மகரிஸ

உதாரணம் :—தீக்ஷிதரவர்களின் "ச்யாமளாங்கி மாதங்கி" என்ற க்ருதி.

359. தேசாவளி :—இது ஓர் ஷாடவ வக்ர ராகம். 55-வது மேளகர்த்தாவில் ஜன்ய மானது. இதில் லக்ஷண கீதம் உண்டு. ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிக மதநிதஸ

அவரோ :—ஸநிதம கரிஸ

ஸநிதநி ததஸா—ரிகமக ரிஸநி—ஸரிகம தமகரி—கமதநி தமகரி—தஸநித மநித—தமகம கரிஸ போன்ற கிரமமான ஸஞ்சாரங்கள் ராக ஸ்வரூபத்தை விளக்கும்.

360. ஷண்முகப்ரியா * :—இது 56-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். சதுச்ருதி ரிஷப ஸாதாரண காந்தார ப்ரதி மத்யம சுத்த தைவத கைசிகி நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள். இது நடபைரவிக்கு நேர் ப்ரதி மத்யம ராகம். மிகுந்த ரக்தி யுள்ளது. லக்ஷண கீதம உண்டு. அய்யரவர்களின் "வத்தனே வாரு" என்ற கீர்த்தனமும் பட்டணம் ஸுப்ரமணிய அய்யரவர்களின் "மரிவேரதிக்கெவரையா" என்ற கீர்த்தனமும் பிரஸித்தம்.*

361. குஸுமஸாரங்கா :—இது 56-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஷாடவ ஸம்பூர்ண ராகம். ஆரோகணத்தில் காந்தாரம் வாஜ்யம். இந்த "குஸுமஸாரங்கா" என்ற ராகம் நடபைரவியில் ஜன்யமான "சுத்ததேசி" என்ற ராகத்திற்கு ப்ரதி மத்யம ராக மாகிறது. பாடுவதற்கு மிகுந்த ரக்தி யான ராகம்.

ஆரோ :—ஸரிமப தநிஸா

அவரோ :—ஸநிதப மகரிஸ

கிரமமான ஸஞ்சாரங்கள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

---

* இதில் வரும் தைவதமும் ரிஷபமும் கமக ஒரிசையுடன் பேசும்.

362. த்ரிமூர்த்தி :—இது ஓர் ஷாடவ ராகம். 56-வது மேளகர்த்தாவில் உண்டானது. பஞ்சமம் வர்ஜ்யம். மிருந்த ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிகம தநிஸா

அவரோ :—ஸநிதம கரிஸா

கிரமமான ஸஞ்சாரங்களே ரஞ்ஜகம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

363. ப்ரமரகுஸுமம் :—இது ஓர் ஔடுவ ஸம்பூர்ண ராகம். 56-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் ரிஷப தைவதங்கள் வர்ஜ்யம். உற்று நோக்குங்கால் இது "ஆபேரிக்கு" ப்ரதி மத்யம ராகமாகிறது.

ஆரோ :—ஸகம பநிஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

கிரமமான ஸஞ்சாரங்கள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

364. பாஷிணி :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 56-வது மேளகர்த்தாவில் ஜன்யம்.
இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸகரிக மதநீதஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

கிரமமான பிடிகளே ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கக் கூடியவை.

365. வஸுகரி :—இது 56-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் ரிஷபமும் அவரோகணத்தில் பஞ்சம ரிஷபங்களும் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸகம பதநிஸ

அவரோ :—ஸநித மகஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு. "நீதபதநி ஸாநி தநீ தமாப—மாபாத நீதபத மாப—கமப மகஸ—ஸகாக மாமகஸ" போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

366. கிரிகத்யா :—இது ஓர் நிஷாதாந்த ராகம். 56-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் ரிஷபம் வர்ஜ்யம்.

ஆரோ :—நிஸக மபதநி

அவரோ :—தபமக ரிஸநி

மத்யஸ்தாயி ஸஞ்சாரியாகையால் பாடும் போது மத்யமச்ருதி வைத்துக்கொள்வது ரஞ்ஜகம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

367. ஸிம்ஹேந்த்ரமத்யமம் :—இது 57-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். சதுச்ருதி ரிஷப, சாதாரண காந்தார, ப்ரதி மத்யம, சுத்த தைவத, காகலி நிஷாதங்கள் சாயாஸ்வரங்கள். சுத்த மத்யம சக்ரத்தில் உள்ள "கீரவாணி" என்ற 21-வது மேளகர்த்தாவிற்கு நேர் ப்ரதி மத்யமம். மிகுந்த ரக்தியான கனராகம். இதில் லக்ஷண கீதமும் அநேக உருப்படிகளும் உண்டு. அய்யர் அவர்கள் முத்திரையுடன் "நீதுசரணமுலே" "நதஜன பரிபாலக" என்ற கீர்த்தனைகள் ப்ரஸித்தமாய் வழங்கி வருகின்றன. சிலர் இவைகள் அய்யரவர்களின் கீர்த்தனை யல்ல என்று ஸந்தேகிக்கிறார்கள். எப்படி யிருந்த போதிலும் ஷை கிருதிகளில் ராக ஸ்வரூபம் நன்கு விளங்குகிறது.

368. ஸீமந்தி :—இது 57-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஸம்பூர்ண ஔடுவ ராகம். அவரோகணத்தில் நிஷாத தைவதங்கள் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிகம பதநிஸ

அவரோ :—ஸபம கரிஸ

369. மாதவமனோஹரி :—இது 57-வது மேளகர்த்தாவில் ஜன்யமானது. ஆனால் இதே பெயருள்ள இன்னொரு ராகம். 22-வது மேளகர்த்தாவில் ஜன்யமாகக் குறிக்கப்பட்டிருக் கிறது. (Vide No. 146.)

ஆரோ :—ஸகரிக மபநி தநிஸ

அவரோ :—ஸநிதம கரிஸ

இதுபோல் லக்ஷண கீதமும் உளது.

370. சேஷநாதம் :—இதுவும் 57-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவ ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் நிஷாதம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம பதஸ

அவரோ :—ஸநிதப மகரிஸ

இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

371. கண்டாணம் :—இது ஓர் ஷாடவ ராகம். 57-வது மேளகர்த்தாவில் ஜன்யம். பஞ்சமம் வர்ஜ்யம். மிகுந்த ரக்தியுள்ள கம்பராகம் என்றே சொல்லலாம். கிரமமான ஸஞ்சாரங்களே ரஞ்ஜகம்.

ஆரோ :—ஸரிகம தநிஸா

அவரோ :—ஸநிதம கரிஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு.

372. ஸர்வாங்கி :—இது ஓர் ஔடுவ ராகம். 57-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் காந்தார பஞ் சமங்களும் அவரோகணத்தில் பஞ்சம ரிஷபங்களும் வர்ஜ்ய மான ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிமா தநிஸா

அவரோ :—ஸநித மகஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு.

373. சுத்தராகம் :—இது ஓர் ஷாடவ வக்ர ராகம், 57-வது மேளகர்த்தாவில் ஜன்யம். தைவத வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம பநிஸ
அவரோ :—ஸநிபம கஸரிஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு.

374. தவளஹம்ஸி :—இது ஓர் ஔடுவ ஸம்பூர்ண ராகம். 57-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் காந்தார நிஷாதங்கள் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிமா பதஸ
அவரோ :—ஸநிதப மகரிஸ

ஸரிகரி ஸாஸ—ஸரிமாம காரிஸ—மாம பதப மக ரிஸ—மாபத நிதப மகரிஸ—மாப பதப மாம பதநீ தபம—பதஸநீ தபம—ரிஸாநி தபாம—பதஸ ரிமா கரிஸா—பதஸநி தபாம கரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

375. ப்ரமரஸாரகி :—இது ஓர் ஷாடவ ஸம்பூர்ண ராகம். 57-வது மேளகர்த்தாவில் ஜன்யம். அவரோகணத்தில் நிஷாதம் வர்ஜயம. ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிகம பதநிஸ
அவரோ :—ஸதாப மகரிஸ

ஸரிகமா மகரிஸ—மபதபா மகரிஸ—பதநீதா பம கரிஸ—பதநிஸ தாபம கரிஸ ஸரிஸ நிஸதாப மகரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

376. ஹைமவதீ :—இது 58-வது மேளகர்த்தா ராகம். ஸர்வ ஸ்வர ஸம்பூர்ணம். ரக்தியான கனராகம். சுத்த மத்யம சக்ரத்திலுள்ள கரஹரப்ரியாவுக்கு ப்ரதி மத்யம ராகம். சதுச்ருதி ரிஷப ஸாதாரண காந்தார ப்ரதி மத்யமம்

சதுச்ருதி தைவத கைசிகி நிஷாதங்களும் ராகச்சாயா ஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு.

377. ஸிம்ஹாரவம் :—இது ஓர் ஷாடவ வக்ர ராகம். 58-வது மேளகர்த்தாவில் ஜன்யமானது. இதற்கு தைவதம் வர்ஜ்யம். ஆரோகணத்தில் காந்தாரமும் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிமா பநிஸ

அவரோ :—ஸநிபம ரிகரிஸ

இதில லக்ஷண கீதம் உண்டு.

378. நளினப்ரமரி :—இது ஓர் வக்ர ஷாடவ ஜன்ய ராகம். 58-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ரக்தி ராகம். காந்தாரம் வர்ஜ்யம.

ஆரோ :—ஸரிமப தநிஸ

அவரோ :—ஸநிதநி பமரிஸ

ஸரிமா பாம பதநி தபா—மாபத நிஸாநி தநிபா—தநிஸரிரி மாரி ஸாநித—பதநி ஸாநி தநீதபம—ரிமாம பாம ரிமரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம். உற்று நோக்குங்கால் இந்த ராகம் "தேவமனோஹரி" என்ற ராகத்திற்கு ப்ரதி மத்யம மாயிருப்பதை அறியலாம்.

379. விஜயஸாரங்க :—இது 58-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவம். ஆரோகணத்தில் தைவதமும அவரோஹணத்தில் ரிஷபமும் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம பநிஸ

அவரோ :—ஸநிதப மகஸ

கிரமமான ஸஞ்சாரங்களினாலேயே ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும். ஆராய்ந்துபார்க்கையில் இந்த ராகம் "கன்னடகௌளை" என்ற ராகத்திற்கு ப்ரதி மத்யம ராகம் என்பது நன்கு விளங்கும்.

380. தர்மவதி :—இது 59-வது மேளகர்த்தா ராகம். சதுச்ருதி ரிஷப சாதாரண காந்தார ப்ரதி மத்யமம். சதுச்ருதி தைவத காகலி நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

381. ரஞ்ஜநி :—இது ஓர் ஷாடவ வக்ர ராகம், 59-வது மேளகர்த்தாவில் ஜன்யமானது. பஞ்சமம் வர்ஜ்யம். ஆரோஹணத்தில் நிஷாதமும் வர்ஜ்யம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிக மதஸ

அவரோ :—ஸ்நிதம கஸரிஸ

கமத ஸநித மகஸரிஸ—ஸரிக மாம கமதாத—தஸ்ாநி தமகஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம். அய்யரவர்களின் "தர்மார்க சாரத" என்ற கீர்த்தனம் தகுந்த உதாரணம்.

382. தௌம்யராகம் :—இது ஓர் ஷாடவ ஸம்பூர்ண ராகம். 59-வது மேளகாத்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் நிஷாதம் வர்ஜ்யம்,

ஆரோ :—ஸரிகம பதஸ

அவரோ :—ஸ்நிதப மகரிஸ

இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

383. நீதிமதி :—இது 60-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ண சதுச்ருதி ரிஷப, ஸாதாரண காந்தார, ப்ரதி மத்யம, ஷட்ச்ருதி தைவத காகலி நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள். லக்ஷண கீதமுண்டு.

384. கைகவசி :—இது ஓர் ஸம்பூர்ண ஷாடவ ராகம். 60வ-து மேளகர்த்தாவில் ஜன்யம. ஷட்ச்ருதி தைவதத்தை கிரமமாய்ப் பிடித்து ராகச்சாயையை நன்கு விளக்கவேண்டும். அவரோஹணத்தில் தைவதம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம பதநிஸ

அவரோ :—ஸநிப மகரிஸ

உதாரணம் :—அய்யரவர்களின் "வாசாமகோசரமே" என்ற கீர்த்தனம்.

385. ஹம்ஸநாதம் :—இது 60-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவ வக்ரம். பாஷாங்கம். ரிஷபம் ஷட்ச்ருதி தைவதம் ஜீவஸ்வரங்கள். காந்தாரம் வர்ஜ்யம். சதுச்ருதி ரிஷபம் ப்ரதி மத்யமம். இவைகளை ஊன்றிப் பிடிக்க வேண்டும்.

ஆரோ :—ஸரிமா பதா நீஸா

அவரோ :—ஸநிதநி பமரீஸா

ஸநிநிஸா—ஸரிஸ பாம நிநீஸா—பமரீ என்ற பிடிகள் ரஞ்ஜகம்.

உதாரணமாக :—அய்யரவர்களின் "பண்டுரீதி கொலு" என்ற கீர்த்தனம் பிரஸித்தம்.

386. கேளரீக்ரியா :—இது 60-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஷாடவ வக்ரம்—ரிஷபம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸகம பதநிஸ

அவரோ :—ஸநிதநி பமகஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு.

387. நிஷாதம் :—இது 60-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம்.

ஆரோ :—ஸகரி மபஸா

அவரோ :—ஸநிதம பநிப மகரிஸ

வக்ர ஸஞ்சாரங்கள் ராக ரஞ்ஜகம்.

உதாரணம் :—ஸகரி மாம பம கரிஸா பநிபம பாம கரிஸ—பஸாநி தமா கரிஸ நிதநிப மகரிஸ—தமாப நிபாம கரிஸ—இதில் லக்ஷண கீதம் உண்டு.

388. **காந்தாமணி :**—இது 61-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். சதுச்ருதி ரிஷப அந்தர காந்தார ப்ரதி மத்யமங்களும் இதர சுத்தஸ்வரங்களும் ராகச்சாயாஸ்வரங்கள். ப்ரதி மத்யம—பஞ்சம சுத்த தைவத சுத்த நிஷாதங்கள் படிப்படியாய் வருவதை கவனித்துப் பாட வேண்டும். இதில் அய்யரவர்களின் "பாலிக்துவையா" என்ற கீர்த்தனம் தகுந்த உதாரணம்.

389. **ச்ருதிரஞ்ஜநி :**—இது ஓர் நிஷாதாந்த ராகம். 61-வது மேளகர்த்தாவில் ஜன்யம். மத்யஸ்தாயி ஸஞ்சாரி யாகையால் மத்யம சுருதியில் பாட விசேஷ ரஞ்ஜகமாயிருக்கும்.

ஆரோ :—ஸரிகம பதநீ

அவரோ :—நிதபம கரிஸரிஸ

உதாரணம் :—"ஏதாரிஸஞ்சரி" என்ற அய்யரவர்களின் கீர்த்தனம்.

390. **குந்தலம் :**—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 61-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ரமான பிடிகள் ராக ரஞ்ஜகம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிகம பதநிதஸ

அவரோ :—ஸநிதப மகம ரிஸ

ஸரிக்ரிஸ—ஸரிகமா மரிஸ—ஸரிக மபா மகமரிஸ—கமபத நிதபம கமரிஸ—ப்தநித ஸநிதப—பதநித பமக மரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினியில் இதற்கு "ஸரிக மபதஸ—ஸநிதப மகரிஸ" என்ற ஸஞ்சாரம் குறிக்

கப்பட்டிருக்கிறது. தீக்ஷிதரவர்களால் "ஸ்ரீ ஸுகந்தி குந்தளாம்பிகே" என்ற கீர்த்தனமும் காணப்படுகிறது.

391. கர்ணாடகதரங்கிணீ:—இது 61-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் தைவதமும் அவரோகணத்தில் நிஷாத தைவதங்களும் வர்ஜ்யம்.

ஆரோ:—ஸரிகம பநிஸா

அவரோ:—ஸ்பா மகரிஸ

ஸரிக மாம கரிஸ—கமபா மகரிஸ—கமபநி பாம கரிஸ—பநிஸா பாம கரிஸ—பநிநி ஸரிக ரிஸா—ஸ்ரி ஸபாம மபநீப மகரிஸ போன்ற பிடிகள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

392. ரிஷபப்ரியா:—இது 62-வது மேளகார்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். சதுச்ருதி ரிஷப, அந்தர காந்தார, ப்ரதி மத்யம சுத்த தைவத கைசிகி நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள். லக்ஷண கீதமுண்டு.

உதாரணம்:—அய்யாரவர்களின் "மஹிமதக்கிஞ்சு" என்ற கீர்த்தனம்.

393. ரத்னபானு:—இது 62-வது மேளகர்த்தாவில் ஜன்யமான வக்ர ஸம்பூர்ணம். வக்ரமான பிடிகள் மிகவும் ரஞ்ஜகம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ:—ஸரிம கரிம பநித நிஸ

அவரோ:—ஸநிதப மகரிஸ

ஸ்ரிம கரிஸ—ரிமகரி பமகரிஸ—மகரி மாம பாப மகரிஸ—ரிமபநி தபம கரிஸ—மகரி மாம பநிதப—பநித நிதப—மபநி தநிஸா—ஸரிஸ ஸநிதபா—ஸரிம கரிஸ நிதபா—மபநித நிஸ்நித பமகரிஸ போன்ற பிடிகள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்கும்.

394. லதாங்கி :—இது 63-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ண ரக்தி ராகம்.

உதாரணம் :—பட்டணம் ஸுப்ரமண்ய அய்யரவர்களின் "அபராதமுல" என்ற கீர்த்தனம் ப்ரஸித்தம்.

395. கோத்ராரி :—இது ஓர் ஔடவ ஸம்பூர்ண ராகம். 63-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் காந்தார நிஷாதங்கள் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிம பதஸ
அவரோ :—ஸநிதப மகரிஸ

கிரமமான ஸஞ்சாரங்களினுலேயே ராக ஸ்வரூபம் நன்கு விளங்கும். இதில் லக்ஷண கீதம் உண்டு.

396. ரத்னகாந்தி :—இது ஓர் ஷாடவ ராகம். 63-வது மேளகர்த்தாவில் ஜன்யம். தைவதம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸரிகம பநிஸா
அவரோ :—ஸநிப மகரிஸ

கிரமமான ஸஞ்சாரங்களினுல் ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

397. வாசஸ்பதி :—இது 64-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ண ரக்தி ராகம். மத்யம சக்ரத்தில் உள்ள ஹரிகாம்போதிக்கு நேர் ப்ரதி மத்யம ராகம். சதுச்ருதி ரிஷப, அந்தர காந்தார, ப்ரதி மத்யம, சதுச்ருதி தைவத கைசிகி நிஷாதங்கள் சரியான ஸ்வரங்கள். அய்யரவர்களின் "கண்டஜூடுமி" என்ற கீர்த்தனம் பிரஸித்தம்.

398. பூஷாவளி :—இது ஓர் ஷாடவ ஸம்பூர்ண ராகம். 64-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ரக்தி ராகம்:

ஆரோ :—ஸரிகம பதஸ
அவரோ :—ஸநிதப மகரிஸ

பதஸ நித்ப மகரிஸ—ஸரிக மாம கமபதா—கமபத் நிதபத—மபதஸா நிதபத—பதப மபமகரி கமக ரிஸ—நிதப தஸா போன்ற தைவத ஸம்பந்தமான வக்ரப் பிடிகள் மிகவும் ரஞ்ஜகம்.

உதாரணம் :—அய்யரவர்களின் "தனமீதநே" என்ற கீர்த்தனம் ப்ரஸித்தம்.

399. ஸரஸ்வதி :—இது 64-வது மேளகர்த்தாவில் ஜநித்த ஔடுவ ஷாடவம். காந்தாரம் வர்ஜ்யம். ஆரோகணத்தில் நிஷாதமும் வர்ஜ்யம். மிகவும் ரக்தியான ராகம்.

ஆரோ :—ஸரிம பதஸ

அவரோ :—ஸநிதப மரிஸ

பதஸாஸ—பதஸரி ஸநிதப—மாபத ஸநித பநித—மரிஸ ரிமரி ஸரிஸநி தாஸா போன்ற ஸாதாரணமான பிடிகளே ரஞ்ஜகம். அய்யரவர்களின் "அனுராக முலேனி" என்ற கீர்த்தனம் தகுந்த உதாரணம்.

400. பர்ப்பர :—இது ஓர் வக்ர ஷாடவ ராகம். 64-வது மேளகர்த்தாவில் ஜன்யம். பஞ்சமம் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸகமரி கமத நிஸ

அவரோ :—ஸநிதம கரிஸ

ஸகம கரிஸ—கமரிக மாம—மதநி தமா கமத நிஸநி தமா—ஸகஸநி தநிஸநி தம—கமரிக மகரிஸ போன்ற வக்ர பிடிகள் ராகஸ்வரூபத்தை நன்கு விளக்கும். இதில் லக்ஷண கீதம் உண்டு.

401. உத்தரீ :—இது ஓர் ஷாடவ ஔடுவ ராகம். 64-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் ரிஷபமும் அவரோகணத்தில் பஞ்சம ரிஷபங்களும் வர்ஜ்யம். கிரமமான ஸஞ்சாரங்கள் ராகஸ்வரூபத்தை விளக்கும்.

ஆரோ :—ஸகம பதநிஸ

அவரோ :—ஸநித மகஸ

இதில் லக்ஷண கீதம் உண்டு.

402. போகீச்வரி :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 64-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் மத்யமம் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிகபா தநிதஸா

அவரோ :—ஸநிதப மகரிஸ

ஸரிகபா மகரிஸ—கமதநி தபம கரிஸ—கபாப தஸ நித—தநிதஸாஸ—ஸநிதப கபதப மகரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

403. மேசகல்யாணி :—இது 65-வது மேளகர்த்தா ராகம். ஸ்ர்வஸ்வர ஸம்பூர்ணம். மிகுந்த ரக்தியுள்ள கன ராகம். சதுச்ருதி ரிஷப அந்தர காந்தார ப்ரதி மத்யம, சதுச்ருதி தைவத காகலி நிஷாதங்கள் ராகச்சாயாஸ்வரங்கள். கல்யாணி என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ராகத்தின் காகலி நிஷாதத்தை கொஞ்சம் கமகமாய்ப் பிடிப்பது மிகுந்த ரக்தியாயிருக்கும். "கமப காரிஸ" என்றது லக்ஷணப் பிடிப்பு. இது தீரசங்கராபரணத்திற்கு ப்ரதி மத்யம ராகம். நிகரி—நிரிநி—மதம—கரிநி போன்ற தாட்டு வரிசைகளும்—தகரிநி தமகரி நிரிநிஸா போன்ற பிடிப்புகளும்—கக ததநி நிரிரி போன்ற ஜண்டை வரிசைப் பிடிகளும் மிகவும் ரஞ்ஜகம். இதில் அநேக வர்ணங்கள் கீர்த்தனங்கள் பதங்கள் இருப்பதால் அனுபவத்தினுல் மற்ற நுட்பங்களையும் அறியலாம்.

404. ஸாரங்கா :—இது 65-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ராகம். ஆனுல் சிலர் இது 64-வது மேளகர்த்தாவில் உண்டானதென்று அபிப்ராயப் பட்ட போதிலும் அனுப

வத்தில் இதில் காகலி நிஷாதம் பேசுவதால் இதை 65-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ராகம் என்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. இது பாஷாங்க ராகம். இதற்கு ரிகமரிஸ என்ற பிடி வரும்போதெல்லாம் சுத்த மத்யமம் பேசும். சுத்த மத்யமம் வந்தால் உடனே ரிஷபம் வந்துதான் மேல் ஸஞ்சாரம் செய்ய வேண்டும். இந்த நுட்பங்களை வர்ணம் கீர்த்தனைகள் முதலிய கேள்விகளினால் நன்கறியலாம். இது வக்ர ஸம்பூர்ண ராகம்.

ஆரோ :—ஸரிகம பதநிஸா

அவரோ :—ஸதா பமரி கமரீஸா

“கமபத நிஸதா பமரீ கமரிஸ” என்ற பிடியில் 3-வது மத்யமம் சுத்த மத்யமம்.

உதாரணம் :—இதில் அய்யாவர்களால் அநேக கீர்த்தனைகள் உண்டு. “நீவாடநேகான” “எத்ந்தபாக்யமு” என்ற க்ருதிகள் பிரஸித்தம்.

405. யமுனாகல்யாணி :—ஷாடவ ராகம். 65-வது மேளகர்த்தாவில் ஜன்யம். பாஷாங்கம். தேசீய ராகம். அனுபவத்தில் இந்த ராகத்தை நிஷாத வர்ஜ்யமாய்ப் பாடுகிறார்கள்.

ஆரோ :—ஸரிகப மபதஸா

அவரோ :—ஸதப மபக ரிஸா

மாகப மபாத—ஸதாப மபம காரிஸ பமபத ஸதா பம—பமகரி கபமப காரிஸ போன்றவை மூர்ச்சனைகள்.

உதாரணம் :—அய்யரவர்களின் “ஹரிதாஸுலு வெடல” என்ற கீர்த்தனை.

406. **யாமுன் :**—இது ஓர் பாஷாங்க தேசிய ராகம். வடநாட்டிலிருந்து இங்கு வந்து வழங்கும் ராகங்களில் இதுவும் ஒன்று. இதை 65-வது மேளகர்த்தாவில் ஜன்யம் என்று சொல்ல வேண்டும். நிஷாதாந்த ஸஞ்சாரம் சுத்த மத்யமும் பேசும். மத்யஸ்தாயி ஸஞ்சாரியாகையால் விசேஷமாய் மத்யமச்ருதியில் தான் பாடப்பட்டு வருகிறது.

ஆரோ :—தநிஸரி கமபதா

அவரோ :—நிதபம கமக ரிஸா

இதில் ப்ரதி மத்யம சுத்த மத்யமங்கள் அடிக்கடி கலந்து வருமாகையால் அனுபவத்தின் மூலம் அறிய வேண்டும். தநிஸ ரீரிகா—கமபம மகா—நிதபமப கமகா—தநிரீ ரிகா—காக மாம பாப மமகா—மகம கமப மகரிஸா—போன்ற பிடிகளில் * இந்தக் குறியுள்ள மத்யமங்கள் சுத்த மத்யமம் "அதிநீவை மருலு கொனதிரா" என்ற ஜாவளி பிரஸித்தம்.

407. ஹமீர்கல்யாணி :—இது ஓர் பாஷாங்க தேசிய ராகம். 65-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வட இந்தியாவிலிருந்து வந்த ராகமாகையால் சுத்த மத்யமம் கலக்கும்.

ஆரோ :—ஸபம பத நிஸா

அவரோ :—ஸநிதப கமக ரிஸா

தாபத நிதா பமதா—மபதா பமகா காம ரிஸா ரிஸ—தா—தாபா காம கரிஸ ஸரிஸ பாம தாப போன்ற ஸஞ்சாரத்தில் வரும் (இம்மாதிரியான) மத்யமங்கள் சுத்த மத்யமம் என்பதை அனுபவ பூர்வமாய் அறிய வேண்டும்.

உதாரணம் :—அய்யரவர்களின் "மானமுலேதா" என்ற கீர்த்தனம். கிருஷ்ணபாகவதரவர்களின் கதைகளில்

இந்த ராகம் அடிக்கடி வரும். இதில் அவர்களுடைய சிட்டா ஸ்வரங்கள் உண்டு.

408. கௌமோதம் :—இது ஓர் ஔடுவ ராகம். 65-வது மேளகர்த்தாவில் ஜன்யம். பஞ்சம தைவதங்கள் வர்ஜ்யம். ரக்தி ராகம்.

ஆரோ :—ஸரிக மநீஸ

அவரோ :—ஸநிமா காரிஸ

ஸரிகமா மகரிஸ—கரிஸநி மாகீ நீஸா—கரிகா கமாம நீநீ மாகா—ஸாநி ஸநீமா காகம கரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

409. குந்தலஸ்ரீகண்டி :—இது ஓர் ஔடுவ ஷாடவ ராகம். 65-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் ரிஷப பஞ்சமங்களும்—அவரோகணத்தில் தைவதமும் வர்ஜ்யம்.

ஆரோ :—ஸகம தநிஸா

அவரோ :—ஸநிப மகரிஸ

இந்த ராகத்தின் ரிஷபத்தைப் பிடிக்கையில் ஸரியான சதுச்ருதி ரிஷபம் என்ற ஞாபகத்துடன் பிடித்து ஸஞ்சரிக்க வேண்டும். ஸகாக ரீஸ—ஸாநி தநிஸா—கமபம கரிஸநி தநிஸா—காமத பாம கரிஸ நிஸ ஸகாக மதாத நிபா மகரி—கமதநி ஸநிபம கரிஸா—பாம கரிஸ—நீபாம கரி கமதநி ஸநிபம கரிஸா போன்ற பிடிகளால் ராகஸ்வரூபம் நன்கு விளங்கும்.

410. ஸுகாதவிநோதினி :—இது ஓர் ஔடுவ ராகம். 65-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ரிஷப பஞ்சமங்கள் வர்ஜ்யம். கவனமாய்ப் பாடுவதால் மிகுந்த ரக்தியை யளிக்கும்.

ஆரோ :—ஸகம தநிஸா
அவரோ :—ஸநிதம கஸா

ஸா—ஸநித நிதம தமக மகஸா—ஸகாக—மகஸ—ஸமாம கமக ஸாஸ—காம தாத—தமக ஸாஸ கமத நிதம—கமக ஸாஸ—மதாத நீநிஸா நிதமகா கமத நிஸநி தமகா கஸா—ஸாஸ காக மகஸ—தமகஸ—நிதமகஸ ஸநித நீதமக மகஸா போன்ற ஸஞ்சாரம் மிகவும் ரஞ்ஜகம்.

411. மைத்ரபாவினி :—இது ஓர் ஸம்பூர்ண ஷாடவ ராகம். 65-வது மேளகர்த்தாவில் ஜன்யம். அவரோகணத்தில் நிஷாதம் வர்ஜ்யம. ஸாத்ரண ஸஞ்சாரங்களிலேயே ராகஸ்வரூபம் நன்கு விளங்கக்கூடியது.

ஆரோ :—ஸரிகம பதநிஸ
அவரோ :—ஸதப மகரிஸ

412. சித்ராம்பரி :—இது 66-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். சதுச்ருதி ரிஷப அந்தர காந்தார ப்ரதி மத்யம ஷட்ச்ருதி தைவத காகலி நிஷாதங்கள் ராகச் சாயாஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு.

413. சதுரங்கிணி :—இது 66-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ரஸம்பூர்ணம். ஆரோகணத்தில் ரிஷப தைவதங்கள் வர்ஜ்யம். இந்த ராகத்திற்கு வக்ரமான பிடிகள் தான் ரஞ்ஜகம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸமக மபநிஸ
அவரோ :—ஸநிதநி பகம கரிஸ

ஸமக மகரிஸ—கரிஸ மகம நிதநி—பநிஸ நிதநி—மபநித நிபகா மரிஸ போன்ற பிடிகள் மிகவும் ரஞ்ஜகம்.

414. ஸுசரித்ர :—இது 67-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். இதில் தீவ்ரஸ்வரங்களும் கோமல ஸ்வரங்களும் கலந்து வருவதால் கவனமாகப் பாடவேண்டும். ஷட்ச்ருதி ரிஷபம் அந்தர காந்தாரம் அடுத்தடுத்து வருவதுடன் ப்ரதி மத்யமம் பஞ்சமம் சுத்த தைவதம் சுத்த நிஷாதம் இவைகளும் படிப்படியாய் வருவதால் ப்ரதி மத்யமத்தை தீர்க்கமாய்ப் பிடித்துப் பாடுதல் அவசியம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

415. ஸத்யவதி :—இது 67-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ராகம். வக்ர ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் காந்தாரம் வர்ஜ்யம். லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிமப தநிதஸ

அவரோ :—ஸநித பமக மரிஸ

416. ஜ்யோதிஸ்வரூபிணி :—இது 68-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். ஷட்ச்ருதி ரிஷபம் அந்தர காந்தார ப்ரதி மத்யம சுத்த தைவத கைசிகி நிஷாதம் ராகச்சாயாஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு.

417. ஜ்யோதிஷ்மதி :—இது ஓர் வக்ர ஸம்பூர்ண ராகம். 68-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் தைவத நிஷாதங்கள் வர்ஜ்யம். அவரோகணம் வக்ர ஸம்பூர்ணம். இதில் லக்ஷண கீதமுண்டு.

ஆரோ :—ஸரிக மபஸ

அவரோ :—ஸநிதம பமரிகஸ

ஸரிக மகஸ—ரிகம பாம ரிகஸ—கமபாப தமா பாம ரிகஸ—கமபஸா நிதமா பமரிகஸ—ஸரிக ஸாநித மப மரிகஸ போன்ற வக்ர பிடிகள் ராகாஞ்ஜகம்.

418. தாதுவர்த்தனி :—இது 69-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். ஷட்ச்ருதி ரிஷப அந்தர

காந்தார ப்ரதி மத்யம சுத்த தைவத காகலி நிஷாதங்கள் ராகச்சாயாஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு.

419 **தௌதபஞ்சமம்** :—இது 69-வது மேளகர்த்தாவில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம். ஆரோகணத்தில் தைவதம் வர்ஜ்யம். இதில் லக்ஷண கீதம் உண்டு. வக்ர மான பிடிகள் ரஞ்ஜகம்.

ஆரோ :—ஸரிகம பநிபஸ

அவரோ :—ஸநிதப மரிக மரிஸ

ஸரிக மரிஸ—ரிகம பாம ரிகமரிஸ—கமப நிதப மரி கமரிஸ—கமபநி பஸநித பநிப ஸநிதப—தபம பமரி— மரிக மரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

420. **நாஸிகாபூஷணி** :—இது 70-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். ஷட்ச்ருதி ரிஷபம் அந்தர காந்தாரம் ப்ரதி மத்யமம். சதுச்ருதி தைவதம் கைசிகி நிஷாதம் இவைகளே ராகச்சாயாஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு.

421. **நாஸாமணி** :—இது ஓர் வக்ர ஸம்பூர்ணம். 70-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் தைவத நிஷாதங்களும் அவரோகணத்தில் காந்தாரமும் வர்ஜ்யம். இதில் லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ :—ஸரிகம பமபஸா

அவரோ :—ஸநிதநி பமரிஸ

கமபம பஸாநி தநிபா—மபம நிதநிபா—கமபம பநித நிபா—ஸநிதநி பமரிஸ போன்ற பிடிகள் ரஞ்ஜகம்.

422. **கோஸலம்** :—இது 71-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். ஷட்ச்ருதி ரிஷப—அந்தர காந்

தார ப்ரதி மத்யம—சதுச்ருதி தைவத காகலி நிஷாதங்கள் ராகச்சாயாஸ்வரங்கள். இதில் லக்ஷண கீதம் உண்டு.

423. குஸுமாவளி:—இது ஓர் ஔடுவ வக்ர ஸம்பூர்ண ஜன்ய ராகம். 71-வது மேளகர்த்தாவில் ஜன்யம். ஆரோகணத்தில் ரிஷப நிஷாதங்கள் வர்ஜ்யம்.

ஆரோ:—ஸகம பதஸ

அவரோ:—ஸ்நித பமக மரிஸ

ஸகாம பமக மரீஸ—கமபத பமக மரீஸ மபதநி தப மகமா—கமபத ஸாநித பாமக மரீஸ—ஸரிஸரி தப—மபத ஸநிதப—மகமரி போன்ற பிடிகள் ராக ரஞ்ஜகம்.

424. ரஸிகப்ரியா:—இது 72-வது மேளகர்த்தா ராகம். ஸர்வஸ்வர ஸம்பூர்ணம். இதில் வரும் ஸ்வரங்கள் அவ்வளவும் தீவ்ர ஸ்வரங்கள். கவனமாகப் பாடினல்தான் ரஞ்ஜிக்கும். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

425. ரஸமஞ்ஜரி:—இது 72-வது மேளகர்த்தாவில் ஜன்யமான ஸம்பூண ஔடுவ ராகம். அவரோகணத்தில் தைவத காந்தாரங்கள் வர்ஜ்யம். இதற்கு லக்ஷண கீதம் உண்டு.

ஆரோ:—ஸரிகம பதநிஸ

அவரோ:—ஸநிப மரிஸ

க்ரமமான பிடிகளினலே ராகஸ்வரூபம் நன்கு விளங்கக்கூடியது.

N. B. 1000 ஜன்யராகங்களில் இவ்விடம் கண்ட 425 போக பாக்கி 647 ஜன்யங்களை ஆராய்ச்சி செய்வது நலம்.

[72 கர்த்தாக்கள்—மொத்த ஜன்யங்கள் 1000]

அத்தியாயம் 3

நெ.	ராகப் பெயர்.	மேளம்.	ஆரோகண அவரோகணம்.
1	அடாணு	29	ஸரிமபநிபதநிஸ—ஸநிஸதாபமபகாரிஸ
2	அம்ருத தரங்கிணி	19	ஸரிகமதநிஸ—ஸதநிதபமகரிஸ
3	,, வர்ஷணி	39	ஸரிகமபதநிபஸ—ஸநிபதமகரிஸ
4	,, வாஹினி	20	ஸரிமாபதநிஸா—ஸநிதமகரிஸ
5	அஸாவேரி	8	ஸரிமபதஸ—ஸநிஸபதமபமகாரிஸ
6	ஆதி பஞ்சமம்	48	ஸரிபதநிஸ—ஸநிதநிபமகரிஸ
7	ஆந்தாளி	28	ஸரிமபநிஸ—ஸநிபமரிகமரிஸ
8	ஆந்தோளிகா	28	ஸரிமபநிஸ—ஸநிதமரிஸா
9	ஆபீரு	47	பதநிஸமகம—பமகஸநிதநிஸ
10	ஆபேரி	20	ஸகமபநிஸா—ஸநிதபமகரிஸ
11	ஆபோகி	22	ஸரிகமதஸ—ஸதமகரிஸ
12	ஆம்ர பஞ்சமம்	48	ஸரிகமதநிஸா—ஸநிதமகஸரிஸ
13	ஆரபி	29	ஸரிமபதஸ—ஸநிதபமகரிஸ
14	ஆர்த்ர தெசிகா	15	ஸரிகமபதநிஸ—ஸதபமகாரிஸ
15	ஆலாபி	37	ஸரிகமபதநிஸ—ஸநிதபமகரீஸ
16	ஆனந்த பைரவி	20	ஸகரிகமபதபஸ—ஸநிதபநிதபமகரிஸ
17	,, போகி	42	ஸரிகமபநிதநி—தபமகரிஸநிஸ
18	ஆஹிரி.	8	ஸரிஸகாமபதநிஸ—ஸநிதபமகரிஸ
19	ஆஹரி நாட்டை	29	ஸமகமபதநிஸ—ஸநிபதநிபகமமகஸ

20	இந்து கீர்வாணி	42	ஸரிகமபஸ—ஸநிபதநிபமகரிஸ
21	,, கண்டாரவம்	20	ஸகமபதபநி—தாபமகரிஸநீ
22	,, தன்பாஸி	46	ஸகமதநிஸ—ஸநிதபதமகரிஸ
23	,, தவளி	21	ஸரிகமஸமபதநிஸ—ஸநிதபமகஸ
24	,, போகி	46	ஸகரிகமபதஸ—ஸநிதநிபமகரிஸ
25	,, மதி	51	ஸகமதநிஸ—ஸநிதபமகஸ
26	,, சீதள	4	ஸரிகமபதநிதஸ—ஸதநிபமகரிஸ
27	,, ஸாரங்கநாட	8	ஸரிகமபமதநிஸ—ஸதபமகரிஸ
28	ஈசகிரி	69	ஸரிகமபதநி—தபமகரிஸநிஸ
29	ஈச கௌளை	7	ஸமகமபதநிஸ—ஸதபதமகரிஸ
30	,, மனோஹரி	28	ஸரிகமபநிபதநிஸ—ஸநிதபமரிமகரிஸ
31	உதயரவி சந்த்ரிகா	20	ஸகமபநிஸ—ஸநிபமகஸ
32	உத்தரி	64	ஸகமபதநிஸ—ஸநிதமகஸ
33	உமா பரணம்	28	ஸரிகமபதநீஸா—ஸநிபமரிகமரிஸநிஸா
34	ககன பூபாலம்	21	ஸமகமபதநிஸ—ஸநிதமகரிஸ
35	,, மோஹினி	64	ஸகபதநிஸ—ஸநிபமகஸ
36	,, ரஞ்ஜனி	66	ஸகமபஸ—ஸதநிபமகரிஸ
37	,, ஸாஸீருஹம்	53	ஸகரிகமபதநீ—தபமகரிஸநிஸ
38	கங்ணு லங்காரி	52	ஸகபதநிஸ—ஸநிதபமகரிஸ
39	கங்கா தரங்கிணி	33	ஸரிகமபஸா—ஸநிதபமகமரிஸ
40	கட்க ப்ரியா	1	ஸகரிகமபதபநிஸ—ஸதபதமகரிஸ
41	கணித விநோதினி	21	ஸகமபநிஸ—ஸநிதபமகரிஸ

நெ.	ராகப் பெயர்.	மேளம்.	ஆரோகண அவரோகணம்.
42	கண்டா	8	ஸரிகாமபநீஸ—ஸநிதப மகரிஸ
43	கண்டாரவம்	2	ஸரிஸகமபநிஸ—ஸநிதபமகரிஸ
44	கண்டாணம்	57	ஸரிகமதநிஸா—ஸநிதமகரிஸா
45	கதன குதூஹலம்	29	ஸரிமதநிகபஸா—ஸநிதபமகரிஸ
46	கந்தர்வ கன்னடை	31	ஸரிகபதஸ—ஸநிதபமகமரிஸ
47	,, நாராயணி	24	ஸமபதநிஸ—ஸநிதநிபமஸ
48	,, மனோஹரி	26	ஸரிமபஸ—ஸநிதமகரிஸ
49	கந்தர்வம்	42	மபதநிஸரிக—ரிஸநிபமப
50	கமகக்ரியா	53	ஸரிமபதநிஸ—ஸநிதபமகமரீஸ
51	,, ஸாமந்தம்	45	ஸகமபநிஸ—ஸநிதபமகரிஸ
52	கமல நாராயணி	55	ஸரிமபதநிஸ—ஸநிதபமகமரிஸ
53	,, தரங்கிணி	20	ஸரிகமபதநிஸ—ஸநிதபமரிஸ
54	கமலா பரணம்	45	ஸரிகமபநிதஸ—ஸநிதபநிதமகரிஸ
55	,, மனோஹரி	27	ஸகமபநிஸா—ஸநிதபமகஸா
56	கமனக்ரிய	53	ஸரிமபதநிஸ—ஸநிதபமகமரிஸ
57	கமனச்ரம	53	வது மேளகர்த்தாராகம்—ஸம்பூர்ணம்
58	கமாஸ்	28	ஸகமபகாமபதநிஸ—ஸநிதபமகரிஸ
59	கம்பீர நாட்டை	36	ஸரிகமபதநிஸ—ஸநிதபமரிஸ
60	கபீரணி	23	ஸரிகமபதநிதஸ—ஸநிதபமகரிஸ

61	காஹரப் ரியா	22	இருபத்திரண்டாவது மேளகர்த்தா—ஸம்பூர்ணம்
62	கருடத்வனி	29	ஸரிகமபதநிஸ—ஸதபகரிஸா
63	கருணாகரி	63	ஸமபதநிதஸ—ஸநிதபமஸ
64	கர்ணாடக ஆந்தாளி	14	ஸகரிமபதநிஸ—ஸதபமகரிஸ்
65	,, கானடா	22	ஸரிகாமதநிஸ—ஸநிபாநிதபமகமரிஸ்
66	,, தரங்கிணீ	61	ஸரிகமபநிஸ—ஸபாமகரிஸ
67	,, தேவகாந்தாரி	21	நிஸகமபா—தபமகரிஸநீ
68	,, ப்பாகு	28	ஸரிகமபதநிஸ—ஸநிதநிபதமாகரிகஸா
69	,, ஸாரடி	4	ஸரிகமபதஸ—ஸநிதபமரிஸ
70	கலகண்டி	13	ஸரிமபதநிஸ்—ஸநிதபமரிஸ
71	கலவஸந்தம்	43	ஸகமபதநிஸ—ஸநிபமகஸ
72	கலஹம்ஸ	31	ஸரீமதநிதஸா—ஸநீதபமரீஸ
73	கலாபரணி	52	ஸகரிகமபநிதநி—தபமகரிஸநிஸ
74	கல்கடOrகல்தட	13	ஸரிகபதநிஸ—ஸநிதபகரிஸ
75	கல்யாண கேஸரி	13	ஸரிகபதஸ—ஸதபமகரிஸ
76	,, வஸந்தம்	21	ஸகமதநிஸ—ஸநிதமபமகரிஸ
77	கல்லோல பங்காளா	31	ஸரிமபநிதஸ—ஸநிபதமகரிஸ
78	கல்லோலம்	18	ஸபமதநிஸ—ஸநிதநிபமகஸ
79	கல்லோல ஸாவேரி	25	ஸரிமபதஸ—ஸநிதபமகரிஸ
80	கல்ஹார்	22	ஸரிமகமபதபஸ—ஸதபமரிஸ
81	கவாம் போதி	43	நாற்பத்துமூன்றுவதுமேளகர்த்தா—ஸம்பூர்ணம்
82	களாநிதி	22	ஸரிகமஸ, ாமதநிஸ—ஸநிதபமகரிஸ

நெ.	ராகப் பெயர்.	மேளம்.	ஆரோகண அவரோகணம்.
83	க(லா)ளாவதி	16	ஸரிமபதஸ—ஸதபமகஸரிஸ
84	களா ஸாவேரி	8	ஸரிகமபதநிஸ—ஸநிதபமகரிஸ
85	களா ஸ்வரூபி	22	ஸரிகாமபதநிபஸ—ஸநிபமகாரிஸ
86	கனககிரி	66	ஸரிகமபஸநிஸ—ஸநிதநிபமகஸ
87	,, குஸுமாவளி	61	ஸரிகமபதஸ—ஸதபமகரிஸ
88	,, கீர்வாணி	67	ஸரிமபமதநிஸ—ஸதபமரிஸ
89	,, ஜ்யோதிஷ்மதி	72	ஸமபதநிஸ—ஸநிதபமஸ
90	கனக தீபரம்	45	ஸகமபதபஸ—தபமகரிஸநிஸ
91	,, நாஸாமணி	62	ஸரிகரிமபதநிஸா—ஸநிதபமகரிஸ
92	,, கிர்மிதி	67	ஸரிகமபமதஸ—ஸநிதபமகரிஸ
93	,, பவானி	66	ஸமகமபதநிஸ—ஸநிபமரிஸ
94	,, பூஷாவளி	58	ஸகமபதநிஸ—ஸநிபமகரிஸ
95	,, ரஸாளி	51	ஸரிகமதநிஸ—ஸதாபமகரிஸ
96	,, வஸந்தம்	20	ஸகமபநிதஸ—ஸநிதபமகரிஸ
97	,, ஸ்ரீகண்டி	60	ஸரிகமபஸ—ஸநிதநிபமரிஸ
98	,, ஸிம்ஹாரவம்	61	ஸகமபநிஸ—ஸநிதபமரிஸ
99	கன காங்கி	1	முதலாவது மேளகர்த்தா—ஸம்பூர்ணம்
100	கன காம்பரி	1	ஸரிகமபதநிதஸா—ஸநிதபமகரிகரிஸ
101	கன நாயகி	63	ஸகமநிதபதநிஸ—ஸநிதபமகரிஸ

102	கனச்யாமலா	5	ஸகமபதஸ—ஸநிதபமகரிஸ
103	கனஸிந்து	15	ஸமகமபதநிதஸ—ஸநிதபமகரிஸ
104	கன்டை	29	ஸநிஸகமபமதநிஸா—ஸநிஸதபமபகமரிஸ
105	,, குரஞ்ஜீ	49	ஸகரிகமபதநிஸ—ஸதபமரிஸ
106	,, கௌளை	22	ஸரிகமபநிஸ—ஸநிதபமகஸ
107	,, தர்பார்	33	ஸரிகமபதபஸ—ஸநிதபமரிஸ
108	,, தீபரம்	44	ஸரிகமதநிஸ—ஸநிதபதமகரிஸ
109	,, தேச்யம்	20	ஸகமபதஸ—ஸநிதமகஸ
110	,, பஞ்சமம்	26	ஸரிகமபநிஸ—ஸநிதநிபமகஸ
111	,, பங்காளா	15	ஸரிமகமதபதஸ—ஸதபமகரிஸ
112	,, போகி	50	ஸரிகமபநிதநிஸ—ஸநிதமகரிகஸ
113	,, மாருவ	53	ஸகமபதநிஸ—ஸநிதபமகஸ
114	,, வேளாவளி	48	பநிஸரிகமபா—பமகரிஸநிதநிபா
115	,, ஸௌராஷ்ட்ரம்	10	ஸரிமகமதபதநிஸ—ஸநிதபமகஸ
116	காங்கேப பூஷணி	33	முப்பத்தி மூன்றுவது மேளகர்த்தா—ஸம்பூர்ணம்
117	காநடா	22	ஸரிகாமபமதாநிஸ—ஸநிபதநிதபமகாமரிஸ
118	காகக ப்ரியா	63	ஸரிகமபமதநிஸ—ஸதநிபமகரிஸ
119	காந்தாமணி	61	வது மேளகர்த்தாராகம்—ஸம்பூர்ணம்
120	காபி	22	ஸரிகாமரிபமபதநிஸ—ஸநிதபமகரிஸ
121	காபி நாராயணி	28	ஸரிமபதநிஸா—ஸநிதபமரிகாரிஸ
122	காம ரூபி	52	ஸகமபமதநிபஸ—ஸநிதபமகரிஸ
123	,, வர்த்தனி	51	வது மேளகர்த்தா ராகம்—ஸம்பூர்ணம்

நெ.	ராகப் பெயர்.	மேளம்	ஆரோகண அவரோகணம்.
124	காம்பீர்ய கோஷிணி	52	ஸகரிபமதநிஸ—ஸநிதபமகரிகஸ
125	காம்போதி	28	ஸரிகமபத(மகபத)ஸ—ஸநிதபமகரிஸ நிபாதாஸா
126	காயகப்ரியா	13	பதிமூன்றுவது மேளகர்த்தாராகம். ஸம்பூர்ணம்
127	காலஹிர்ணிகா	63	ஸகமபநிதஸ—ஸபமகரிஸ
128	காளிந்தீ	22	ஸமகாமபஸ—ஸநிதமகரிஸ
129	காளமூர்த்தி	3	மூன்றுவது மேளகர்த்தா ராகம்—ஸம்பூர்ணம்
130	கானவாரிதி	35	ஸபரிகமபதநிஸ...ஸதநிபமரிஸ
131	காசி ராமக்ரியா	51	ஸகரிகமபதநிஸ—ஸநிதபமகரிஸ
132	கிரணாவளி	21	ஸரிகமபதநிஸ—ஸதாபமகரிஸ
133	கிரணி	51	ஸரிகமபநிதநிஸ—ஸநிதமகரிஸ
134	கிரிகர்ணிகா	3	ஸரிமபதநிஸ—ஸநிதபமகரிஸ
135	கிரிகுந்தலி	72	ஸரிகமமகமபஸ—ஸநிதநிபமகஸ
136	கிலாவளி	22	ஸரிகாமபஸ—ஸநிபமகரிஸ
137	கீதநடனி	53	ஸரிமகமபதநிஸ—ஸநிதபமரிஸ
138	,, ப்ரியா	13	ஸரிகமபதநிஸ—ஸதபமகரிஸ
139	,, மூர்த்தி	3	ஸரிகமபதநிஸ—ஸநிதபமகஸ
140	கீரவாணி	21	இருபத்திஒன்றுவது மேளகர்த்தா—ஸம்பூர்ணம்
141	கீர்த்திப்ரியா	1	ஸரிபதஸ—ஸநிதபமகரிஸ
142	,, விஜயா	61	ஸரிகமபநிதஸ—ஸநிதபமகரிஸ

143	கீரவாணி	43	ஸரிகரிமகமதநிபநிதஸா—ஸநிதபமகரிஸ
144	குடும்பினி	64	ஸகமதபநிஸ—ஸநிபமகரிஸ
145	குண்டக்ரியா	15	ஸரிமபநிஸ—ஸநிபதபமகரிஸ
146	குதூஹலம்	29	ஸரிமாநிதஸா—ஸநிதபமகரிஸ
147	குந்தலம்	61	ஸரிகமபதநிதஸ—ஸநிதபமகரிஸ
148	குந்தல கண்டாணம்	70	ஸரிகமபமபஸ—ஸநிபமரிஸ
149	,, காம்போஜி	13	ஸகமபதநிதஸ—ஸநிதபமகஸ
150	,, கீர்வாணி	8	ஸரிகமபதநிஸ—ஸதமபமகரிஸ
151	,, குஸுமாவளி	6	ஸரிகமபமபஸ—ஸநிதநிபமகஸ
152	குந்தல தன்யாஸி	47	ஸரிகபமதநிஸ—ஸநித்நிபமகரிஸ
153	,, தீபரம்	48	ஸமபதநிஸ—ஸநிதநிபமகஸ
154	,, பவானி	67	ஸரிகமமபஸ—ஸநிதநிபமரிஸ
155	,, போகி	41	ஸரிகமதபநிஸ—ஸநிதநிமகரிஸ
156	,, ரஞ்ஜனி (a)	60	ஸமகமபதநிஸ—ஸநிபதநிபமகஸ
157	,, ரஞ்ஜனி (b)	68	ஸரிமபநிதநிஸ—ஸநிதபமகரிஸ
158	,, ராகம்	61	ஸரிகமபதநிஸ—ஸநிதபமகமரிஸ
159	,, வராளி	28	ஸமபதநிதஸ—ஸநிதபமாஸா
160	,, ஸ்ரீகண்டி	65	ஸகமதநிஸ—ஸநிபமகரிஸ
161	,, ஸிம்ஹராவம்	69	ஸரிமபமதநிஸ—ஸதபமரிஸ
162	,, ஸ்வராவளி	46	ஸகமபதநிஸ—ஸநிதநிபமகரிஸ
163	குமுதக்ரியா	51	ஸரிகமதஸா—ஸநிதமகமகரிஸ
164	,, ப்ரியா	22	ஸரிகமபஸ—ஸநிதநிபமகஸ

நெ.	ராகப் பெயர்.	மேளம்.	ஆரோகண அவரோகணம்.
165	குமுதா பரணம்	38	ஸரிகமபநிதஸ—ஸதநிபமகரிஸ
166	கும்பினி	41	ஸகரிகமபநிதநிஸ—ஸாநிபமகரிஸ
167	கும்மகாம்போஜி	15	ஸரிகபதநிதஸ—ஸநிதபமகரிஸ
168	குரஞ்ஜி	29	ஸநிஸரிகமபத—தபமகரிஸநிஸ
169	குருகம்ப	56	நிஸகமபதநி—தபமகரிஸநிஸ
170	,, ப்ரியா	64	ஸரிகமதநிஸ—ஸநிதமகரிஸ
171	குர்ஜரி	15	ஸரிகமபதநிஸ—ஸதநிபமகரிஸ
172	குலபவித்ரி	28	ஸகமதபநிஸ—ஸநிபமரீஸ
173	,, பூஷணி	21	ஸரிகமபநிஸ—ஸதபமகரிஸ
174	குவலயானந்தி	16	ஸரிகமநிதநிபநிஸ—ஸநிதமகஸ
175	குஸுமகல்லோலம்	32	ஸபமரிகமபஸ—ஸதபமகமரிஸ
175	,, சந்த்ரிகா	32	ஸரிமகமபதநிஸ—ஸதபமரிஸ
177	,, ஜ்யோதிஷ்மதி	69	ஸரிமகமபதநிஸ—ஸதநிதபமரிஸ
178	,, ப்ரியா	27	ஸரிகமபதநிஸ—ஸநிபமகாரிஸ
179	,, பவானி	68	ஸரிமபஸ—ஸநிதமபமரிஸ
180	,, போகி	50	ஸரிகமதநிஸ—ஸதநிதமகரிகஸா
181	,, ப்ரமரி	34	ஸரிகமபமதநிஸ—ஸநிதபமரிஸ
182	,, ஸாரங்கா	56	ஸரிமபதநிஸா—ஸநிதபமகரிஸ
183	குஸுமாங்கி	16	ஸரிகபதநிஸ—ஸநிதபமகரிஸ

184	குஸுமாவளி	71	ஸகமபதஸ—ஸநிதபமகமரிஸ
185	குஹப்ரியா	16	ஸரிகாமஸபமதநிஸ—ஸதநிபமகஸரிஸ
186	கேதக ப்ரியா	64	ஸகமபநிஸ—ஸநிதபமகரிஸ
187	கேதாரம்	29	ஸமகமபநிஸ—ஸநிபமகமபதபமகரிஸ
188	கேதார கௌளை	28	ஸரிமபநிஸ—ஸநிதபமகரிஸ
189	கேஸரி	25	ஸரிகமபமதபதஸ—ஸதநிதபமகரிஸ
190	கைகவசி	60	ஸரிகமபதநிஸ—ஸநிபமகரிஸ
191	கோகில கந்தர்வம்	31	ஸகமதஸ—ஸதபமகரிகஸ
192	„ கீர்வாணி	43	ஸரிகமபதஸ—ஸநிமகரிஸ
193	„ தீபகம்	23	ஸகமதநிஸ—ஸநிதமகரிஸ
194	„ தீபரம்	43	ஸரிகமநிதஸ—ஸநிசமகரிஸ
195	„ த்வநி	28	ஸரிகமதநிதஸ—ஸநிதநிபமகரிஸ
196	„ பஞ்சமம்	39	பதநிஸரிகரி—ஸநிதபதநிஸ
197	„ ப்ரதாபம்	26	ஸகமபமதநிஸ—ஸநிபமகஸ
198	„ ப்ரியா	11	பதினொன்றாவது மேளகர்த்தா—ஸம்பூர்ணம்
199	„ பாஷிணி	29	ஸரிகமபதநிஸ—ஸநிபமகமரிஸ
200.	„ வராளி	20	ஸரிகரிமபதநிதஸ—ஸதநிதபமரிகரிஸ
201	„ ஸ்வராவளி	41	ஸரிகமதநிஸ—ஸதமகரிஸ
202	கோகிலா னந்தி	56	ஸகமதநிஸ—ஸநிதபமகஸ
203	கோகிலா ரவம்	11	ஸரிகரிமபதநிஸ—ஸநிதபமகரிஸ
204	கோத்ராரி	63	ஸரிமபதஸ—ஸநிதபமகரிஸ
205	கோபதி	42	ஸரிகமபதஸ—பமரிகரிஸ

நெ.	ராகப் பெயர்.	மேளம்	ஆரோகண அவரோகணம்
206	கோபிகா வஸந்தம்	20	ஸமபநிதநிதஸ—ஸநிதபமகஸ
207	கோமலி	63	ஸரிமபநிதமபஸ—ஸதநிமகரிஸ
208	கோலாஹலம்	29	ஸபமகமபதநிஸ—ஸநிதபமகரிஸ
209	கோஸலம்	71	வது மேளகர்த்தாராகம்—ஸம்பூரணம்
210	கோஷிணி	16	ஸமகமபதநிதஸ—ஸநிதபமகமரிஸ
211	கௌடமல்லாரு	29	ஸரிமபதஸ—ஸநிதமகரிஸ
212	கௌமாரி	11	ஸரிகமபதஸ—ஸநிதபமகரிஸ
213	கௌமோதம்	65	ஸரிகமநிஸ—ஸநிமாகாரிஸ
214	கௌரீ	15	ஸரிமபஸநிஸ—மாதபமகரிஸ
215	கௌரீக்ரியா	60	ஸகபதநிஸ—ஸநிதநிபமகஸ
216	,, காந்தாரி	2	ஸமரிகமபதநிதஸ—ஸநிதபமகரிஸ
217	,, நிஷாதம்	71	ஸகமபநிதஸ—ஸநிதநிபமகஸ
218	,, பங்காளம்	9	தஸரிமபதநீ—தபமகரிஸநிதப
219	,, மனோஹரி	23	23-வது மேளகர்த்தாராகம்—ஸம்பூர்ணம்
220	,, மாருவ	50	ஸரிமபதஸ—ஸநிதபமகரிகஸ
221	,, வேளாவளி	23	ஸரிகபரியபதஸ—ஸநிதபமகரிஸ
222	,, ஸீமந்தி	70	ஸரிகமபதநிஸ—ஸநிபமகஸ
223	கௌளை	15	ஸரிகமரிமபநிஸ—ஸநிபமகமரிஸ
224	கௌளசந்த்ரிகா	7	ஸரிமபதஸ—ஸநிதபகரிஸ

225	,, பஞ்சமம்	24	ஸரிமபநிஸ—ஸநிபமகரிஸ
226	,, மாளவி	6	ஸரிகமபதநிபநிஸ—ஸபதநிபமகரிஸ
227	கௌளீபந்து	15	ஸரிமபநிஸ—ஸநிதபமபதமாகரிஸ
228	கௌஸ்துபப்ரியா	71	ஸரிகமபதநிஸ—ஸதபமகமரிஸ
229	சக்ரவாகம்	16	பதினாறுவது மேளகர்த்தாராகம்—ஸம்பூர்ணம்
230	சதுரங்கிணி	66	ஸமகமபநிஸ—ஸநிதநிபகமகரிஸ
231	சத்ரதரி	63	ஸகமபமரிபஸ—ஸநிதபமகரிஸ
232	சந்த்ரகாந்தம்	65	ஸரிகமபதநிஸ—ஸநிதபமகரிஸ
233	,, கிரணி	16	ஸகமபமதநிஸ—ஸநிதநிபமகமரிஸ
234	,, சூடப்ரியா	18	ஸகமபநிதநிஸ—ஸநிபமரிஸ
235	,, ஜ்யோதி	41	ஸரிகமபதஸா—ஸதபமகரிஸா
236	சந்த்ரிகாகௌளை	8	ஸரிகமபதஸ—ஸதபமரிஸ
237	சலநாட்டை	36	முப்பத்தாறுவது மேளகர்த்தா—ஸம்பூர்ணம்
238	சாபகண்டாரவம்	20	ஸதமபநீ—தமகரிஸநிஸா
239	சாமரம்	55	ஸாரிகமபதநிஸ—ஸாநிதபமகரிஸ
240	சாமுண்டி	63	ஸகரிமபநிதஸ—ஸதநிபமகரிஸ
241	சாருகேசி	26	இருபத்தி ஆறாவது மேளகர்த்தா—ஸம்பூர்ணம்
242	சாயா கண்டாரவம்		
243	,, கௌரீ	7	ஸரிமகமபநிதநிஸ—ஸநிதபமகமரிஸ
244	,, கௌளை	3	ஸரிகரிமபதநிஸ—ஸதநிபமகரிஸ
245	,, தரங்கிணி	28	ஸரிமகமபநிஸா—ஸநிதபமகரிஸ
246	,, நாட்டை	35	ஸரிகமபஸ—ஸநிதநிபமரிஸ

நெ.	ராகப் பெயர்.	மேளம்.	ஆரோகண அவரோகணம்.
247	சாயா நாராயணி	6	ஸபமபதநிஸ—ஸநிதநிபமகரிஸ
248	,, பௌளி	8	ஸரிகாமஸபமதநிஸ—ஸநிபதமாகரிஸ
249	,, மாருவ	49	ஸகரிகமதநிதஸ—ஸநிதமகரிஸ
250	,, மாளவி	7	ஸகரிகமபதநிதஸ—ஸநிதபமகமரிஸ
251	,, ஸிந்து	19	ஸரிமபதஸ—ஸதபமகரிஸ
252	,, ஸைந்தவி	11	ஸரிகமபதபநிஸ—ஸதநிபமகரிஸ
253	சிதானந்தி	36	ஸரிகமபதநிஸ—ஸநிதநிபமகமரிஸ
254	சித்தரஞ்ஜனி	19	ஸரிகரிகமபத—நிதபமரிகரிஸ
255	சித்ராம்பரி	66	வதுமேளகர்த்தாராகம்—ஸம்பூர்ணம்
256	சித்ஸ்வரூபி	26	ஸரிகமபதநிஸ—ஸநிதபமகமரிஸ
257	சிந்தாமணி	6	ஸரிகமஸமபதநிஸ—ஸதநிபமகரிஸ
258	சிந்மய	16	ஸரிகாமபமதநிஸ—ஸநிதநிபமகாரிஸ
259	சூர்ணிகாவிநோதினி	66	ஸரிகமபதநிஸ—ஸநிதநிபமகரிஸ
260	ஜகன்மோஹினி	15	ஸகமபநிஸ—ஸநிபமகாரிஸ
261	ஜகன்மோஹனம்	38	ஸரிமாபதஸநிஸா—ஸநிதபமாகரிஸ
262	ஜங்காரத்வனி	19	பத்தொன்பதாவதுமேளகர்த்தா—ஸம்பூர்ணம்
263	ஜங்காரப்ரமரி	19	ஸரிகமபதநிதஸ—ஸநிதபமகரிஸ
264	ஜங்காரி	19	ஸரிகமபதஸ—ஸதபமகரிஸ
265	ஜஞ்ஜூடி	28	தஸரிகமபதநி—தபமகரிஸநிதபநிதநிபதஸா

266	ஜடாதரி	52	ஸகரிமபதநிஸ—ஸநிதபகரிஸ
267	ஜஞ்ஜகாரி	63	ஸரிகமபநிதஸ—ஸதபமரிகரிஸ
268	ஜநரஞ்ஜனி	29	ஸரிகமபதபநிஸ—ஸதபமரீஸ
269	ஜநாகர்ஷணி	16	ஸரிகபமதநிஸ—ஸநிதபமகதமகரிஸ
270	ஜயந்தஸ்ரீ	20	ஸகமதநிஸ—ஸநிதமபமகஸ
271	ஜயந்தஸேனை	22	ஸகமபதஸ—ஸநிதபமகஸ
272	ஜயமனோஹரி	22	ஸரிகமதஸ—ஸநிதமகரிஸ
273	ஜயநாராயணி	22	ஸரிகாமபதஸா—ஸநிதபமகரிஸ
274	ஜயவேளாவளி	43	ஸரிகமதபதநிஸ—ஸநிதமகரிஸ
275	ஜயசுத்தமாளவி	18	ஸரிகமபநிஸ—ஸநிதநிபமகரிஸ
276	ஜயஸ்ரீ	21	ஸரிகமபதநிதஸ—ஸநிதபமகரிஸ
277	ஜயஸாவேரி	5	ஸமரிகமபதநீ—தபமகரிஸநிஸ
278	,, ஸிந்து	2	ஸரிகமபஸ—ஸபநிதமகரிஸ
279	ஜயாபரணி	27	ஸகமபமரிகமபஸ—ஸநிதாபமரிஸ
280	ஜலஜவாஸிநி	27	ஸகமபநிஸ—ஸநிதபமரிஸ
281	ஜலார்ணவம்	38	முப்பத்தெட்டாவதுமேளகர்த்தா—ஸம்பூர்ணம்
282	ஜாலவராளி	39	முப்பத்தொன்பதாவதுமேளகர்த்தா—ஸம்பூர்ணம்
283	ஜிங்கலா	20	ஸரிகமபதநிதபஸ—ஸநிதபமகரிஸ
284	,, பைரவி	32	ஸகமபமதஸ—ஸநிதபமகமரிஸ
285	ஜீவந்தினி	48	ஸமாபதாநிஸ—ஸநிபமகஸ
286	ஜீவாஞ்ஜனி	2	ஸரிகமபதநிஸ—ஸதபமகரிஸ
287	ஜீவரத்னபூஷணி	38	ஸரிகமபதநிதஸ—ஸநிதபமகரிஸ

நெ.	ராகப் பெயர்.	மேளம்.	ஆரோகண அவரோகணம்.
288	ஜ்ஞாநாவளி	39	ஸகரிகமபதநிதஸ—ஸநிதபமகரிஸ
289	ஜ்ஞாலாவ்	29	பநிஸரிகமப—பமகரிஸநிபா
290	ஜ்ஞெஜாவளி	13	ஸமகமபதநிஸ—ஸதநிதபமகஸ
291	ஜௌட காந்தாரி	68	ஸரிகமபதஸ—ஸநிதபமகரிஸ
292	ஜ்யோதிஷ்மதி	68	ஸரிகமபஸ—ஸநிதமபமரிகஸ
293	ஜ்யோதிஸ்வரூபிணி	68	வது மேளகர்த்தாராகம்—ஸம்பூர்ணம்
294	டக்க	9	ஸகமபமதநிஸ—ஸநிதபமகரிஸ
295	தனுகீர்த்தி	6	ஸரிமபநிஸ—ஸநிதநிபமகரிஸ
296	தன்யாஸி	8	ஸகமபநிஸ—ஸநிதபமகரிஸ
297	தபஸ்விநி	52	ஸகமபநிஸ—ஸநிதபமகஸ
298	தபோல்லாஸினி	1	ஸமரிகமபதநிஸ—ஸதபகரிஸ
299	தரங்கிணீ	26	ஸரிமகரிமபதநிதஸ—ஸநிதபமகரிஸ
300	தருணீ ப்ரியா	64	ஸகரிகமபநிதஸ—ஸநிபமரிஸ
301	தர்பார்	22	ஸரிமபதநீஸ—ஸநீதபமககரிஸ
302	தர்மவதி	59	வது மேளகர்த்தாராகம்—ஸம்பூர்ணம்
303	தர்மிணி	49	ஸரிகமதநிஸ—ஸநிதமகரிஸ
304	தவளஸரஸீருஹம்	44	ஸரிகமதநிஸ—ஸநிதமகரிஸ
305	தவளஹம்ஸி	57	ஸரிமாபதஸா—ஸநிதபமகரிஸ
306	தவளாங்கி	49	ஸமகமபதநிதஸ—ஸநிதபமகரிஸ

307	தவளாம்பரி	49	வது மேளகர்த்தாராகம்—ஸம்பூர்ணம்
308	தனபாலினி	16	ஸரிகமபமபஸ—ஸநிதபமதமகரிஸ
309	தாது ப்ரியா	63	ஸரிபமபதஸ—ஸநிதபமகமரிஸ
310	தாது மனோஹரி	22	ஸபமபதநிஸ—ஸநிபமகரிஸ
311	தாது வர்த்தனி	69	வது மேளகர்த்தாராகம்—ஸம்பூர்ணம்
312	தான ரஞ்ஜனி	63	ஸரிகமபதபஸ—ஸதபஸநிஸதபமகரிஸ
313	தானரூபி	6	ஆறாவது மேளகர்த்தா—ஸம்பூர்ணம்
314	திலகப்ரகாசினி	6	ஸரிகமபதநிஸ—ஸநிதபமகரிகமரிஸ
315	திலீபகம்	22	ஸரிகமபநீதபதநிஸா—ஸநிதபமகரிஸ
316	திவ்யகாந்தாரி	20	ஸகமபதநிஸ—ஸநிபமகஸ
317	,, தரங்கிணி	17	ஸரிகமபஸ—ஸநிதபமகரிஸ
318	,, பஞ்சமம்	27	ஸரிகமபதநிஸ—ஸநிதபமகரிஸ
319	திவ்யமணி	48	நாற்பத்தெட்டாவது மேளகர்த்தா—ஸம்பூர்ணம்
320	திவ்யாம்பரி	27	ஸபமபதநிஸ—ஸபநிதமகரிஸ
321	தினகரகாந்தி	27	ஸமகமபஸ—ஸநிதபமகஸ
322	தீபகம்	51	ஸகமபதபஸ—ஸநிதநிபமகரிஸ
323	தீபரம்	10	ஸரிகமபதநிஸ—ஸநிதநிபமகரிஸ
324	தீரகுந்தலி	59	ஸமபதநிஸ—ஸநிதபமகரிஸ
325	,, மதி	29	ஸகரிகமபமநிதஸ—ஸநிபதஸபமகரிஸ
326	தீரசங்கராபரணம்	29	இருபத்தொன்பதாவது மேளகர்த்தா—ஸம்பூர்ணம்
327	,, ஸாவேரி	69	ஸரிகமபதநிஸ—ஸதபமகரிஸ
328	,, ஸ்வரூபி	49	ஸரிகமபதநிஸ—ஸதநிதபமகஸ

எ.	ராகப் பெயர்.	மேளம்.	ஆரோகண அவரோகணம்.
329	தீராகாரி	59	ஸரிகமபதநிஸ—ஸதநிபமகரிஸ
330	தீவ்ரவாஹினி	46	ஸரிகமபதபநிஸ—ஸநிதபமகரிகமரிஸ
331	துந்துபிப்ரியா	48	ஸரிகமபதநிஸ—ஸநிபமகரிஸ
332	தூர்வாங்கி	29	ஸரிமபதஸ—ஸநிபதபமகரிஸ
333	தேவ குஸுமாவளி	60	ஸமகமபஸ—ஸநிபமகரிஸ
334	,, க்ரியா	20	ஸரிகமநிதநீ—பதமகரிஸநீ (or) ஸநிதமகரிஸ *
335	,, காந்தாரி	29	ஸரிகரிமாபதநிஸா—ஸநிதாபமகரீஸா
336	,, கிரி	49	ஸரிமாபதநிஸ—ஸநிதபமகரிகஸ
337	,, கீர்வாணி	66	ஸகரிமபஸ—ஸபமகரிஸ
338	,, மனோஹரி	22	ஸரிமபதநிஸ—ஸநிதநிபமரிஸ
339	,, மாளவி	56	ஸரிகமபதநீ—நிதபமகரிஸநீ
340	,, முகாரி	13	ஸரிமபதநிஸ—ஸநிதபமரிஸ
341	,, ரஞ்ஜநி	22	ஸகரிமபதநிஸ—ஸதபமகாரிஸ
342	,, ஸாளகம்	25	ஸகபதநிஸ—ஸபநிதபமகரிஸ
343	தேவாபரணம்	49	ஸகரிகமதநிஸ—ஸநிதநிபமகரிஸ
344	தேவாம்ருதவர்ஷணி	22	ஸகரிகமநிதநிஸா—ஸநிதபமகரிஸ
345	,, வாஹினி	64	ஸகமபநிதநிஸ—ஸநிதநிபமகரிஸ
346	தேசமுகாரி	25	ஸரிகமபதநிதஸ—ஸதநிதபமகரிஸ
347	தேசாவளி	55	ஸரிகமதநிதஸ—ஸநிதமகரிஸ

348	தேசாக்ஷி	28	ஸரிகபதஸ—ஸநிதபமகமரிஸ
349	தேசிகாபங்காளா	8	ஸரிகபமதநிஸ—ஸதபமகரிஸ
350	தேசிகாருத்ரி	9	ஸமரிகமபநிஸ—ஸநிபதமகரிஸ
351	தேசிய ஆந்தாளி	9	ஸரிகமபநிதஸ—ஸதபமகரிஸ
352	,, காநடா	60	ஸரிகமபதநிபஸ்—ஸநிஸபதமபகரிஸ
353	,, கானவாரிதி	60	ஸரிகமபதநிபஸ—ஸநிஸபமகரிஸ
354	,, கௌரீ	5	ஸரிகமதபநிஸ—ஸதநிபமகரிஸ
355	,, கௌளை	15	ஸரிஸபதநிஸ—ஸநிதபஸரிஸ
